
# தொடுகோடுகள்

ரமணிசந்திரன்



# தொடுகோடுகள்



1

"அம்மாவின் வார்த்தைதான் முடிவானது," என்றாள் சக்தி அமைதியாக.

"ஆனால் வாழ்க்கை உன்னுடையது ஆயிற்றே!" என்றான் அவன் விடாமல்.

"என்னை விடவும் என்னுடைய நலம்பற்றி அம்மாவுக்கு நன்றாகத் தெரியும்," என்றாள் அவள் சலனமே இல்லாமல்.

அவன் கண்ணிமைகள் இடுங்கின. "இன்றுவரை என் விருப்பம்தான் என் காரியங்களில் முடிவாக இருந்திருக்கிறது," என்றான் ஓர் அழுத்தத்துடன்.

கண்களை அகல விரித்து வியப்புடன் அவனைப் பார்த்தாள் சக்தி.

ஒரு குறுஞ்சிரிப்பு மின்னலிட்டு மறைய, "நான் என் விஷயத்தைப் பற்றிச் சொன்னேன்," என்று கூறிவிட்டு நிதானமாக எழுந்தாள். "வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்," என்று கதவை நோக்கித் திரும்பினாள்.

''ஒன்றே ஒன்று இருக்கிறது,'' என்று நிறுத்தினான் அவன்.

அவள் நின்றாளே தவிர, திரும்பி அவனைப் பார்க்க வில்லை.

''இன்றுவரையில் நான் நாடிய எதுவும் எனக்குக் கிட்டாமல் போனது இல்லை. போகவிட்டதும் இல்லை, நினைவில் வை,'' என்றான் மிகவும் தாழ்ந்த குரலில், ஆனால் தெளிவாக.

ஒரு கணம் சக்தியினுள் ஒரு சில்லிப்பு ஊடுருவியது.

மறுகணமே அது மறைந்தும் போயிற்று.

இந்த அசட்டுப் பேச்சுக்குப் பிரதிபலிப்பு வேறா?

அலட்சியமாகத் தலையை நிமிர்த்தியபடி மேலே பேசாமல் வெளியேறி விட்டாள் அவள்.

தன் இடத்தில் சென்று அமர்ந்த சக்திக்கு மேலே வேலை ஓட வில்லை.

இவன் அம்மாவிடமே கேட்டானாமே?

அம்மா மறுத்தே விட்டார்களாமே!

ஆனால் சக்தியிடம் ஒன்றுமே - ஒரு பேச்சுக்கூடச் சொல்ல வில்லையே ஜாடையாகக்கூட....

''இந்தாங்கம்மா இதுங்க ரெண்டையும் ஒத்துப் பார்க்கணு மாம். அப்புறமா ஒரு ''ஸ்டேட்மென்ட்'' தயார் பண்ணிக் கொடுக்கணுமாம்,'' என்று பைல்களை அவளது மேசை மேல் வைத்தான் ஆபீஸ் பையன்.

மனதில் குழப்பங்களைச் சுத்தமாக மூடி வைத்துவிட்டு முழு மையாக வேலையில் மூழ்கினாள் சக்தி.

இடையில் எம்.டி.யின் அறை கதவு திறந்ததையோ, அங்கி ருந்து வெளிவந்த அவன் ஒரு தரம் அவளை வெறித்துப்

பார்த்ததையோ, அவளது மேசை அருகாகவே நடந்து வெளிப் போனதையோ அவள் அறியாள்.

ஸ்டேட்மென்டை முடித்து டிரேயில் வைத்தாள். கை விரல் களை ஒரு தரம் லேசாக நொடித்துவிட்டு மேசையை ஒதுக்கி னாள்.

மணிக்கட்டில் இருந்த தங்கநிறக் கடிகாரம் மணி ஐந்து என்று காட்டவும், எழுந்து தலைமைக் குமாஸ்தாவிடம் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

வேலை முடிந்து அலுவலகத்தை விட்டு வெளியேறவும், பழையபடி மனதில் எண்ணங்கள் அலை மோதலாயின.

ஒரு வேளை அம்மா மறந்திருக்கக் கூடுமோ?

அப்படி மறக்கும் விஷயம் இல்லையே.

ஒரு வேளை எப்போதேனும் சொல்ல முயன்று ஏதேனும் தடை ஏற்பட்டுச் சொல்லாதிருந்துவிட்டார்களோ! தோளில் பையுடன் பஸ் நிறுத்தத்தை நோக்கி நடக்கும்போதே மனத்தி ரையில் காலை நிகழ்ச்சிகள் திரைப்படமாய் ஓடின.

★ ★ ★

**வ**ழக்கம் போலவே கண்ணைத் திறவாமலே மூன்று தரம் ''முருகா சரணம்'' சொல்லிவிட்டு எழுந்தாள்.

அன்னையிடம் புன்னகை காட்டிவிட்டி பேஸ்ட் பிரஷ் சகி தம் தோட்டத்தை வலம் வந்தாள்.

நல்ல பெரிய தோட்டம் அது. சின்னதான ஒரு வீடு தவிர மிச்சம் நாலரை மனையளவு நிலத்திலுமாகத் தாயார் சீதையின் இரத்தத்தை எல்லாம் வியர்வையாக்கி வளர்த்த தோட்டம்.

காபி அருந்திவிட்டு... காபியைத் தருகையில் தாயின் கவனம் எலுமிச்சம்பழச் சாதத்தில் இருந்தது. அப்போது ஏதும் சொல்ல முயற்சிகூடப் பண்ணவில்லை!

மோட்டாரைப் போட்டுத் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சியபடி காய்களைப் பறித்தாள்.

பறித்த காய்களின் கணக்கைத் தாயிடம் சக்தி சொன்னபோதுகூட அந்த சின்ன நோட்டில் கணக்கை எழுதியதோடு சரி.

வேறு பேச்சுக்கு முயலவில்லை.

அப்பறம் கூடைக்காரி கன்னியம்மா வந்தாள்.

அவளை நினைக்கையில் இப்போதும் சக்திக்குச் சிறு சினம் துளிர்விட்டது.

''பத்துப் பைசாகூட லாபம் இராதும்மா!'' என்று கூறி முருங்கைக்காயைப் பதினைந்து காசு வீதம் வாங்கிச் செல்லும் கன்னியம்மா அதை ஐம்பது காசு வீதம் விற்பதைக் கண்டு கொண்டு விட்டாள் சக்தி.

அவ்வளவு நீளமாகவும் சதைப்பற்றாகவும் இருந்த ஜாதி முருங்கைக் காய்களை அதற்கு மேலும் விலை கொடுத்து வாங்கத் தயாராக இருப்பதையும், மறுநாள் நிச்சயம் கொண்டு வருமாறு வாடிக்கைக்காரர்கள் முன் பணம் கொடுத்து அனுப்புவதையும் கண்கூடாகக் காணவும் சினம் மிஞ்சி விட்டது அவளுக்கு.

''உனக்குப் பத்து காசுதானே லாபம்! ஒரு காய் நாற்பது காசு என்றால் எடு. இல்லாவிட்டால் முற்றிக் காயட்டும்!'' என்று காய்க்காரியிடம் மல்லுக்கட்டி நின்றாள்.

''போகிறது போ!'' என்ற தாய்க்கும் இடம் தராமல், ஒரே நிலையில் அவள் நிற்கவும், கடைசியில் கன்னியம்மா,

''விக்காட்டி பொருள் முழுக்க நட்டந்தானேம்மா. சின்னப் புள்ளை. புரியாமப் பேசுது!'' என்று முனகியபடி சக்தி சொன்ன விலைக்கே வாங்கிச் சென்றாள்.

காய்க்காரியை ஜெயித்துவிட்ட போதும் அதிலேயே நேரம் ஆகிவிட அவசர அவசரமாக அலுவலகத்துக்குக் கிளம்பியதும் சக்திக்கு நினைவு வந்தது.

''சற்றே நீக்குப் போக்காக நடந்து கொள்ளப் பழக வேண்டும் தங்கம்!'' என்று வழியனுப்பி வைத்தது தவிர அவள் வெளியேறும்வரை சீதை வேறு ஏதும் சொல்லவில்லை.

முன்தினம் கூட சினேகிதி வீட்டு விசேஷத்துக்குப் போய் விட்டு, வீடு சென்று, சாப்பிட்டு... ஊகூம். ஒரு வினாடி கூட எதைச் சொல்லவும் தாயார் முயற்சித்த நினைவு சக்திக்கு வரவில்லை.

நிச்சயமாக முயற்சிக்கவில்லை.

பூடகமாகவும் பேசியிருக்கவில்லை.

அதனாலேயே அன்று மதியம் சின்ன பாஸ் அழைத்த போது, வழக்கம்போலவே எண்ணி நோட்டையும் இரண்டு பென்சில்களையும் எடுத்துக்கொண்டு எம்.டி.யின் அறைக்குள் சென்றாள் சக்தி.

எப்போதும் போலவே நகைமுகத்துடன், ''எஸ் சார்...'' என்றாள்.

''வேலை எதுவும் இல்லை சக்தி,'' என்று சரவணன் பதில் கூறவும் சக்தி திகைத்தாள்.

''தப்பு ஏதும் செய்திருந்தேனா சார்?'' என்று சிறு கவலையுடன் வினவினாள்.

''ச்சே, அதெல்லாம் இல்லை. வந்து...'' என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''இதோ, இவர் பெயர் சித்தார்த்தன்...'' என்று அவர் அறிமுகம் செய்வித்தபோதுதான் அவர் அருகே இருந்த குஷன் நாற்காலியில் பாவனையுடன் சாய்ந்திருந்த அவனைச் சக்தி முதல் முதலாகப் பார்த்தாள்.

அவள் பார்க்கவும் அவன் லேசாக முறுவலித்தான்.

அதற்குள் சரவணன் தொடரவும் சக்தியின் பார்வை அங்கே திரும்பியது. ''சித்தார்த்தன் பெரிய தொழில் அதிபர். நம் கம்பெனியில்கூட நிறையப் பங்கு இருக்கிறது. என்னுடைய நண்பனும்கூட உன்னை... உன்னிடம் ஏதோ பேச வேண்டுமாம். அதனால்தான் அழைத்தேன்... பேசுங்கள்,'' என்று கூறிக் கட்டாயமாக வரவழைத்தது போன்ற ஒரு முறுவலைக் காட்டிவிட்டு விரைந்து வெளியேறிச் சென்றுவிட்டார் முதலாளி.

அவர் பின்னே மூடிக்கொண்ட கதவை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு, அந்தப் புதியவனிடம் திரும்பினாள் சக்தி.

அவளை உட்காரச் சொன்னான் அவன்.

பின்னர் லேசாக முன்புறம் சாய்ந்து சொன்னான். ''இதோ பார் சக்தி, நான் சொல்லப் போகிற விஷயம் சாதாரணமானது அல்ல. முக்கியமானதும்கூட. அதனால் சட்டென்று எதுவும் சொல்லிவிடாமல் சற்று யோசித்தே பதில் கூறு,'' என்று தொடங்கியவன் ஒரு கணம் பேச்சை நிறுத்தி அவளைக் கூர்ந்து நோக்கினான்.

என்னவாக இருக்கும் என்று அவள் யோசித்தபோது அவன் மணம் புரியக் கோருவான் என்று எதிர்பார்க்கவே இல்லை.

அவன் திடீரென்று திருமணம் பற்றிப் பேசவும், அவளது வியப்பு மிகுதியாயிற்று.

அவளது முகத்தில் மனதை அறிந்தவன் போலச் சித்தார்த் தன் விளக்கம் கொடுத்தான். 'இது திடீர் முடிவு அல்ல சக்தி. போன மாதம் என் நண்பனுடைய சகோதரியை அழைத்துச் செல்ல அவனோடு உங்கள் கல்லூரிக்கு வந்திருந்தேன் - பழைய மாணவியர் சங்கக் கூட்டத்தின் போது. அன்று நீ அவளுடன் பேசிச் சிரிப்பதைப் பல நிமிடங்கள் பார்த்துக் கொண்டேயிருந் தேன். அன்றிலிருந்து நீ இங்கே இருக்கிறாய்!'' என்று தன் நெஞ் சைத் தொட்டுக் காட்டினான்.

சக்தி பதில் பேசாமல் அவனைக் கணக்கிட்டாள்.

சற்றே கருமைபடிந்த அழுத்தமான உதடுகள். நீளமான கண் கள், அடர்ந்த புருவங்கள், உறுதியான முகவாய் - தாடை - எங் கும் இளமையின் புதுமை தெரியவில்லை. அறியாமையின் ஆர்வமும் காணப்படவில்லை.

இவனுக்குக் கண்டதும் காதலா? அவளுக்கு நம்பிக்கை வர வில்லை.

''திடீர்க்காதல் தோன்றிய விரைவிலேயே மறைந்துவிடும் என்று அம்மா சொல்வார்கள்.''

ஒரு விநாடி அவன் கண்களில் கடுமை தெரிந்தது.

உடனேயே அதை அகற்றி, ''இது மறையக் கூடியது அல்ல என்பது உன்னை விடவும். உன் அன்னையை விடவும் எனக் குத்தான் நன்றாகத் தெரிய முடியும் சக்தி. ஒரு மாதமாக உன் னைப்பற்றி விசாரித்திருக்கிறேன். உன்னைக் கவனித்து வந்தி ருக்கிறேன். என் விருப்பம் வளர்ந்திருக்கிறதே தவிரக் குறைய வில்லை. அதனால்தான் திருமணம் என்ற முடிவுக்கும் வந் தேன்,'' என்றான் நிதானமாக.

அவன் மட்டிலுமே சம்பந்தப்பட்ட விஷயம் போல அவன் பேசிய முறையில் சக்திக்கு உள்ளூர எரிச்சல் உண்டாயிற்று.

ஆனால் முதலாளியின் நண்பனாயிற்றே. எனவே, அமைதியா கவே, ''இதுபற்றி நீங்கள் அம்மாவிடம்தான் பேசவேண்டும்,'' என்று முடித்து விட்டாள்.

அப்போதுதான் சக்திக்கும் தெரியவந்தது. தாயிடம் அவன் முன்பே கேட்டு வந்ததும், சீதை மறுத்துவிட்டதும்.

இது சக்திக்குப் புது சமாச்சாரம்.

தாயார் சொல்லாததைப் பற்றி அவளுக்கு உள்ளூர ஆச்சரி யம்தான்.

வெகுளித்தனம் என்றாலும் காரணம் இல்லாமல் அவளு டைய தாயார் எதையும் செய்தது இல்லை சிந்தித்து அவர் எடுத்த எந்த முடிவும் தவறாகப் போனதும் இல்லை.

எனவேதான் அன்னையின் முடிவுதான் இறுதியானது என் பதை அந்த சித்தார்த்தனிடம் உறுதியாகச் சொன்னாள்.

அதற்கு அவன் பதில் கூறியதை நினைக்கையில் அவளுக் குச் சிரிப்பும் சினமும் ஒருங்கே தோன்றின.

என்னமோ அவள் நாடிய ஒன்றாமே!

அப்படி அவள் என்ன உயிர் உணர்ச்சி ஒன்றும் இல்லாத ஜடப் பொருளா?

அவளுக்கென்று ஒரு மனம், அதிலே ஒரு விருப்பம் என்று இல்லையா?

இல்லையென்று நினைத்தால் சம்மதம் கேட்க வருவா னேன்?

கேலிக் கூத்துதான்.

இதை அம்மாவிடம் சொல்லிச் சிரிக்க வேண்டும் போல இருந்தது.

யோசனையில் மூழ்கி நடந்த அவள் அருகே ஒரு நீண்ட கறுப்புக் கார் பளபளப்புடன் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கி வந்தவன் அதே சித்தார்த்தனேதான்.

இந்தக் கார் அங்கங்கே கண்ணில் பட்டுப் பரிச்சயம் ஆனது போலத் தோன்றியது. கூடவே ஒரு மாதமாக அவளைக் கவனித்து வந்ததாக அவன் சொன்ன நினைவும் வந்தது. சரிதான் என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் அருகில் வந்து, ''சக்தி! நான் சொன்னதைப் பற்றி நன்கு யோசித்துப் பதில் சொல். என் விருப்பத்தை ஏற்பதில் எத்தனையோ வசதிகள், வளங்கள், எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து முடிவு செய். இப்போது காரில் ஏறிக்கொள். தாஜ் அல்லது சோழாவில் டிபன் சாப்பிட்டுவிட்டு உன்னை வீட்டில் கொண்டு போய் விடுகிறேன்,'' என்றான் சித்தார்த்தன்.

''வேண்டாம்,'' என்று ஒரே சொல்லில் முடித்துவிட்டுத் திரும்பிப் பாராமல் பஸ்ஸை நோக்கி நடந்தாள் சக்தி.

வசதிகளாமே! வளங்களாமே!

அவளுள் பெருஞ் சீற்றம் பிறந்தது.

இதென்ன வாழ்க்கையா, வியாபாரமா?

அன்னையிடம் கலந்து ஆலோசிக்காமலே சக்திக்கு முடிவு தெரிந்துவிட்டது.



2

மறுநாள் காலை வேளையிலேயே சித்தார்த்தன் வந்து விட்டான்.

முன்தினம் போலவே அழைத்து அவனுடன் தனியே பேச வசதி செய்துவிட்டுச் சென்ற சின்ன முதலாளி மீது ஆத்திரமாய் வந்தது சக்திக்கு.

ஆனால் முதலாளி ஆயிற்றே! காட்டிக் கொள்ள முடியாமல் பேசாமல் நின்றாள்.

''நன்றி சரவணன்!'' என்று நண்பனை அனுப்பிவிட்டு சக்தியிடம் திரும்பினான் சித்தார்த்தன்.

அவன் பார்வை அவள் முகத்தில் கூர்மையுடன் படிந்தது.

அங்கு கண்டதை நம்ப இயலாதது போல அவன் கண்கள் ஒரு கணம் அகன்றன.

மறுகணமே இயல்பான குரலில், ''உட்கார் சக்தி. நிறையப் பேச வேண்டும் போல இருக்கிறதே!'' என்றான்.

''இல்லை,'' என்றாள் சக்தி சுருக்கமாக. ''நான்...''

''பொறு,'' என்று கையை உயர்த்தினான் அவன். ''அவசரப்பட்டு எதுவும் சொல்லிவிடாதே. நேற்று நான் உனக்கு என்னைப் பற்றி விவரமாகச் சொல்லவில்லையே உன் தாயாரிடம் பேசினாயா?'' என்று கேட்டான்.

சிறு கிண்டல் பார்வையுடன், ''என் அம்மாவுடன் பேசாமல் நான் ஒருநாளும் இருந்ததில்லை. ஆனால் உங்களைப் பற்றிய பேச்சு என்றால் அதற்கு அவசியமே நேரவில்லை,'' என்றாள்.

''முதலில் நான் சொல்வதைக் கவனி சக்தி. இந்த அலுவலகம் பற்றிப் பேசினால் புரிந்து கொள்வது உனக்கு எளிதாக

இருக்கும் என்று நினைக்கிறேன். இது ஒரு பதினைந்து இலட்சங்கள் பெறுமானமுள்ள நிறுவனம். இதில் மூன்றில் ஒரு பங்கு என்னுடையது. "கோஸி நூக்" என்ற பெயரில் இருக்கும் ஐந்து நட்சத்திர ஓட்டலும் என்னுடையதே. கோவையில் ஒரு டெக்ஸ்டைல் மில்லுக்கு நான் உரிமையாளன். ஊட்டி ஏற்காட்டில் எஸ்டேட்டுகள் பங்களாக்கள் இருக்கின்றன சென்னையிலும் பல வீடுகள். இதற்கெல்லாம் என்னுடன் பங்குக்கு வர எவரும் இல்லை. என்னை மணந்தால் இவை அனைத்தும் உன்னதாகவும் ஆகும். எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து அதன்பின் பதில் சொல்," என்று ஓர் அவசரத்துடனும், கூடவே ஒரு கர்வத்துடனும் அவன் பேசியதைக் கேட்ட சக்திக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

இவன் என்ன மனிதன்! தனது தகுதிகளாகச் சொத்துக்களை மட்டிலும் கூறுகின்றவன்!

தன்னிடத்தில் அவ்வளவு நம்பிக்கையா அல்லது பணத்திற்காக அவனைச் சுற்றியுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமா?

அந்த மாதிரிக் கண்றாவிகளைப் போல நானும் இவனது பணத்தில் மயங்கிவிடுவேன் என்று நினைத்தானோ? திமிரைப் பார்!

ஒரு பெண்ணிடம், "உன்னைப் பூப்போல வைத்திருப்பேன், கண்போலப் பாதுகாப்பேன். உள்ளம் முழுவதையும் உனக்கே தருவேன். கருத்தொருமித்த காதலோடு வாழுவோம், வா!" என்று கனிவோடு அழைக்காமல், காசுக் கணக்கை நீட்டுகிறானே?

காசு அவ்வளவு உயர்ந்ததானால் இவனும் அதையே பார்த்து மகிழ்ந்து கொண்டு இருக்க வேண்டியதுதான்.

லேசான அலட்சிய முறுவலுடன், "அம்மாவின் பதில்தான் என்னுடையதும்," என்று அழுத்திச் சொன்னாள் சக்தி.

முகம் கறுக்க உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு அவ ளையே பார்த்தபடி சற்று நேரம் நின்றான் அவன்.

பிறகு, ''அசட்டுத்தனமான பேச்சு இது. சம்மதத்தினால் பெறக்கூடிய லாபங்களை இழப்பது மட்டுமின்றி நஷ்டங்களை யும் வலிந்து அழைக்கப் பார்க்கிறாய். இதனால் உனக்கு எத்த னையோ சங்கடங்கள் நேரக்கூடும்!'' என்றான்.

''என்ன சங்கடங்கள்?'' என்றாள் சக்தி, அச்சமற்று.

''முதலாவதாக இந்த வேலையை இழக்க நேரிடலாம்!'' என்றான் அவளிடம் இருந்து பார்வை அகற்றாமல்.

சக்தியின் கீழ் உதடு ஏளனமாகப் பிதுங்கியது. ''நான் வேலை பார்க்கத் தொடங்கி எவ்வளவு காலம் ஆகிறது தெரியுமா? பத்து மாதங்கள். சம்பளம் எவ்வளவு தெரியுமா? நானூற்று ஐம் பது ரூபாய். பாங்கு கணக்கில் ஏறியிருப்பது எவ்வளவு தெரி யுமா? நாலாயிரத்து ஐந்நூறுக்கும் மேல். இந்தப் பணத்தை மட் டுமே நம்பி நாங்கள் இதுவரை வாழவும் இல்லை; இந்தப் பணம் இல்லாமல் நாங்கள் செத்து விடவும் மாட்டோம் மிஸ் டர் சித்தார்த்தன்,'' என்றாள் அவள்.

''நான் சங்கடங்கள் என்று பன்மையில் சொன்னேன்,'' என்றான் அவன்.

அவள் அலட்சியமாகத் தலையைக் குலுக்கினாள். ''இன்று வரை காத்து வளர்த்த தெய்வம் இனியும் காக்கும்!'' என்று முடித்தாள்.

இதற்கு மேல் உன்னுடன் பேச ஒன்றும் இல்லை என்பது போல் திரும்பி நடந்தாள்.

அவன் எழுந்து கதவை மறைத்தாற்போல் நின்றான்.

''உன்னுடைய இந்த முடிவை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.''

சிறு ஏளனத்துடன் அவனைப் பார்த்தபடி அசையாமல் நின்றாள் சக்தி.

அவள் நின்ற தோரணையில் அவனுக்கு உதடுகளில் இளநகை மலர்ந்தது.

''எவ்வளவு தைரியத்துடன் நிற்கிறாய்!'' என்றான் சிலாகிப்பது போல.

அவள் தலையைக் குலுக்கினாள்.

கூடவே அவன், ''ஆனால் இது ஏ.சி. அறை. இங்கே நான் உன்னை என்ன செய்தாலும் யாருக்கும் தெரியாது தெரியுமா?'' என்றான் கேலிக் குரலில்.

''மிரட்டலா? ஆனால் இதெல்லாம் கண்ணாடிதான். ஒரு பேப்பர் 'வெயிட்'டை விட்டெறிந்தால் போதும், பிறகு மொத்த ஆபீசும் இங்கே இருக்கும். அது தெரியுமா உங்களுக்கு? அது மட்டும் இல்லை. உங்கள் மிரட்டலைச் செயலாக்கினால் அதன் பிறகு வெளியே போய்த்தானே ஆகவேண்டும்; அதுவும் இதே அலுவலகத்தின் வழியாக!'' என்றாள் சக்தி சிறிதும் பயமில்லாமல்.

அவனது முறுவல் விரிவடைந்தது. ''கெட்டிக்காரிதான். ஆனால் நான் தோல்வியை ஒப்புக் கொள்கிறவன் இல்லை. வெல்லும்வரை விடுகிறவனும் இல்லை தெரிந்து கொள்!'' என்றான் நிதானமாக.

''வீணாகப் போவது உங்கள் நேரம். இதில் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று தோளைக் குலுக்கினாள் சக்தி.

மிகுந்த ரசனையுடன், ''நன்றாகப் பேசுகிறாயே! நம் வாழ்க்கை ஒரு நாளும் போரடிக்கப் போவதே இல்லை!'' ஏன்றான் அவன்.

முதல் தடவையாகச் சக்தியின் முகம் கடுத்தது. "அந்த மாதிரி எல்லாம் எண்ணிப் பார்க்கக்கூட வாய்ப்பு இல்லை. வழியை விடுங்கள்," என்றாள் பட்டென்று.

அவளையே பார்த்தபடி மெல்ல வழியைவிட்டு விலகினான் சித்தார்த்தன்.

அவனது பார்வை சக்தியினுள் ஏதோ ஒரு நினைவை உறுத்தியது. யோசித்தபடியே நடந்தாள்.

இந்தமாதிரி பார்வையை அவள் எங்கே கண்டிருக்கக் கூடும்?

வேலை முடிந்து வீடு திரும்புகையில் பஸ்ஸில் ஓரமாய் அமர்ந்து அங்கங்கே இருந்த விளம்பர பானர்களை சுவாரசியமாக நோட்டம் விட்டபோதுதான் சக்திக்குச் சர்ரென்று உறைத்தது.

கொஞ்ச நாட்களுக்கு முன்னதாக அவள் பார்த்த படம் அது. காட்டு மிருகங்களைப் பற்றியது. அதில் வந்த சிறுத்தைப் புலியின் பார்வை இது.

தனது இரையிடமிருந்து கணமும் பார்வையை அகற்றாமல் அது செல்லுமிடம் எல்லாம் தொடர்ந்து ஒரேயடியாய் அடித்துக் கொல்லும்வரை அதன் கண்களில் காணப்பட்ட தீவிரமான பார்வை.

அதே கூர்மை... அதே தீவிரம். சித்தார்த்தன் சிறுத்தை என்றால், அவன் குறி அவளா?

சற்று நேரம் அவளுக்கு மார்பு படபடத்தது.

சீ, இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று தலையைக் குலுக்கி அந்த உணர்ச்சியை விலக்கினாள்.

மனநிலையை மாற்றும் முயற்சியில் அலைந்த கண்களில் "காமதேனு" சூப்பர் மார்க்கெட் கட்டடம் கண்ணில் பட்டது.

வீட்டிற்குச் சில சாமான்கள் வாங்கிச் செல்லலாம். மனதிற்கும் நன்றாக இருக்கும் என்று எண்ணி பஸ்ஸில் இருந்து இறங்கினாள்.

காமதேனுவினுள் நுழைந்தவளை, ''ஹாய் சக்தி!'' என்ற குதூகலக் குரல் ஒன்று ஆர்வமாக எதிர் கொண்டது.

''சுகுணா! நிஜமாக நீயேதானாடி? ஆமாம், தினம் தினம் எனக்கு நீ எழுதுகிற கடிதங்களில் ஒன்றில்கூட நீ இங்கே வந்து குதிக்கப் போவது பற்றி எழுதவே இல்லையே!'' என்று சிரித்தாள் சக்தி.

''தினம் தினமா!'' என்று வாயைப் பிளந்த சுகுணாவின் வதனம் சட்டெனச் சிவந்தது. ''போடி! உன் கடிதத்துக்கு நான் பதில் எழுதவில்லை என்ற கோபத்தினால் வாருகிறாயாக்கும்! சாரிடி. நேரம் இல்லை!'' என்று சமாதானம் சொன்னாள்.

''ஏனாம்? பத்துப் பேருக்குப் பொங்கிப்போட்டு, பாத்திரம் துலக்கி, துணி துவைத்து... இத்யாதி வேலைகளில் கடிதம் எழுத நேரம் இல்லாமல் போயிற்றோ?'' என்று கிண்டலாகக் கேட்டாள் சக்தி.

''வந்து...'' என்று இழுத்த சுகுணா இன்னமும் அதிகமாய்ச் சிவந்தாள்.

புது சுவாரசியம் பிறந்துவிட, ''ஏய் என்னடி? என்ன விஷயம், சொல். லேன்டி...'' என்று உற்சாகப்படுத்தினாள் சக்தி.

நாணிக்கோணிக் கொண்டு, ''அதாண்டி முன்னே எல்லாம் சொல்வேனே... அவர்தான்... என் அண்ணனின் சிநேகிதர் ஒருவர் ஹீரோ மாதிரி இருப்பார் என்று...'' தொடங்கினாள் சுகுணா.

''யார்...? ஓகேகோ. அவருடைய ''கஸின்'' ஒருத்திகூட உனக்கு எப்படியோ உறவு என்பாயே. உன் பெரியப்பா மகனு

''மனைவி...''

''என்னவாகவும் போகட்டும். இப்போது உன் கதா நாயக ரைப் பற்றிச் சொல்லு. எப்போது டும்டும்! நிச்சயமாகி விட் டதா? அல்லது நடந்தே விட்டதா?'' என்று தோழியின் கழுத்தை உற்சாகத்துடன் ஆராய்ந்தாள் சக்தி.

''சீ, போடி!'' என்று முகத்தை மூடிக் கொண்டாள் சுகுணா.

விரல்களின் இடுக்கு வழியே சக்தியைப் பார்த்துச் சிரித்து விட்டு, ''அவ்வளவு தூரத்துக்கு ஒன்றும் இல்லையடி. ஆனால் இப்போது எல்லாம் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருகிறார். முன்பெல்லாம் அண்ணன் இருப்பதைத் தெரிந்தபின்தான் காரை விட்டே இறங்குவார். இப்போது அண்ணன் இல்லாவிட் டாலும்கூட இருந்து என்னிடம் பேசிவிட்டுப் போகிறார்...'' என்றாள்.

''காதல் பேச்சாக்கும்!'' என்று ஆர்வத்துடன் விசாரித்தாள் சக்தி.

''அதெல்லாம் இல்லையடி!'' என்றாள் சுகுணா சிறு ஏக்கத் துடன். ''சும்மா படிப்பு, பள்ளி என்றுதான் பேசுகிறார்... ஆனா லும் என் மனதில் நம்பிக்கை வளரத் தொடங்கிவிட்டது,'' என்றாள் முகம் மலர்ச்சியுற.

''வெற்றி உண்டாகட்டும்!'' என்று கை தூக்கி ஆசீர்வதித்தாள் சக்தி. ''அவர் பெயர் என்னடி? சொல்லேன்டி. என்னிடம்கூட வெட்கமா?'' என்று தூண்டித் துருவினாள்.

சுகுணா யோசனையோடு நிற்கவும், ''ஏன் சுகுணா. பெய ரைச் சொல்ல நா...ணமாய் இருந்தால் ஜாடையாக ஆறுமுகச்சா மியின் அண்ணன் என்று ஏதேனும் கோடி காட்டேன். பிடித்துக் கொள்கிறேன்,'' என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

“வெட்கம் எல்லாம் இல்லை. ஆனால் பெயரைச் சொன்னால் நீ வேறுவிதமாய்க் கேலி செய்யத் தொடங்கி விடுவாய். அதனால் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்தே தெரிந்துகொள்,” என்றாள் சுகுணா தீர்மானமாக.

“பாவி, சஸ்பென்சில் விடுகிறாயே...!” என்று சக்தி தொடங்குமுன், “ஷ்... அண்ணன் வந்துவிட்டான். இதைப் பற்றி இனிப் பேசாதேடி!” என்று எச்சரித்தாள் சுகுணா.

“சக்தியா!” என்றபடி வந்தான் சுகுணாவின் அண்ணன் குமரன்.

குமரன் ஒரு நெருங்கிய தோழியின் அண்ணன்தான் என்றாலும் அவனிடம் கலகலப்பாகப் பேசிக் கொண்டு நின்றதில்லை சக்தி. அவன் விழிகளில் சற்று அதிகப்படியான ஆர்வம் தெரிகிறதோ என்ற சந்தேகம் அவளுக்கு.

தொல்லை என்ற அளவில் அது வளர்ந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் மெல்ல ஒதுங்கிப் போய் விடுவாள் அவள்.

எப்போதும் போலவே பொதுப்படையான சில நிமிடப் பேச்சின் பிறகு விடை பெற்றுப்போய்விட்டாள்.

★ ★ ★

அன்றைய அளவில் சித்தார்த்தன் அவளது விழியைவிட்டு விலகினானே தவிர அவளது வாழ்க்கையைவிட்டு விலகி விடவில்லை.

அங்கங்கே பஸ்ஸுக்கு நிற்கையில், ஷாப்பிங் என்று செல்லுகையில், நடக்கையில் என்று அடிக்கடி அவனைச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்த போதெல்லாம் ஏதாவது பேசினான்.

“அந்த வழியே போகிறேன். ஆபீஸில் கொண்டு போய் விடட்டுமா?”

“வீட்டில் இறக்கி விட வேண்டுமா?”

''ஒரு சினிமா டிக்கெட் இருக்கிறது, பார்க்கிறாயா?''

''ஒரு காபி சாப்பிடலாம். வருகிறாயா?''

இந்தச் சந்திப்புக்கள் தற்செயலாகவே நடக்கின்றன என்று எண்ணும் அளவுக்குச் சக்தி அப்பாவியும் அல்ல, முட்டாளும் அல்ல.

ஆத்திரப்படும் அளவுக்கு அவன் எந்த வகையிலும் அத்து மீறி நடந்து கொள்ளாததால் அவளும் மரியாதையுடனே மறுத்து வந்தாள்.

அவன் கண்களில் அந்த வேட்டைப் பார்வை மட்டும் இல்லை என்றால், ''நாலு நாளில் மாறிவிடும்!'' என்று அலட்சி யப்படுத்தியும் இருப்பாள்.

ஆனால் இந்தப் பார்வை அவளை உறுத்தியது.

கூடவே அங்கங்கே அருகே இருந்தவர்களின் ஆவல் தூண் டப் பெறுவதும் புரிந்தது.

இதற்கு ஒரு முடிவு கட்டி விடுவது நல்லது என்ற எண்ண மும் அவளுள் உண்டாயிற்று.

எண்ணியதை உடனே செய்து முடிக்கா விட்டால் சக்தி யல்லவே.

மறுநாளே அலுவலகம் முடிந்து திரும்புகையில் நினைத்த தைச் செயலாற்றும் வாய்ப்புக் கிட்டியது.

பஸ் நிறுத்தத்தில் அவளிடம் வந்து நலம் விசாரித்தான் சித் தார்த்தன்.

அவனிடம், ''உங்களிடம் சற்றுப் பேச வேண்டும். அந்த ஓட்டலுக்குப் போகலாமா?'' என்றாள் சக்தி.

அவன் வாயைப் பிளப்பான் என்று எதிர்பார்த்திருந்த சக்திக்கு ஏமாற்றமே கிட்டியது.

கண்கள் லேசாக இடுங்கியது தவிர அவனிடம் எந்த மாற்றமும் இல்லை.

''ஓ. போகலாமே'' என்று அவளுடன் இணைந்து நடந்தான்.

ஓட்டல் வரும்வரை அவளாக எதுவும் சொல்லவில்லை. அவனும் கேட்கவில்லை.

காபியை அருந்திவிட்டுச் சக்தி நிதானமாகச் சொன்னாள். ''மிஸ்டர் சித்தார்த்தன்! இந்த அலைச்சலை விட்டு விடுங்கள். வீண் விரயம்.''

''என்னுடைய நேரம் நான் அலைகிறேன். இதில் நீ சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று முறுவலித்தான் அவன்.

அவள் முன்பு சொன்னதை இப்போது அவன் சொல்லிக் காட்டுகிறானாக்கும்.

கணத்தில் விளைந்த சினத்தை அடக்கும் முயற்சியில் கீழ் உதட்டைப் பல்லால் அழுத்தினாள் சக்தி.

அவள் உதட்டையே பார்த்தபடி, ''அதோடு வீண் என்றுதான் எப்படிச் சொல்ல முடியும்?'' என்றான் அவன் மெதுவாக.

''நிச்சயம் வீண்தான்!'' என்றாள் சக்தி அழுத்தம் திருத்தமாக, ''எனக்கு மாப்பிள்ளை எப்போதோ ரெடி!'' என்றாள் தலையைப் பெருமையுடன் நிமிர்த்தி.



3

**சி**த்தார்த்தன் அதிர்ந்து போவான் என்று எதிர்பார்த்தாள் சக்தி. அப்போதும் ஏமாந்தே போனாள்.

மீண்டும் அவனது கண்ணிமைகள் லேசாக நெருங்கியதே தவிர அவன் முகத்தில் மாற்றம் இல்லை.

இதற்குக்கூட அதிரவில்லை என்றால் அவனது காதல் எப் பேர்ப்பட்டதாக இருக்கும் என்று உள்ளூர நினைத்துக் கொண் டாள் சக்தி.

''எப்போதோ என்றால்?'' என்று வினவினான் அவன்.

''பிறந்த நாளிலிருந்தே...'' பெருமையாகச் சிரித்தாள் சக்தி.

''உறவா?''

''ம்... மாமா மகன்.''

அப்போதும் பார்வை அகலாமல், ''இந்த மாதிரி உறவில் மணம் செய்தால் வருங்காலத் தலைமுறை ஊனத்துடன் பிறக்கக்கூடும் என்பது தெரியாதா?'' என்றான் அவன்.

எதை எல்லாம் பேசுகிறான்.

அவளுக்கு முகம் சிவந்து போயிற்று. சமாளித்துக் கொண்டு, ''மாமா என்றால் உறவில் இல்லை. அப்பாவுக்கு மாமா நெருங் கிய நண்பர். அம்மாவுக்கு அத்தையும் அதே போலத்தான். இப்போது...'' என்று நிறுத்திவிட்டு உதட்டைச் சுருக்கி மெல்ல நகைத்தாள்.

அந்த உதட்டிலேயே அவன் பார்வை படிந்தது. ''இப் போதும் நீங்கள் இருவருமே வெறும் நண்பர்களாக இருப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை,'' என்றான் அமர்த்தலாக.

எரிச்சலுற்றவளாய், ''உங்கள் ஆட்சேபணையைப் பற்றி இங்கே யாரும் அக்கறை கொள்ளப்போவது இல்லை. பாவம், வீணாக அலைகிறீர்களே என்று பரிதாபப்பட்டுச் சொல்ல வந் தேன். அது முட்டாள்தனம் என்று இப்போது தெரிகிறது. நான் போகிறேன்,'' என்று பொரிந்து தள்ளிவிட்டு வேகமாய் வெளியே விரைந்து சென்றுவிட்டாள்.

ஆனால் அந்த நிகழ்ச்சியின் பின்னரும் சக்திக்கு விடுதலை கிடைக்கவில்லை.

வட்டம் போடும் பருந்து போல, அவன் அவளைச் சுற்றிச் சுற்றி வளைத்தான்.

''ஏய், சக்தி! உன் ஆள் வருகிறாரடி!'' என்று உடன் வந்த வள் சுட்டிக்காட்டும் அளவுக்கு இது தொடரவும் சக்தி முதன் முதலாகத் தாயிடம் இதுபற்றி வாய் திறந்தாள்.

சற்றும் எதிர்பாராததால் சீதை மிகவும் அதிர்ச்சியடைந்தாள். ''அன்றோடு மரியாதையாக ஒதுங்கி விட்டான் என்று நினைத் தேனே!'' என்றாள் வாய்விட்டு.

சக்தி குறுகுறுவென்று பார்க்கவும், ''உன்னிடம் சொல்ல வேண்டிய அளவு முக்கியம் என்று எண்ணாததால் சொல்ல வில்லை... சக்தி, இந்த... இந்த மனிதர்...'' என்று தடுமாறியபடி விளக்கத் தொடங்கினாள்.

தாயின் கைகளைப் பிரியத்துடன் பற்றி, ''எனக்கெல்லாம் தெரியும், அம்மா. ஆனால் தேவையிருந்தால் நீங்களே சொல் லியிருப்பீர்களே என்றுதான் நானும் இதை அலட்சியப்படுத்தி விட்டுவிட்டேன்,'' என்றாள் கனிவுடன் சக்தி.

''ஆனால் விடாமல் தொடர்வதாகச் சொல்லுகிறாயே...'' என்று கலங்கினாள் தாயார்.

தாயின் கலக்கத்தைப் பார்த்ததும் சக்திக்கு ஒரு மாதிரி ஆகி விட்டது.

தைரியமாகத் தலையை நிமிர்த்தி, ''அட என்னம்மா, நீங் கள்? இதற்கெல்லாம் இப்படிக் கலங்கலாமா? அந்த ஆளால் என்னை என்ன செய்ய முடியும்? சும்மா இலவு காத்த கிளி போலக் காத்துக்கிடந்துவிட்டுப் போகட்டுமே. வேறு யாராவது வந்து ஒன்று கிடக்க ஒன்றைச் சொன்னால் நீங்கள் கலங்கிடக்

கூடாதே. முன்னமே காதில் போட்டு வைப்போம் என்று எண்ணித்தான் சொல்ல வந்தேன். இதற்கே நீங்கள் பயந்து கலங்குவீர்கள் என்று தெரிந்திருந்தால் சொல்லியே இருக்க மாட்டேன்,'' என்றாள்.

''அதில்லே சக்தி. அவன் பெரிய பணக்காரன். ஆள் பலம் எல்லாம் நிறைய இருக்கும்...''

அலட்சியமாகத் தலையைக் குலுக்கினாள் சக்தி. ''நமக்கு அதைவிடப் பெரியதாக ஆண்டவன் பலம் இருக்கிறது அம்மா. ஏனென்றால் நாம் நல்லவர்கள், பாருங்கள்,'' என்றாள் நம்பிக் கையோடு.

இப்போதும் சீதையின் முகம் தெளியவில்லை. ''கடவுள் இருப்பது மெய்தான் ஆனால் என்னென்ன காரணங்களால் அவர் எதெது செய்கிறார் என்பது சாதாரணமாக நமக்குப் புரி வது இல்லையே... இப்படி இவன் சுற்றினால் நாலுபேர் என்ன பேசக்கூடும்?'' என்று கவலைப்பட்டாள்.

''என்ன பேசுவார்கள்? பணத்திமிரில் பார்க்கின்ற பெண்க ளின் பின்னே எல்லாம் சுற்றுகிறான் என்று காறித் துப்புவார் கள்!'' என்றாள் சக்தி பட்டென்று.

''அல்ல மகளே...'' என்று வருத்தமாகப் பேசினாள் தாயார். ''நம் பக்கத்தைப் பொறுத்தவரை ஊசி இடம் தராமல் நூல் நுழை யுமா? என்றுதான் கேட்பார்கள். உன் தோழியே என்ன சொல் லியிருக்கிறாள் பார்.''

''போலீசில் புகார் செய்யட்டுமாம்மா? சும்மா பின்னா லேயே வருகிறான் என்று சொல்லி...''

''நாம் இன்ஸ்பெக்டரிடம் போனால், அவன் கமிஷனர் மூலம் அடக்குவான் அல்லது மந்திரியிடமே அவனுக்குச் செல் வாக்கு இருக்கக்கூடும். அதெல்லாம் நமக்குத் தோதுப்படாது.''

''அப்படியானால் ஒரு நாள் காலில் கிடப்பதால் விளாசி விடு கிறேனம்மா!'' என்றாள் சக்தி - தாயின் துன்பத்தைக் காணப் பொறுக்காமல்.

சீதை மிரண்டு போனாள். ''அய்யோ! அப்படி ஏதும் செய்துவிடாதேடி. அடிபட்ட பாம்புபோல் அவன் பயங்கரத் தில் இறங்கிவிடக் கூடாது...'' என்றவள், மேலும் பெருகிய கலக் கத்துடன், ''சக்தி! அவன் உன்னிடம் அத்து மீறி... ஏதும்... தொட்டுகிட்டு ஒன்றும்...'' என்று சொல்லி முடிக்க முடியாமல் தவித்தாள்.

''ராமா! ராமா! அதெல்லாம் ஒன்றும் இல்லையம்மா. அதற்கு எல்லாம் அவனுக்குத் தைரியம்கூட வராது. சும்மா கண் ணில் பட்டுக்கொண்டே பின்னாலேயே அலைகிறான். இதற்குப் போய் இப்படிக் கலங்குவார்களா? உங்களிடம் சொல்லியே இருக்கக் கூடாது பாருங்கள். தெருவிலே எத்தனை நாய்கள் அலைகின்றன. அதில்...''

''இது வெறி நாயாக இருந்துவிடக்கூடாதே என்பதுதான் என் பயமெல்லாம்!'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் சீதை.

''சே... சேச்சே! என்னம்மா இது, சின்னப்பிள்ளை போல!'' என்று தாயின் கையைப் பற்றி வருடி ஆறுதல் கூறினாள் சக்தி. ''இது வெறும் கயிறு, அம்மா. பாம்பு என்று பயப்படத் தேவையே இல்லை. காதல் கீதல் என்று பெட்ரோலைச் செலவழித்துக் கொண்டு பின்னாலேயே அலைவது அவர்களு டைய பணக்கார வர்க்கத்தில் ஒரு ஸ்டைலாக இருக்கும். ரோமியோ, ஜூலியட்போல போஸ் தருவது...'' என்று சொல்லி வரும்போதே அந்தக் கதாநாயகர்களுக்கும் இந்தச் சித்தார்த்த னுக்கும் இடையே உள்ள வேறுபாடு அவள் மனதில் உறுத் தியது.

இவன் வேட்டையாடும் புலியின் ரகம். அந்தக் கதாநாயகர் களோ இணை தேடும் சாதுவான மானின் ரகம். முழுக்க முழுக்க மாறுபட்டவை என்பது தோன்றியது.

ஆனாலும் தாயார் கலங்குவதைக் காணச் சகிக்காமல் தொடர்ந்து, "நாலுநாள் கழித்து வேறு ஒரு முகம் கண்ணில்பட் டால் உடனே அவள் பின்னே ஓடத் தொடங்கி விடுவார்கள். இதற்குப் போய்ப் பதறிக்கொண்டு... விடுங்கள், அம்மா!" என்று முடித்துவிட்டாள்.

"இந்த நாலு நாளைக்குள் உன் பெயர் கெட்டுவிடக் கூடா தேம்மா!' என்று மீண்டும் கலங்கினாள்.

"ஏன்தான் சொன்னேனோ!" என்று தன்னையே நொந்து கொண்டு, "என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள், அம்மா?" என்று மீண்டும் வினவினாள் சக்தி.

பூங்கொடி போல நின்ற மகளை ஒரு தரம் பார்த்தாள் சீதை.

பிறகு யோசனையோடு, "ஒரு மாதம் ஆபீசிற்கு லீவு போட் டுவிட்டு திருச்சி மாமா வீட்டிற்குப் போய் அங்கே தங்கியிருந் துவிட்டு வருகிறாயா சக்தி? நீயும் அங்கே போய் ஓர் ஆண்டுக் கும் மேலாக ஆகிறது. சவுந்தரமும் மூன்று மாதமாய் எழுதிக் கொண்டே இருக்கிறாள்... கொஞ்ச நாட்கள் இந்தச் சூழ்நிலை யில் இருந்து நீ விலகியிருந்தால் எனக்குத் தைரியமாக இருக்கும்," என்றாள்.

உதட்டைக் குவித்து யோசனை செய்தாள் சக்தி.

அங்கே திருச்சியில் பலராம் இருக்கிறான்.

போன தடவையே அவன் பார்வை சற்று மாறி அவளைச் சிவக்க வைத்துக் கொண்டிருந்தது.

மாமாவும் பிக்னிக் அது இதென்று அழைத்துச் செல்கிறார்.

அத்தையும் அப்படியே.

உச்சிப் பிள்ளையாரைப் பார்த்துச் சரியாக ஒன்றே கால் வருடம் ஆகிவிட்டது.

எனவே முகம் மலர, ''சரியம்மா,'' என்று ஒப்பினாள் சக்தி.

கிளம்புவதில் சக்திக்குச் சிக்கல் எதுவும் இருக்கவில்லை.

கிட்டத்தட்ட லீவு எடுக்காதவள் என்பதால் அலுவலகத்தில் இலகுவாகவே விடுப்பு கிடைத்தது.

விடுமுறைக்கு அனுமதி கொடுத்துவிட்டு, சின்ன முதலாளி ஒன்று சொன்னார். ''சக்தி, சித்தார்த்தன் உன்னைக் கவுரவமாக மணந்து கொள்ளத்தான் விரும்புகிறார். தப்பு நினைப்பு ஏதும் இல்லை,'' என்றார்.

''எனக்கு வேற இடத்தில் நிச்சயம் ஆகிவிட்டது, சார். அதனால் அவரைக் கவுரவமாகவே ஒதுங்கிக் கொள்ளச் சொல்லுங்கள்,'' என்றாள் சக்தி இனிமையாகவே.

சிறு வியப்புடன் அவளை நோக்கி, ''அவர் காலடியில் கிடக்க - கிடந்து மிதிபடக்கூட - ஆயிரம் பெண்கள் ஆசையோடு ஓடி வருவார்கள், ஆனால் நீயோ... ஒருவேளை அவனுடைய கடந்த காலம் பற்றிக் கேள்விப்பட்டாயா சக்தி? கைநிறையப் பணமும் கண்டிப்பார் இல்லாத நிலையும் இருந்தால் இந்த மாதிரி விபத்து நேர்வது இயல்புதான். அதை எல்லாம் தவறாக எண்ணி முடிவு செய்யக்கூடாது,'' என்றார் அறிவுரை கூறுவது போல்.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்ற சக்தி, ''சித்தார்த்தனைப் பற்றி எனக்கு ஒருவித உணர்ச்சியும் இல்லை சார். அதனால் அவர் நல்லவரா கெட்டவரா என்று ஆராய்வதற்கே அவசியமில்லை. ஆனால் ஒன்று கேட்கட்டுமா சார்?

திருமணத்திற்கு முன்னதாகத் தப்புவழியில் நடந்த ஒருவர் திருமணத்தின் பின்னரும் அப்படி நடக்கமாட்டார் என்பது என்ன நிச்சயம்? ஒரு வேளை நடந்து கொண்டால் அப்போது உங்கள் முன்னே வந்து நிற்பதா? நின்றால் சீராகிவிடுமோ?'' என்று துணிச்சலாகவே கேள்விகளை அடுக்கினாள்.

சரவணன் வாயடைத்துப் போனார்.

சிறு மவுனத்துக்குப் பின் சக்தியே தொடர்ந்தாள்.

''எதற்கு சார் இந்த வேதனையெல்லாம்? ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டையாக எங்கள் அளவில் என் அப்பாவே திட்டமிட்டபடி என் திருமணம் நடக்கப் போகிறது,'' என்று முடித்தாள்.

''உன் அப்பாவே இப்போது இருந்திருந்தால் வேறு சொல்லியிருப்பார் சக்தி. இல்லாது போன ஒருவரின் வார்த்தைக்காக இருப்பவர்கள் கஷ்டப்பட வேண்டும் என்பது இல்லை.''

''கஷ்டம் என்று ஆவானேன்?'' என்று எரிச்சலோடு வெடுக்கென வினவினாள் சக்தி.

சற்றுத் தயங்கிவிட்டு, ''ஆகவேண்டியது இல்லைதான். ஆனால் உன் அப்பாவின் வார்த்தைக்காக மட்டும்தானா இப்படி?''

''அப்படி என்று மட்டும் இல்லை சார். அம்மாவுக்கும் பலராமனைப் பிடித்திருக்கிறது. அவர் என்னைக் கண்கலங்காமல் காப்பாற்றுவார் என்று நம்புகிறார்கள்,'' என்றாள் சக்தி லேசான வெட்கத்துடன்.

''நீ?''

''நான்... நான் வந்து... அம்மாவின் விருப்பம்தான் எனக்கு எல்லாம்.''

''ஓகோ! அப்படியானால் உன் தாயாரிடம் வந்து பேசட்டுமா?''

''வேண்டாம், சார்,'' என்றாள் சக்தி பதட்டமாக.

''எங்கள் திருமணம் இரு தரப்பினரும் பிரியமாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்று. இதைத் தடை செய்து யார் மனதையும் வருந்தவிட எனக்கு விருப்பம் இல்லை. மேலும் கடுமையாகப் பேசியதற்கு மன்னியுங்கள் சார். திருமணம் என்பது என்னு டைய சொந்த விஷயம். இதில் வேறு யாரும் - அது யாரானா லும் - தலையிடுவது எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவு தான் சார் விஷயம். தயவு செய்து இதுபற்றி இனி பேசாதீர்கள்!'' என்று படபடப்பாகப் பேசி முடித்தாள்.

பெருமூச்சுடன் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துப் போட் டுக் கொண்டார் சரவணன். ''பார் சக்தி, சித்தார்த்தனை மணந்து கொண்டாயானால் பிறகு நானே மரியாதை தரவேண்டிய நிலை யில் நீ இருப்பாய். வேலை பார்க்கையில் எப்படி எப்படி நடத் தினோமா. தப்பாக ஏதும் நினைத்திருப்பாளோ என்று நான் உள் ளூரக் குமைந்து கொண்டே இருக்க நேரிடும். இதெல்லாம் எனக்கு மட்டும் பிரியம் என்றா நினைக்கிறாய்?'' என்று கேட்டார்.

''பின்னே!'' என்றாள் சக்தி வியப்பாக.

''என் நண்பனின் பிடிவாதம்! அவனுடைய தன்மை தெரிந் ததால் இது இலகு வழி என்று கண்டு சொன்னேன். அவ்வளவு தான். அப்படியானால் ஞாயிறன்று காலை ரெயிலிலா கிளம்பு கிறாய்?'' என்று கேட்டார்.

சக்தி 'ஆமாம்' என்பது போலத் தலையாட்டவும், ''சரிதான் நல்லபடியாகப் போய் வா,'' என்று அனுப்பி வைத்தார்.

கோத்திருந்த கரங்களைச் சற்று நேரம் பார்த்தவர் ஒரு பெரு மூச்சுடன் டெலிபோனை எடுத்து எண்களைச் சுழற்றினார்.

மறுமுனையில் அழுத்தமான குரல் ஒன்று. "யெஸ்... சித் தார்த்தன் ஸ்பீக்கிங்!" என்று கூறியது.



4

**பொ**துவாகப் பகல் ரெயிலில் திருச்சிக்குச் செல்வதுதான் சக்திக்கு வழக்கம்.

காலையில் எட்டே காலுக்குக் கிளம்பி னால், வண்டி சரியாகப் போனால் நாலு இரு பதுக்குத் திருச்சியை அடைந்துவிடலாம். அங்கே சவுந்தரத்துக்கும் ஸ்டேஷனுக்கு வந்து அவளை அழைத் துச் செல்ல வசதியாக இருக்கும். மற்ற ரெயில்களில் சென்றால் நள்ளிரவிலும் வெகு விடிகாலையிலுமாக அவர் திண்டாட நேரி டும்.

அதே வழக்கப்படியே அந்த ஞாயிறன்றும் சக்தி அதே ரெயி லுக்குத்தான் கிளம்பினாள்.

எப்போதுமே சீதை மகளுடன் ரெயில்நிலையத்திற்குச் செல்வது இல்லை.

முக்கிய காரணம் மகளைப் பிரிகையில் தாங்க முடிவது இல்லை. மற்றவர் பார்க்க அழுவது அசிங்கம்.

அடுத்தது ஏழரைக்கு வரும் காய்க்காரிக்குக் காய்கறிகள் கொடுக்க வேண்டும்.

தாயாரை அலையவிடுவதும் சக்திக்கு அடியோடு பிடிக்காது.

அவள் இல்லாததால் அன்னை அதிக வேலை பார்க்கும்படி யாகவும் விட்டுவிட மாட்டாள்.

காய் வாங்கிச் செல்லும் கன்னியம்மாவைச் சற்று முன்னதாக வந்து தோட்ட வேலைகளை முடித்துவிட்டுக் காய் வாங்கிச் செல்லுமாறு வழக்கம் போலவே ஏற்பாடு செய்தாள்.

கைப்பையில் இருந்து ஒரு பத்து ரூபாயை எடுத்து, ''இதை வைத்துக் கொள் கன்னியம்மா. தினமும் இரவில் அம்மாவுக்குத் துணையாக வந்து படுத்துக்கொள். மறக்காதே. அம்மாவுக்கு ஒரு கஷ்டம் இல்லாமல் கவனிக்க வேண்டும், என்ன?'' என்று இரவு தாய்க்குத் துணையாயிருக்கவும் கன்னியம்மாவை ஏற்பாடு செய்தாள்.

''அம்மாவைத் தொட்டிலில் போட்டு ஆட்டித் தூங்கவை என்று சொல்லாமல் விட்டாயே!'' என்று செல்லமாக அதட்டினாள் சீதை.

''தொட்டிலில் இல்லை. ஆனால் என் செல்ல அம்மாவைப் பொன்னூஞ்சலில் ஆட்டுவேனாக்கும்!'' என்று ஆசையுடன் கூறினாள் சக்தி.

'நாளைக்குக் கல்யாணம் ஆகிப் புள்ளையைத் தொட்டில்ல போட்டு ஆட்டறப்ப அம்மா இருக்கறதே மறந்து போகும்! அய்யா எங்க வூட்டுக்காரர் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவாருன்னு ரெக்கை கட்டிக்கினு ஓடும் பாப்பா!' என்று சிரித்தாள் கன்னியம்மா.

தாயிடம் கூடச் சொல்லவில்லை என்ற போதும் சக்தியின் இந்தப் பயணத்தில் உள்நோக்கம் ஒன்று உண்டு.

பலராமைத் திருமணம் செய்து கொண்டு திருச்சியில் குடித்தனம் செய்வது அவளது உத்தேசம் அல்ல.

மாற்றல் வாங்கிக் கொண்டு சென்னைக்கே வந்து, தன் தாயுடன் ஒன்றுசேர்ந்து ஒன்றாக வசிக்க வேண்டும் என்று பலராமிடம்... அவன் பெற்றோரிடம் கேட்பதற்காகவே முக்கியமாக சக்தி இப்பயணத்தை மேற்கொண்டிருந்தாள்.

சின்ன வயது முதல் கடின உழைப்பாலேயே வாழ்ந்த தன் தாயாரை இன்னமும் தனியே உழைக்க விட்டுவிட்டு வேறு ஒரு வனுக்குப் பொங்கிப் போட்டு வாழச் சக்தி தயாரில்லை!

ஆனால் பல்ராமின் பெற்றோர் அதை வேண்டுவோரும் இல்லை. சீதையிடம் அக்கறை உள்ளவர்கள் அவர்கள்.

ஆயினும் கல்யாணம் அது இதென்ற கிட்டிமுட்டி வந்தபின் இதைப் பேசுவதைவிட முதலிலேயே கேட்டு விடுவது நல்லது என்று நினைத்தாள் சக்தி.

வேறு சமயமானால் எவனுக்கோ பயந்து ஊரைவிட்டு ஓடு வதோ என்று சிலுப்பக்கூடிய அவள், இதைத் தாய் அறியாமலே முடிவு செய்துவிட எண்ணித்தான் தாயார் சொன்னவுடனேயே திருச்சி பயணத்துக்குத் தயார் ஆனாள்.

ஆயிரம் தரம் அதிக வேலை செய்யக்கூடாது என்று அம்மா விடம் எச்சரித்துவிட்டு, கன்னியம்மாவிடம் அம்மாவைக் கவ னித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, ஒரு வழியாகத் தோளில் பையுடனும் கையில் சின்னத்தோல் பெட்டியுடனும் கிளம்பி னாள் சக்தி.

"கனமா இருக்கா, கண்ணு? நான் தூக்கியாரட்டுமா?" என்று முன் வந்தாள் கன்னியம்மா.

"மூச், அம்மாவுக்கு உதவு என்றால் என்னோடு இதைத் தூக்கிக் கொண்டு வரப் பார்க்கறியா?" என்று மிரட்டிவிட்டு, தாயின் கண் கலங்குவதைக் கனிவுடன் பார்த்துவிட்டுக் கிளம்பினாள் சக்தி.

முனை திரும்புகையில் ஒருதரம் திரும்பிப் பார்த்தாள். பெட் டியைக் கீழே வைத்துவிட்டுத் தாய்க்குக் கையசைத்தாள். மீண்டும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு விறுவிறுவென்று நடக் கலானாள்.

எதிர்த் திசையில் இருந்து வந்த ஒரு வெண்ணிற அம்பாசிடர் கார் அவளருகில் வந்து நின்றது.

அதில் இருந்து இறங்கியவன் சித்தார்த்தன்.

''என்ன சக்தி, மூட்டை முடிச்சுகளுடன் பிரயாணம் வெகு தூரமோ?'' என்றான் உதட்டளவிலான ஒரு புன்னகையுடன்.

''இல்லையே, திருச்சி வரைதான். வரட்டுமா? நேரமாகி விட்டது,'' என்று மேலே நடக்க முயற்சித்தாள் சக்தி.

''பஸ் ஸ்டாப் வரை இத்தனை கனத்துடன் நடக்க வேண்டுமா? ஏறு... கொண்டு போய் விடுகிறேன்,'' என்றான் அவன்.

பெட்டியின் கனம் சரியென்று சொல்லச் சொன்னது.

ஆயினும் சக்தி தயங்கினாள். ''உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?''

''சுமக்கப் போவது நானில்லை; கார், இந்தக்காலை நேரத்தில் இவ்வளவு வியர்த்திருக்கிறது. அதற்கு மேலும் என்ன பிடிவாதம்? வா.. ஏறு,'' என்று சற்று உரிமையோடு பேசியபடி பெட்டியை வாங்கக் கை நீட்டினான் அவன்.

''சரவணன் சொன்னான். சரி, ஏதேதோ ஆசைப்பட்டோம், இப்போது வழியனுப்பியேனும் வைப்போம் என்று வந்தேன்,'' என்று சோகமாகச் சொன்னான் சித்தார்த்தன்.

சக்தி சங்கடத்துடன் நெளிந்தாள்.

''இந்தச் சின்ன உதவிகூட என்னிடமிருந்து ஏற்றுக் கொள்ளக் கூடாதா, சக்தி?'' என்று அவன் மீண்டும் கெஞ்சுதலாகப் பேசியபோது அவளுக்கு மிகவும் பரிதாபம் உண்டாகிப் போயிற்று.

சரியென்று ஒப்பினாள்.

சக்தி உள்ளே அமர்ந்ததும் மறுபுறமாக வந்து அருகே அமர்ந்து கொண்டான்.

"எக்மோர்!" என்று அவள் குரல் கொடுக்கவும் கார் கிளம்பியது.

பிறகு...

கண்ணைத் திறப்பதற்கும் படு சோம்பலாக இருந்தது சக்திக்கு.

"விடிய அதிக நேரம் இருக்கிறதா?" என்று எண்ணியபடியே மெல்லப் புரண்டாள்.

புரண்டபோது மிக மிக மிருதுவான விரிப்பில் அரையடி ஆழம் புதைந்தாள். திடுக்கிட்டாள்.

இது அவளது படுக்கை அல்லவே!

சடக்கென எழுந்து அமர்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தாள்.

அருகே வந்து கொண்டிருந்த சித்தார்த்தன் கண்ணில் பட்டான்.

உணர்ச்சிகள் சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்த முகத்தில் அந்த வேட்டைப் பார்வை மட்டும்.

இது என்ன இடம்?

இங்கே இவன் எப்படி வந்தான்?

கேள்விகள் தானாகப் பிறந்தன.

ஆனால் பதிலுக்காகச் சிந்தனை செய்ய முயன்ற போது மூளை வேலை செய்ய மறுத்தது. கண்ணை மெல்லிய புகை போல ஒன்று மறைத்தது; தலை பெரும் பாரமாய்க் கனத்தது.

சுற்றும் முற்றும் பார்த்தவளின் கண்களில் ஓர் அழகிய பச்சை நிற வாஷ்பேஸின் பட்டது.

சட்டெனக் கட்டிலில் இருந்து இறங்கினாள்.

கால்கள் துணியாய்த் துவண்டு தள்ளாடின.

என்ன ஆயிற்று?

நீட்டிய அவன் கையை ஏற்காது தானாகவே பெரு முயற்சியுடன் வாஷ்பேஸினுக்குச் சென்று முகத்தில் நீரை அடித்துக் கழுவினாள்.

புகை விலகி மூளை சற்றே சுறுசுறுப்படைந்தது.

நடந்தது நினைவுக்கும் வந்தது.

காரில் அவன் இவளது வாயைப் பொத்தி முகத்தில் ஏதோ நெடியுள்ள துணியை அழுத்தியதும். வினாடிக்குள் வந்த "மலைக்கள்ளன்" சினிமா நினைவில், இவள் மூச்சடக்கி மயங்கியதுபோலத் துவண்டதும், அவனும் புரிந்து கொண்டு, "கெட்டிக்காரி! 'மலைக்கள்ளன்' பார்த்தாயா. படித்தாயா?" என்று வினவியபடி, அடக்கமாட்டாமல் அவள் மூர்ச்சையடையும் வரையில் அந்த மருந்து நெடித்துணியை விடாமல் பிடித்ததும்... அத்தோடு கண்கள் இருண்டதும்...

நம்ப முடியாமல் வியப்பில் ஆழ்ந்தாள் சக்தி.

கையைத் திருப்பி மணி பார்த்தாள். மணி ஒன்பது. ரெயில் எப்போதோ போயிருக்கும்!

திருச்சி ஸ்டேஷனில் அத்தை ஏமாந்து போவார்கள்.

ஆத்திரத்துடன் திரும்பி, "ஏய் மிஸ்டர்! என்ன இது, அசட்டுத்தனம்?" என்று அதட்டினாள்.

அவள் படுத்திருந்த அதே கட்டிலில் அமர்ந்து, அருகில் தட்டி, "உட்கார், சொல்கிறேன்," என்றான் அவன் நிதானமாக.

''ராஸ்கல்!'' என்று சீறி விட்டு வேகமாக அறைக் கதவை நாடிப் போனாள் சக்தி.

''கதவு பூட்டியிருக்கிறது.''

காது கேளாதவள்போலச் சென்று கதவைப் பலமாகத் தட்டினாள்.

''உட்புறமாக...'' என்று சொல்லி முடித்தான் அவன்.

சினம் ஜிவ்வென்று தலைக்கேற, ''முட்டாள்! மரியாதையாகக் கதவைத் திற. நான் போக வேண்டும். ரெயிலைத் தவற விட்டு விட்டதாக மாமாவுக்குத் தந்தி கொடுக்க வேண்டும். இல்லையானால் அத்தை பயந்து போவார்கள்,'' என்றாள்.

அவன் அமைதியாகத்தான் தலையசைத்தான்.

''சக்தி! நீ ஒன்றைப் புரிந்துகொள்வது நல்லது. என்னைத் தவிர வேறு ஒரு மனிதனுக்கு மனைவியாகும் தகுதியோடு நீ இந்த அறையைவிட்டு வெளியே செல்லப் போவது இல்லை!'' என்றான் தணிவான குரலில் தெளிவாக.

எப்படி? ஒருகணம் புரியாமல் விழித்தாள் அவள்.

மறுகணமே முகம் ரத்தமெனச் சிவக்க, ''முட்டாள்! என்னை என்னவென்று நினைத்துக் கொண்டாய், ராஸ்கல்!'' என்று வெடித்தாள்.

கத்தும்போதே நெஞ்சில் சிலீர் என்றது.

அவனது அந்த வேட்டைப் பார்வை!... சுற்றி வளைத்துப் பிடித்து விட்டானா?

சீ! இது என்ன பிரமை என்று தலையைக் குலுக்கிக் கொண்டாள்.

மயக்க மருந்தின் பிரதிபலிப்போ என்னவோ, உடலில் பல வீனம் தெரிந்தது. தலை கனத்தது.

இந்த மாதிரி நேரத்தில் இது என்ன தொந்தரவு என்று பொறுமையிழந்தவளாய் உடல் உபாதைகளை மனதில் இருந்து அடியோடு ஒதுக்கினாள்.

அவனை முழுவதாக அவளால் நம்பவும் முடியவில்லை. ஆனால் மற்றப்படி அவளை இங்கே கொண்டுவரத் தேவையில்லையே.

கண்ணை மறைத்த கூந்தல் சுருளை விலக்கியபடியே அறை முழுவதுமாக விரைவாக நோட்டமிட்டாள்.

ஆயுதமாகக் கொள்ள - ஏன், தூக்கி எறியக்கூடப் பொருட்கள் அவ்வளவாக இல்லாத அறை.

அவன் அவள் எதிரே நின்றான். "சக்தி, இந்த இடத்தில் என் விருப்பத்தைத் தடுக்க உலகில் எதுவுமே இல்லை... இடி விழுவது தவிர..."

"இடியே விழும் அந்த வேலன் மனம் வைத்தால் உன் தலை மேலேயே விழும்!" என்று பொருமினாள் சக்தி.

அவளது எண்ண ஓட்டத்தை உணர்ந்தவன் போல், "அதற்கும் வழியில்லை. கட்டடத்தில் இடி தாங்கி இருக்கிறது!" என்றான். தொடர்ந்து, "சக்தி! உன்னைவிட நான் மிகவும் பலசாலி. வீண் முயற்சியில் ஈடுபடாமல் இணங்கி விடுவது நல்லது!" என்றவன் கையை நீட்டி மிருதுவாக அவளது தோளைத் தொட்டான்.

வேகத்துடன் கையை வீசினாள் சக்தி.

ஆனால் குறி வைத்த அடி அவன் முகத்தில் விழுமுன் அவன் கை அதைத் தடுத்து நிறுத்தியது.

மறுகணம் அவனது கைகளுக்குள் அவள் சிறைப்பட்டாள்.

ஒரு விநாடி அவளது உடம்பிலும் ஒரு நடுக்கம் ஓடுவதைச் சக்தி உணர்ந்தாள்.

மறுவிநாடி உலகில் உள்ள சகல நினைப்புகளையும் மறந்து தற்காத்துக் கொள்ளப் போராடத் தொடங்கினாள்.

இற்று விடும் போலக் கை கால்கள் தொய்வுற்று, தொண்டை வரண்டு, கண்கள் இருண்டு, உடம்பு அடியோடு வலுவிழந்து போகும் வரையில் சக்தி நம்பிக்கையுடனேயே போராடினாள்.

ஏதோ ஒரு வழியில் கடவுள் காப்பாற்றி விடுவார் என்ற நம்பிக்கை.

ஆனால் அவன் கைகள் எல்லை மீறுவதையும் தன்னால் தடுக்க முடியவில்லை என்பதையும் உணர்ந்தபோது இது ஒரு பொல்லாத வெறும் கனவுதானா என்றுகூட எண்ணித் தடுமாறி னாள்.

இல்லை, இது பொல்லாத கனவில்லை. பயங்கரமான கனவு என்பதை உணர்ந்ததும் அவனை விலக்க முடியாமல், "என்னால் முடியவில்லையே, ஒன்றும் முடியவில்லையே..." என்று புத்தி மறந்தவள்போல் உருப்போடலானாள்.

அவளது தொண்டை வறட்சியை உணர்ந்து, ஒரு டம்ளர் நீரைக் கொணர்ந்து பருக வைத்தான் சித்தார்த்தன்.

வேகமாகப் பருகிய நீரில் சற்றே சக்தி வர, அவனிடம் கைகூப்பிக் கெஞ்சினாள் சக்தி. "உங்கள் காலில் விழுகிறேன். தயவு செய்து விட்டுவிடுங்கள். நீங்கள் சொன்னது போல இனி யாரையும் மணந்து கொள்ளமாட்டேன். அய்யோ! என்னால் முடியாது... நிச்சயமாய் மாட்டேன். விட்டு விடுங்கள்!" என்று கண்ணீர் சொரிந்தாள்.

காலித் தம்ளரை வைத்துவிட்டு, ''என்னை மணந்தாக வேண்டும், சக்தி!'' என்று மீண்டும் அவளிடம் திரும்பினான், அவன்.

உடம்பெல்லாம் நடுநடுங்க. ''இதெல்லாம் தெரிந்தால் என் அம்மா மிகவும் வேதனைப்படுவார்களே. ப்ளீஸ்... தயவு....'' என்று கைகளில் முகம் புதைத்து விம்மினாள்.

ஆனால் அவன் அவளது எதிர்ப்பைப் போலவே இந்த மன்றாடலுக்கும் மதிப்புத் தரவில்லை.

நம்ப முடியாத பயங்கரம் நனவாகி நிகழ்கையில், அவள் அன்றைக்கு இரண்டாம் முறையாகச் சுய உணர்வை இழந்தாள்.



5

**ச**க்திக்கு மீண்டும் சுய உணர்வு திரும்புகையில் சித்தார்த்தன் அதே அறையில்தான் இருந்தான்.

கையில் சிகரெட் கரைய அவனது பக்கவாட்டுத் தோற்றம் அவளது இழப்பை முழுமையாக உணர வைத்தது.

கடவுள் இருப்பது உண்மை என்றால், இவனை ஏன் இன்னும் கொல்லவில்லை?

அதெல்லாம் சுத்தப் பொய்!

எதிர்பார்க்க... எண்ணமிட... திட்டம் போட... தீர்மானம் செய்ய... என்று வாழ்வில் எதுவுமே இல்லை.

இனிமேல்... என்ற வார்த்தைக்குப் பின் எதிர்காலம் எட்டிய தூரம் வரை பொட்டலாக, இனம் காண முடியாத கும்மிருட்டாய்த் தெரிந்தது சக்திக்கு.

செய்வது புரியாமல் திக்கித் திகைத்து மருண்டது மனம்.

பெரிய பெரிய கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றாக விழிகளில் திரண்டு உருண்டு வடியலாயின.

அவள் விழித்ததை உணர்ந்து திரும்பினான் அவன்.

சற்றுக் குனிந்து, 'சக்தி!' என்று மெல்ல அழைத்தான். ''சீர்படுத்த முடியாத தவறு எதுவும் நேர்ந்து விடவில்லை சக்தி. அதனால் கலங்கவோ கவலைப்படவோ ஒன்றும் இல்லை. உன் அம்மா...''

சக்தியின் திகைத்த மனதிலும் 'அம்மா' என்ற சொல் ஊடுருவிச் சென்றது.

அம்மா இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்கக் கூடும்?

தன் இழப்பின் வேதனையை மிஞ்சிக்கொண்டு தாயின் துயரம் மனதைத் தாக்கியது.

''அம்மா! அம்மா!'' என்று விக்கினாள்.

''நான் அம்மாவிடம் போகவேண்டும்!'' என்று குழந்தை போல் அழுதாள்.

''போகலாம், உன் அம்மா எதையும் தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள் - அதாவது உன்னை இழப்பது தவிர, வேறு எதையும்!''

அவன் சொன்னதை உணராதவள்போல், சக்தி தன் போக்கில் கேவிக்கொண்டு இருந்தாள்.

''சக்தி!'' என்றான் அவன் அழுத்தமாக.

விழிகளில் நீர் வடிய அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.

பார்த்த அளவில் 'பாவி பாவி பாவி!'' என்று பதறியது மனம். ''என்னவெல்லாம் செய்துவிட்டாய், பாவி!'' என்று விம்மினாள்.

''எதையும் சரி என்று ஆக்கக்கூடிய சக்தி நம்மிடம் இருக்கிறது. அதனால் நீ உணர்ச்சி வேகத்தில் தவறான முடிவுக்குப் போய்விடக்கூடாது. புரிகிறதா? உன் இழப்பை உன் தாயார் தாங்கமாட்டார்கள். அதனால் - அதனால் தற்கொலை செய்து கொள்வது இல்லை என்று சத்தியம் செய், அதன் பிறகுதான் உன்னை அங்கே அழைத்துப் போவேன்!'' என்றான் அவன்.

தற்கொலை! அவள் செத்தால் பிறகு அம்மா ஏது? ''தற்கொலை செய்து கொள்ளமாட்டேன்!'' என்றாள் விம்மலுடன்.

ஒரு கதவைக் காட்டி, ''அது குளியலறை. நீ வேண்டுமானால் குளித்து உடை மாற்றிக் கொள். பிறகு போகலாம்,'' என்றான் அவன்.

கிழிபட்ட ஆடைகளின் நினைவில் சக்தி விக்கித்து நின்றாள்.

''இதோ வருகிறேன்,'' என்று சென்று திரும்பினான் அவன்.

திரும்பி வந்தபோது கைகளில் ஒரு செட் உடைகள் இருந்தன.

சேலை, ரவிக்கை, உள்ளாடைகள்.

விலை உயர்ந்த புதிய பட்டுச் சேலையின் ஜரிகை சக்தியின் வெறித்த பார்வையில்பட்டது.

எதற்கு இந்த விலை?

அடிவயிற்றிலிருந்து மூண்ட அருவருப்பில் குமட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு.

முகம் கழுவுகிற பேசினுக்கு ஓடிச்சென்று மெய்யாகவே வாந்தியெடுத்தாள்.

தாங்க வந்த அவனைத் தீப்பட்டாற்போல விலக்கிவிட்டு, ''சா... சாதாரணமாக ஏதாவது...'' என்றாள் கண்ணீருடன்.

வாதாடாமல் சென்று மீண்டும் திரும்பி வந்தான் அவன்.

சாதாரணம் போலத் தோன்றினாலும் அதுவும் ஓரளவு விலை மதிப்பு உள்ளதுதான்.

ஆனால், சேலையின் அழகையோ நயத்தையோ சற்றும் உணராமல் கட்டிக்கொண்டு வந்தாள் சக்தி.

"முதலில் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்."

அவளுடைய உலகத்தையே அழித்துவிட்டு ஒன்றுமே நட வாததுபோல என்ன இலகுவாக உபசரிக்கிறான்.

முடிந்த வரையில் வேதனையை அடக்கிக் கொண்டு, "வேண்டாமே..." என்று மறுத்தாள் சக்தி.

அவன் மீண்டும் வற்புறுத்தவே, பொறுக்கமாட்டாமல், "அய்யோ! வேண்டாம்!" என்று கைகளில் முகம் புதைத்து விம்மினாள். குளித்ததில் சற்றே அடங்கியிருந்த கண்ணீர் மீண்டும் சரம் தொடுக்கலாயிற்று.

"சரி சரி, பரவாயில்லை, வா," என்று அழைத்துச் சென்றான் அவன்.

கார் செல்லும் வழி, காரை ஓட்டுபவன் எதையுமே சக்தி கவனிக்கவில்லை.

வழி நெடுகிலும் கார் கதவில் சாய்ந்தபடி அடித்துப் போட் டாற்போல் ஓய்ந்து போய் அமர்ந்திருந்தாள்.

வற்றாமல் வழிந்த கண்ணீர் தவிர மற்றப்படி உயிரற்ற உடல் போல இலக்கின்றி வெறித்தவாறிருந்தாள்.

எவ்வளவு நேரமோ கழித்து கார் நின்றது.

திடுக்கிட்டுத் திரும்பி அவனைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் அங்கங்கே கீறல்கள்...

'என்ன போராடி, என்ன, வென்று விட்டானே!' என்ற நினைவில் உதடு துடித்தது.

''இறங்கு சக்தி, வீடு வந்துவிட்டது,'' என்றான் அவன் சலனம் இன்றி.

கார் ஓசை கேட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த சீதை திகைத்தாள்.

காரில் இருந்து மெல்ல இறங்கி நடப்பதே சிரமம் போல வருகிறவள் சக்தி அல்லவா?

மகள் ரெயிலுக்கு அல்லவா போனாள்?

அவசரமாகக் கதவைத் திறந்து, ''சக்திம்மா...'' என்று வேகமாக வந்தாள்.

''அம்மா!'' என்று தழுதழுத்த அழைப்பின் பின் தாய் மேலேயே சாய்ந்துவிட்டாள் சக்தி.

விக்கலும் விம்மலும் பொங்கிப் பொருமிக் கொண்டு ஓடி வந்தன.

வயிறு கலங்க மகளை நிமிர்த்திப் பார்த்து, முடியாமல் போகவே, உடன் வந்து கல்லைப்போல நின்று கொண்டிருந்த அவன் முகத்தைப் பார்த்தாள்.

சிறிதும் தயக்கமின்றி, ''சக்தியிடம் சொல்லியிருக்கிறேன். உங்களிடமும் சொல்கிறேன், கவலைப்படவோ கலங்கவோ சிறிதும் தேவையில்லை. இந்தத் தவிப்பிற்குக்கூட அவசியம் இல்லை. சீர் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. இப்போது போய்விட்டுச் சிலநாள் பொறுத்து மீண்டும் வருகிறேன்,'' என்று திரும்பி நடந்தான்.

இரண்டு எட்டு வைத்தவன் நின்று திரும்பி, ''இனி எப்போதும் என் பாதுகாப்பும் கவனிப்பும் உங்களுக்கு இருக்கும். அதனால் அசட்டுத்தனமாக எதுவும் செய்ய முயற்சிக்க வேண்டாம்!'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

எதிர்பாராமல் விழுந்த இந்த இடியில் அந்த வீட்டின் இரு பெண்களும் கதிகலங்கிப் போனார்கள்.

உள்ளும் புறமுமான வேதனையில் சக்திக்கு அன்றே நல்ல காய்ச்சல் வந்துவிட்டது.

''அம்மா... அம்மா... அம்மா...'' என்று ஒரே அலட்டல்.

வாய்விட்டு ஒரு தரம் அழுவதற்குக்கூடச் சீதைக்கு வழியில்லை.

கையில் இருந்த சாதாரண மாத்திரைகளில் காய்ச்சல் சற்றும் குறையவில்லை.

மகளைத் தனியே விட்டுச் செல்லவும் துணிவின்றி, மருத்துவம் பார்க்கவும் வழியின்றி, சக்தியின் அருகிலேயே இருந்து தவித்தாள் பெற்றவள்.

திடீரென்று ''அய்யோம்மா...!'' என்று கூவினாள் சக்தி. ''யாரோம்மா யாரோம்மா...'' என்று சன்னல் பக்கம் காட்டிவிட்டு நடுநடுங்கினாள்.

'நம்மை யார் என்ன செய்ய முடியும்!' என்று துணிவுடன் பார்க்கும் மகளா என்று வேதனைப்பட்டபடி எழுந்து சென்று பார்த்தாள் சீதை.

அங்கே மெய்யாகவே ஒருவன் நின்றிருந்தான்.

ஆனால் சீதையைக் கண்டதுமே கைகூப்பி விட்டுப் போனான்.

சற்று நேரத்தில் ஒரு டாக்டர் காரில் வந்து சக்தியைப் பார்த்து மருந்து கொடுத்துவிட்டுப் போனார்.

அது ‘அவ’னுடைய ஆள் என்பது புரிந்தது.

சன்னல் பக்கம் கண்ட அவன் அங்கேயே சுற்றுவது சீதைக்குத் தெரியவே செய்தது.

ஆனால் என்ன செய்வது, எது செய்யக்கூடியது என்று ஒன்றுமே புரியவில்லை.

★ ★ ★

சீதையின் கணவன் சிவராமன் ஒரு தனிமைப் பிரியன்.

நகரம் பெருகிவரும்போது நரகமாகிவிடும் என்று ஊரை விட்டு விலகியே வீட்டைக் கட்டியிருந்தான்.

இத்தனை ஆண்டுகள் கழித்து இப்போதுதான் மெயின் ரோடின் பக்கமாகச் சில புதிய வீடுகள் முளைத்திருக்கின்றன.

உயிருக்கே உயிராக ஒரே சினேகிதன்.

சிவராமன் இறந்தபோது பெரிதும் உதவியாக இருந்தவர்கள் அந்தக் குடும்பத்தவர்கள்தான்.

அவர்களும் பத்து ஆண்டுகளாக இருப்பது திருச்சியில். அடுத்து, தினம் கண்டு பழகுவது காய்க்காரி கன்னியம்மாதான்.

கன்னியம்மாவின் கணவன் ஒரு முரட்டு ரௌடி.

அடிக்கடி குடித்துவிட்டு அடித்தான் என்று சீதையிடம் வந்து அழுதுவிட்டுப் போவாள்.

ஆனால் அவன் முரடன் என்பதாலோ என்னவோ அவனுடைய மனைவி வந்துபோகும் பழக்கம் உள்ள வீட்டிற்கு இதுவரை எந்த விதமான தொல்லையும் இல்லை.

இன்றுதான் மகா பாரமாக வந்து இறங்கிவிட்டது.

அன்று சிவராமின் இழப்பை நண்பருடன் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

இன்றைய இழப்பு அப்படிப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இல்லை.

இனி என்ன செய்யமுடியும் என்று சீதை கலங்கி நின்றாள்.

காய்ச்சல் குறைந்து மூளை சிந்திக்கத் தொடங்கிய போது உலகம் ஒரே வேதனையாகிப் போயிற்று சக்திக்கு.

எழுந்திருக்க முடியவில்லை.

எண்ணும் போதெல்லாம் உடம்பு தீயாய் எரிந்தது.

தாங்கமாட்டாத அருவருப்பில் உடல் கூசிச் சிலிர்த்தது.

கவிழ்ந்து கிடந்து கண்ணீர் பெருக்கிய மகளின் முதுகை வருடியபடி, ''கனவு என்று மறந்துவிடப் பாரம்மா!'' என்று தேற்ற முயன்றாள் தாயார்.

தாயின் மடியில் முகம் புதைத்து, ''முடியலியே, அம்மா! மறக்க முடியலியே! அய்யோ, என்ன தப்புமா செய்தேன்? இப்படி எல்லாம் நடந்துவிட்டதே... என்னால் தாங்க முடியலியே!'' என்று கதறினாள் சக்தி.

வயிற்றோடு மகளை அணைத்தபடி, அமர்ந்திருந்த தாயின் கண்களில் இருந்து பெருகிய நீர், மகளின் சென்னியில் விழுந்தது.

திடுக்கிட்டாற்போலத் தலையைத் தூக்கிப் பார்த்த சக்தியின் முகம் மேலும் கலங்கியது. ''அழுகிறீர்களே அம்மா. உங்களை எப்பவும் சந்தோஷமாக வைத்துக் கொள்ளணும் என்று நினைத்தேனே. இப்போ என் முன்னாலேயே அழுகிறீர்கள்!'' என்று குமுறினாள்.

:

எங்கோ ஓர் அண்டங்காக்கை கடூரமாகக் கத்திற்று.

பதறிப் போய்த் தாயை இறுகக் கட்டிக்கொண்டு, ''அது காக்கைதானேம்மா!'' என்று நடுங்கினாள்.

உடனேயே, ''அம்மா, விடியுமுன்தான் அதிக இருட்டாக இருக்கும் என்று படித்திருக்கிறேன். ஆனால், இந்த இருட்டிலே, ஒரு சின்ன வெளிச்சம்கூடக் காண முடியாத இருட்டிலே ஒரே பயம்மா இருக்கிறதேயம்மா!'' என்று விம்மினாள்.

வாயைத் திறந்தால் தானும் கதறிவிடுவோமோ என்ற பயத்தில் வாயை இறுக மூடிக்கொண்டு அமர்ந்திருந்தாள் தாய்.

வெகு சிரமத்துடன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''அழக்கூடாது கண்ணம்மா. அழுதால் காய்ச்சல் அதிகமாகத் தானே ஆகும். தூங்குடாம்மா. மருந்து குடிக்கிற நேரம், குடித்துவிட்டுத் தூங்கு!'' என்று எழுந்தாள்.

''தூங்கிக்கொண்டே இருந்தால் நன்றாக இருக்கும்மா. விழித்தவுடனேயே நெஞ்சுக்குள்ளே பிசையத் தொடங்கி விடுகிறதே!'' என்று அரற்றினாள் மகள்.

தாயின் இதமான பணிவிடையில் மெல்ல மெல்ல அலட்டல் குறைந்து உறங்கலானாள் சக்தி.

ஆனால் சீதை?

ஆற்றுவாரோ தேற்றுவாரோ இல்லாதபடி, வெளிப்படையாக அழவும் முடியாதபடி உள்ளுக்குள் குமைந்தாள்.

சின்ன வயதில் இருந்து வளர்த்து வாழ்ந்த விதத்தில் இதை ஒரு விபத்து, இனி அடிபட்ட காயம் ஆறியதும் மறந்துவிட வேண்டிய ஒன்று என்று ஒதுக்கவும் முடியவில்லை.

இன்றைய போக்கோடு ஒத்து எதிர்த்து நிற்கவும் முடியவில்லை.

கோர்ட், கேஸ், போலீஸ் என்று போகத் தைரியம் இல்லை.

தைரியம் இல்லாதது மட்டும் அல்ல. இது பறைசாற்றப்பட்டு நாலு பேர் அலசி ஆராய்வதற்குரிய பொருளாக மகள் ஆகி விடக்கூடும் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

மேலும் பெண்ணின் தவறு சிறிதும் இல்லாத போதும் இதைப் பெண்ணின் மீது முழு இரக்கத்துடன் எண்ணிப் பார்க்கும் பக்குவம் நம் சமுதாயத்தில் இன்னும் வரவில்லை.

பார்ப்பவர் கண்களில் சக்தி சுவாரசியமானதெரு வம்புக்குள் ஆகக்கூடும் என்ற நினைவில் நெஞ்சு உலர்ந்து போயிற்று பெற்றவளுக்கு.

பெண் படும் பாட்டைப் பார்க்கையில் மானம் - உயிர் என்றெல்லாம் கூறி மகளை வளர்த்தது தவறோ என்றுகூட மயங்கியது தாய் மனம்.

சீதைக்கு ஒரு பழக்கம்.

மனத்தில் ஏதேனும் கலக்கம் ஏற்படுமானாலும் சரி; மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி; கணவருடைய படத்தின் எதிரே அமர்ந்துகொண்டு அவர் இருப்பது போலவே பாவனை செய்து விஷயத்தைக் கலந்து கொள்வது.

சக்தி சிறுமியாக இருந்தபோது எப்போதேனும் உடல் நலமின்றிக் கிடந்த சமயங்களில் இவ்வாறு வருந்தி முறையிட்டு இருக்கிறாள். மாமியார் மறைந்தது அடுத்து வந்தது.

பலராமனின் தாத்தா உடல் நலம் கெட்டு அதன் காரணமாக அவர்களுடைய குடும்பம் திருச்சியில் குடியேற நேர்ந்தபோது தான் கடைசியாகச் சீதை வேதனை என்று கணவனை நாடியது.

ஆனால், இப்போது இடைப்பட்ட அத்தனை காலத்துக்கும் சேர்த்துக் கணவன் படத்திடம் சென்று கண்ணீர் வடித்தாள்.

மகளை உறங்க வைத்துவிட்டுக் கணவனிடம், "பாருங்கள்... இப்படித் துடிக்கிறாளே... இந்தத் தவிப்பு நேரும் என்று தெரியாமல் போய் விட்டீர்களே!" என்று அழுதாள்.



6

சக்திக்குக் காய்ச்சல் மெல்ல இறங்கத் தொடங்கியது.

அன்று கோயில் விபூதியும் குங்குமமும் தபாலில் வந்தது.

மாதா மாதம் குலதெய்வத்தின் கோயிலுக்குப் பத்து ரூபாய் அனுப்புவாள் சீதை.

கோயிலில் இருந்து பிரசாதமாகத் திருநீறும் குங்குமமும் வரும்.

நொந்திருந்த மனதுக்கு அன்று பிரசாதம் வந்தது சற்று இதமாக இருந்தது.

திருநீறைப் பூசிக்கொண்டு மகளிடம் சென்று, "திரும்புகிறாயா சக்தி? திருநீறு வந்திருக்கிறது. பூசிவிடுகிறேன்!" என்றாள் அன்பாக.

"வேண்டாம்மா!" என்று தாயின் கையை விலக்கினாள் சக்தி.

"ஏண்டி?" என்று சீதை திகைத்தாள்.

"கடவுள் இருப்பதாக நான் எண்ணவில்லை. அதெல்லாம் சும்மா இட்டுக் கட்டி வைத்த பொய்!" என்றாள் மகள் தீவிர வெறுப்புடன். "நம்மைப் போல ஏமாளிகளுக்காகப் பிழைக்கத் தெரிந்த நாலுபேர் கட்டி வைத்த பொய்க் கதை."

சீதை அதிர்ந்து போனாள்.

''சும்மாகூட அப்படிச் சொல்லாதே, சக்தி. அதெல்லாம் பாவம். உன் அப்பா போனபோது நீ ஒரு வயதுக் குழந்தை. ஒரு கடன் வாங்காமல், யாரிடமும் கை நீட்டி உதவி பெறாமல் இருபது ஆண்டுகள் உன்னை வளர்க்க முடிந்ததே அது எப்படி? எல்லாம் அந்த இறைவன் போட்ட பிச்சைதான்!'' என்றாள் தாயார்.

''ஒரு போதும் இல்லை!'' என்றாள் சக்தி சினத்துடன். ''கை கன்றிக் காய்த்துப் போகும் அளவுக்கு நீர் இறைத்து, பாத்தி கட்டி, உரம் போட்டு, உடல் தேய உழைத்தீர்கள். கடன் வாங் காமல் என்னை, வளர்த்தீர்கள். மற்றப்படி நீங்கள் சோம்பி யிருந்து வருந்திக் கொண்டிருந்தபோது கடவுள் தம் கூரையைப் பிரித்து உங்கள் கையில் கொட்டிக் கொடுத்துவிடவில்லை. உடல் ஓய உழைத்துவிட்டு நல்ல பெயரை மட்டும் இல்லாத கடவுளுக்கு ஏன் கொடுக்கிறீர்கள்?'' என்றாள் படபடப்பாக.

''அப்படிச் சொல்லாதே, சக்தி! எத்தனை முயன்றாலும் கட வுள் இல்லாமல், எந்தக் காரியமும் நடந்துவிடாது!'' என்று எடுத் துச் சொன்னாள் சீதை.

''அதெல்லாம் இல்லையம்மா!'' என்று உதடு துடிக்க நிமிர்ந் தாள், சக்தி. ''அன்று... அன்று நான் கடைசிவரை கடவுளை நம் பினேன் அம்மா. ஒரு தந்தையைப் போல வந்து காப்பான் என்று நினைத்திருந்தேன். கனகவேல் கொண்டு என் மானத்தைக் காப் பாற்றுவான் என்று சர்வ நிச்சயமாக எண்ணியிருந்தேன். அந்த நினைவின் பலத்திலேயே போராடினேன். கடவுள் இருந்திருந் தால் ஏனம்மா எனக்கு இந்தத் தண்டனை? நீங்கள் என்ன பிழை செய்தீர்கள் என்று உங்களுக்கு இந்த வேதனை?

''எப்போதோ சிறுவயதில் அறியாமல் பிழை செய்திருப் போம் என்று சொல்லாதீர்கள். அந்த மாதிரித் தவறுகளுக்கு எல் லாம் இவ்வளவு குரூரமாக ஒருவன் தண்டிப்பதானால் அவன்

சைத்தானாக இருக்க முடியுமே தவிர கடவுளாக நிச்சயமாக இருக்க முடியாது. முடியவே முடியாது!'' என்றவள் தன்னை மீறிக் கதறத் தொடங்கினாள்.

பதில் சொல்லித் தேற்ற முடியாமல் மகளை அணைத்துக் கொண்டு, ''விட்டு விடும்மா என் கண்ணே. வேண்டாம்டா. மனதை அமைதிப்படுத்திக் கொள்!'' என்று தானும் கண்ணீர் வடித்தாள் சீதை.

இதற்கெல்லாம் முடிவு என்பதே கிடையாதா? விடிவு காலமே வராதா என்று தவியாய்த் தவித்தது தாய் மனம்.

ஒரு முடிவும் வந்தது.

ஆனாலும் அது விடிவுதானா என்பதுதான் சந்தேகத்துக்கு இடமானதாயிற்று.

★ ★ ★

**உ**டல் சுகவீனம் மறைந்த பிறகும் சக்தி ஒடுங்கியே போனாள்.

முகத்தில் பளிச்சிடும் அந்தத் துடிப்பும் ஆர்வமும் யாரோ எட்டிப் பறித்து எறிந்து விட்டாற்போல அடியோடு மறைந்தே போய் நடைபிணம்போல் நடமாடினாள்.

எந்த நேரமும் விட்டத்தைப் பார்த்தபடி குருட்டு யோசனை.

இடையிடையே அருவருப்பில் உடல் குலுங்கத் தொடர்ந்து வரும் கண்ணீர்.

தாய்க்குப் புரியாதா?

தைரியமூட்ட எவ்வளவோ முயற்சி செய்தாள்.

''ஏதோ நடக்கிறபோது சகதி தெறித்துவிட்டது என்று மறந்து விடப் பாரம்மா,'' என்றாள் ஒரு தரம்.

''முடியலியே...'' என்று தவித்தாள் மகள். ''அம்மா! படிக்கும்போது என் பெயரில் புள்ளியை அழித்துவிட்டு சகதி, சகதி என்று கேலி செய்வாள் ஒரு பெண். அது உண்மையாகிப் போயிற்றேம்மா... இப்போது என்ன செய்யட்டும்? இப்போது என்னால் ஒன்றுமே செய்வதற்கு இல்லையேம்மா!''

அடைத்த நெஞ்சை நீவிவிட்டுக்கொண்டு, ''பாரம்மா, பஸ்ஸிலே போகிற எவனோ துப்புகிறான். எங்கோ போகிற நம் உடம்பில் பட்டுவிட்டால் அதற்காக இப்படி உடைகிறதா, கண்ணு? ஏதோ நம்மால் இயன்ற முயற்சி செய்கிறோம். மீறி ஒன்று நடந்து போனால் துக்கப்பட்டுக் கொண்டே இருக்கலாமா? கூடாதும்மா...'' என்றாள் சீதை.

எதையோ யோசிப்பவள்போல் வெறித்துவிட்டு மெல்லிய குரலில், ''எனக்கு மனதில் தைரியமே இல்லாமல் போய்விட்டது, அம்மா! என்னமோ... யாருமே... நமக்கென்று இல்லாத மாதிரி... ஏதோ இன்னும் பெரிய துன்பம் எல்லாம் வரப் போகிற... மாதிரி... வேறே நமக்குச் சுகம் என்று ஒன்றும் இல்லாத மாதிரி இருக்கிறது, அம்மா. எந்நேரமும் நெஞ்சுக்குள் திடுக்கென்று பயமாய்... எல்லாவற்றையும்விட நான் ரொம்பவும் அழுக்காய் அசுத்தமாய் ஆகிவிட்டாற்போல இருக்கிறதே!'' என்று தயங்கித் தயங்கித் தாயிடம் உரைத்தவள் சட்டெனக் கைகளில் முகம் புதைத்து விசும்பினாள்.

''மகளே! எத்தனை கதைகள் வந்திருக்கின்றன. இதிலே உன் தப்பு ஒன்றும் இல்லை சக்தி! தைரியமாக இருக்கவேண்டும். என் தங்கம் அல்லவா?'' என்று அடிபட்ட குழந்தையைத் தேற்றுவதுபோல ஆயிரம் விதமாய்ச் சொல்லித் தேற்றினாள்.

சக்தி சற்று சாந்தப்பட்டாற்போலத் தோன்றிய போதும், அவள் முகத்தில் பழைய துடிப்பு எள்ளளவும் அரும்புவதாக இல்லை. நிராசையும் அகலுவதாக இல்லை.

இப்படியே விட்டால் மகள் ஓட்டினுள் நத்தையாக ஒடுங்கி விடுவாள் என்று புரிந்தது.

ஆறுதலும் தேறுதலும் பலனளியாது போகவே, மகளை வேறு வழியில் தூண்ட முயன்றாள் சீதை.

''வேலைக்குப் போய் வாம்மா,'' என்று கிளப்ப முயன்றாள்.

''ஊகூம்...'' என்ற ஒரே ஒரு தலையசைப்புதான் பதிலாகக் கிடைத்தது.

''நாடகம் சினிமாவுக்குப் போவோமா? அல்லது தோழி வீட்டுக்குப் போகிறாயா?''

எந்தெந்த வழியில் அவளது கவனத்தைத் திருப்ப முயன்றாலும் சக்தி மறுத்தாள்.

சற்றுக் கண்டிப்புடன் பேச முயன்ற போதோ, ''எங்கேயும் போகப் பிடிக்கலியேம்மா. யார் முகத்தையும் பார்க்கத் தகுதியில்லாத மாதிரி... ரொம்ப இழந்து போன மாதிரி அவமானமாக இருக்கிறதேம்மா!'' என்று கண்ணீரை அடக்கிப் பார்த்தும் முடியாமல் விம்மியபடியே தாயின் மடியில் விழுந்தபோது அந்த அன்னையாலும் தாங்க முடியாது போயிற்று.

பேச்சிழந்து போய் இயந்திரம்போல் மகளின் முதுகை வருடியபடி தானும் கண்ணீர் வடித்தாள்.

சற்றே விசிப்பு அடங்கிய பிறகு, ''வீட்டை விட்டு வெளியே போவதென்றால் மிகவும் பயமாக இருக்கிறது, அம்மா!'' என்று பூஜையறைப் பக்கம் ஒரு தரம் பார்த்துவிட்டு வெறுப்புடன் திரும்பினாள் சக்தி. ''நமக்கு யாருமே இல்லையேம்மா! திரும்பவும் ஏதேனும்... அம்மா, எனக்கு நெஞ்செல்லாம் நடுங்குகிறதே!'' என்று சக்தி கூறிய போது மெய்யாகவே அவள் உடம்பில் ஒரு நடுக்கத்தைச் சீதை உணர்ந்தாள்.

வீட்டுத் தலைவனின் இழப்பு அந்த விநாடியில் பூதாகரமாகத் தெரிந்தது.

ஆண் துணை இல்லாத அவலம் வெகுவாகப் பாதித்தது.

மகள் பயப்படுவதுபோல இன்னொரு விபத்து நேராது என்று என்ன நிச்சயம்?

ஒருவனுக்கு வந்த துணிவு இன்னொருவனுக்கு வந்தால்?

இன்னொரு நிகழ்ச்சி இப்படி நடந்துவிட்டால் பிறகு சக்தியை உயிரோடு பார்க்க முடியாது என்பது சீதைக்கு நன்றாகவே புரிந்தது.

தன்னளவில் தைரியம் அழிந்து போகும்போது இன்னொரு துணை வந்தால்தான் மீண்டும் மனது நிமிரும்.

அந்தத் துணை...

மகளுடைய கூந்தலை முகத்திலிருந்து விலக்கியபடி மிருதுவாக, ''பல்ராமை அனுப்பச் சொல்லி அத்தைக்கு எழுதட்டுமா கண்ணு?'' என்று கேட்டாள் சீதை.

திடுக்கிட்டாற்போல மலங்க விழித்தாள் சக்தி.

சித்தார்த்தன் அத்துமீறித் தொட்ட உடம்பை அதே ஆசையுடன் இவனும் பார்ப்பானே!

முன்பு வெட்கமும் இனம் புரியாத இன்பமுமாகச் சிலிர்த்த உடல் இப்போது தாளமாட்டாத அருவருப்பினால் குலுங்கிப் போயிற்று.

கண் சிவந்து, முகம் சிவந்து, ''வேண்டாம்மா. வேண்டாம்மா, அய்யோ! வேண்டாம்மா...'' என்று அடிபட்ட ஜீவனாக வாய்விட்டுக் கதறியவள் சட்டென்று இரு கைகளாலும் வாயைப் பொத்திக்கொண்டு ஓசையற்றுக் குலுங்கினாள்.

''ஏன் இந்தப் பேச்சை எடுத்தேன்?'' என்று தன்னையே நொந்தபடி மகளைத் தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள் சீதை.

''இதற்கு என்னதான் முடிவு? ஒரு வகையிலும் வெளிச்சமே காணவில்லையே! ஒரு வழி தெரியலையே! ஈசா! ஒரு வழி... ஒரு வழி காட்டு!'' என்று இரவு பகல் இரத்தக் கண்ணீர் வடித்தது அந்தத் தாய் மனம்.

ஒரு வழி கிடைத்தது.

அது எந்த வழியானாலும் சரி என்று பற்றிக்கொள்ள அவள் பறந்த அந்த வேளையில் கடைசியாக ஒரு வழி கிட்டியது.

★ ★ ★

தன் வாழ்வில் இந்த நாற்பத்தோரு வருடங்களில் சீதை விதியிடம் குரூரத்தை அனுபவித்தது உண்டு.

ஆனால் மனிதர்களிடம் அல்ல.

முதலில் தாயைப் பறித்தது விதி.

பின் வந்த சிற்றன்னையும் அன்பைக் கொட்டியவள் அல்லதான். ஆயினும் அடாது நடத்தியவள் இல்லை.

சிவராமனை மணந்த பின் இரண்டு ஆண்டுகள் அன்பிலேயே முக்குளித்தாள்.

ஒரு குறுகிய பொற்காலம்!

இரண்டு பஸ்களின் மோதலில் அவளுடைய கணவனைப் பறித்து விதி மீண்டும் தன் குரூரத்தைக் காட்டியது.

ஆனால், அப்போதும் அவருடைய அலுவலகத்தினர், முதலாளி, அவளுடைய தோழி... அத்தனை பேரும் அன்பையே பொழிந்தனர்.

தலையில் விழுந்த இடியால் திக்பிரமித்திருந்த அவளிடம் இன்ஷுரன்ஸ் தொகை, காப்பு வைப்புத் தொகைகள், அலுவல கத்திலே திரட்டியது என்று கணிசமானதொரு தொகையைத் தந்தனர். அதையும் வகையாக டெபாசிட் செய்து வட்டி வரும் படி ஏற்பாடும் செய்தனர்.

மேலாக மாமியார்!

மகனை இழந்த துக்கத்தை ஒருபுறம் ஒதுக்கித் தாய்க்குத் தாயாக, மருமகளை உண்ண வைத்து உறங்க வைத்து, கைக்கு ழந்தையான சக்தியையும் பராமரித்து, பிறகும், துணைக்குத் துணையாக இருந்தவர்.

மாமியாரை நினைக்கையில் சீதைக்கு இப்பவும் கண்கள் பனித்தன.

மாமியார் மறைந்த பிறகு தனித்தே தாயும் மகளுமாக வாழ்ந் தபோதும் அவர்களுக்கு யாராலும் எந்தத் தொல்லையும் நேர்ந் தது இல்லை.

சும்மா இருக்கும்போது வேண்டுமென்று தீமை செய்வோர் யாரும் இல்லை என்ற நம்பிக்கை மனத்தில் இருந்தது. வாழ்வும் நிம்மதியாகவே நடந்தது.

ஆனால், இந்த அடி மனதை ஆட்டிவிட்டது.

உலகில் இவன் ஒருவன்தானா திமிரெடுத்தவன்?

இவனுக்கும் அண்ணன்மார் எத்தனை பேர் இருக்கக் கூடும்?

அவர்களிடமிருந்து குழந்தைபோலக் கலங்கும் அவளைக் காப்பவர் யார்?

பலராம் நல்ல பையன்.

நடந்ததை அவனிடம் சொல்லியே கேட்கலாம் என்று சீதை நினைத்திருந்தாள்.

ஆனால் அவன் பெயரை எடுத்தாலே சக்தி பதறிக் கத்துகி றாளே.

அன்று அந்தப் பாவி, ''சீர் செய்யமுடியாதது ஒன்றும் இல்லை!'' என்றான்.

ஆனால் எந்த வகையிலும் இதைச் சீர் செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை கொஞ்சமும் எழுவதாக இல்லை.

விடிந்தால், பொழுது முடிந்தால், இதே யோசனையில் செக்கு மாடு போலச் சுழன்றாள் சீதை.

வெளிக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

சிந்தனை கலைந்து எட்டிப் பார்த்தாள் சீதை.

கன்னியம்மாதான்.

''கன்னியம்மாவிடம் காயை எடுத்துக் கொடம்மா!'' என்று மகளை ஏவினாள்.

ஓசையற்று அருகில் வந்து, ''நீங்களே கொடுத்துவிடுங்கள் அம்மா. எனக்கு... எனக்கு...'' என்றவள் முகத்தை மூடிக் கொண்டு உள் அறைக்குள் சென்று கதவைச் சாத்திவிட்டாள்.

மன வேதனையை மறைத்தபடி காய்க்காரியிடம் காயைக் கொடுத்துவிட்டுக் கணக்குப் பார்த்துப் பணத்தை வாங்கி வைத்தாள் சீதை.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''பாப்பா எங்கம்மா? அன் னிக்கு ஜொரத்தோட பார்த்தது. கண்ணிலேயே காணலி யேம்மா!'' என்று விசாரித்தாள் கன்னியம்மா.

''இன்னமும் முழுக்கக் குணமாகவில்லை, கன்னியம்மா. படுத்திருக்கிறாள். அப்புறம் பார்க்கலாமே,'' என்று அவளை அனுப்பிவிட்டுப் பெருமூச்சு விட்டாள் சீதை.

தபால் வரும் நேரமும் தாண்டியபின், இனி வருவதற்கு யாரும் இல்லை என்று நிச்சயப்படுத்திக் கொண்டு துவைத்த துணிகளை எடுத்துப் போய் பக்கக் கம்பிகளில் காயப் போடத் தொடங்கினாள் சக்தி.

கடைசிச் சேலையை விரித்துப் போடும்போது வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்கவும் பதட்டத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

காரிலிருந்து இறங்கியவன் சித்தார்த்தன்

பீதியுடன் கை கால் உதற உள்ளே ஓடினாள் சக்தி.

கூடத்தில் எதிர்ப்பட்ட தாயின் மேல் விழுந்து இறுகப் பற்றிக் கழுத்து வளைவில் முகம் புதைத்து, ''அம்மா... அம்மா...'' என்று நடுங்கினாள்.

''என்னடி சக்தி? என்னடாம்மா...?'' என்று சீதை விசாரித்த போது அவனும் உள்ளே வந்துவிட்டான்.

அவன் கைகளில் சித்திர வேலைப்பாடுகள் செய்த ஒரு பெரிய வெள்ளித் தட்டு.

சீதையின் வெறுத்த பார்வையைச் சலனமின்றிச் சந்தித்து, ''இப்போது மறுக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்'' என்றான் சித்தார்த்தன்.



## 7

**சி**த்தார்த்தனின் பேச்சைக் கேட்டதும் ஒருகணம் இவன் ராட்சசனா என்று தோன்றியது சீதைக்கு.

நடுக்கத்துடன் தோளில் முகம் புதைத்திருந்த மகளின் முதுகைத் தடவியபடியே சற்று நேரம் அவனை வெறித்துப் பார்த்தாள்

பிறகு மெல்ல, ''ஆமாம்,'' என்றாள்.

தட்டை நீட்டியபடி அவன் இரண்டு எட்டு முன்னே எடுத்து வைத்தான்.

''நான் வாங்கிக் கொள்ளக்கூடாது. பொறுங்கள்,'' என்று அவனைத் தடுத்துவிட்டு மகளை விலக்கி நிறுத்தினாள் சீதை.

''சக்தி, அவனிடம் அந்தத் தட்டை வாங்கிக்கொள்,'' என்று உத்தரவிட்டாள்.

பொருள் விளங்காதவள் போல் விழித்தாள் சக்தி.

''போய் அந்தத் தட்டை வாங்கடி!'' என்று அதட்டினாள் அன்னை.

அப்போதுதான் தாய் சொன்ன வார்த்தைகளின் பொருள் மனத்தில் ஊடுருவ, மலைத்துப் போய், 'அம்மா!' என்றாள் சக்தி - கண்கள் கண்ணீருடன் விரிய.

நடுங்கத் தொடங்கிய உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு சில கணங்கள் அசையாமல் நின்றாள்.

பிறகு, ''சொல்வது புரியவில்லை? தட்டை வாங்கடி!'' என்று கடுமையான குரலில் விரட்டினாள்.

அன்றுவரை அறிந்திராத அந்தக் குரலுக்குப் பணிந்து திரும்பி ஓர் அடி எடுத்து வைத்தாள் சக்தி.

ஆனால் அவன் முகம் கண்டதுமே மீண்டும் திரும்பி விட்டாள். ''அய்யோ! வேண்டாம்மா!'' என்றாள் குரல் நடுங்க.

சற்றும் எதிர்பாராத விதமாகச் சக்தியின் கன்னத்தில் சுளீர் என்று ஓர் அறை விழுந்தது.

திகைத்துப் போய் நின்றாள் சக்தி.

''அவளை அடிக்க வேண்டாம்!'' என்றான் அவன்.

வறண்ட குரலில், ''இவள் இன்னமும் என் மகள்தான்!'' என்று அவனுக்குப் பதில் கொடுத்துவிட்டு, கன்னத்தைத் தாங்கியபடி நின்றிருந்த மகளிடம் திரும்பினாள் சீதை. ''போய் வாங்கி வா என்கிறேன்,'' என்று ஆங்காரமாகக் கூச்சலிட்டாள்.

அதே திகைப்புடன் சக்தி மீண்டும் அவனை நோக்கித் திரும்பினாள்.

இப்போது அவனாகவே இரண்டு எட்டு எடுத்து வைத்துத் தட்டைச் சக்தியின் கைகளில் வைத்தான்.

''போய்ப் பூஜையறையில் வையடி!'' அதே ஆங்காரக் கத்தலிலேயே மகளை அனுப்பி வைத்தாள் சீதை.

குற்றம் சாட்டும் பார்வையுடன், மகள் சென்றதும் தாய் சித்தார்த்தனிடம் திரும்பினாள். ''இவள் அப்பா சாகும்போது இவளுக்கு வயது ஒன்றுதான். சாகிற நிலைமையிலேயே மகளைக் கண் கலங்க விடக்கூடாது என்று என்னிடம் வாக்கு வாங்கிக் கொண்டார் - உங்களிடம் பணம் இருந்தாலும் குணம் சரியில்லை; ரொம்பவும் கெட்ட பெயர் உங்களுக்கு என்றெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டேன்! சக்தியும் மனதைப் பெரிதாக நினைக்கிறவள். அதனாலேதான் அப்போது உங்களிடம் மறுத்தேன். அதோடு...''

சீதை தயங்கியபோது, ''பலராம்!'' என்று அமைதியாக எடுத்துக் கொடுத்தான் சித்தார்த்தன்.

''ஆமாம்... அவன்தான். ஒரு தப்புச் சொல்லமுடியாத பிள்ளை, மேலும்...ச்சு, அதைப் பற்றி இப்போது ஒன்றும் இல்லை. அவள் பெயர் கெட்டு விடக்கூடாதே என்றுதான் அங்கே அனுப்ப எண்ணினேன். அவளையே கெடுத்து விடுவீர்கள் என்று எண்ணவில்லை... அவள் அப்பாவிடம் சொன்ன

மாதிரி அவளைக் கண் கலங்காமல் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தேன். விதி வேறு மாதிரி இருந்திருக்கிறது இப்போதெல் லாம் அவள் கண்ணீர் நிற்பதே இல்லை!'' என்று தன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் சீதை.

''நான் நிறுத்தி விடுவேன்!'' என்றான் அவன் தன்னம்பிக் கையுடன்.

சிறு ஏளனத்துடன் நிமிர்ந்து பார்த்துவிட்டு, 'அது அவ்வளவு சுலபம் அல்ல. நீங்கள் நினைக்கிற மாதிரி சக்தி சாதாரணப் பெண் இல்லை. ஆனாலும் முயன்று பாருங்கள்,' என்று கசந்த குரலில் கூறினாள் சீதை.

தன்னை மீறி வெளி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''இங்கே எடுத்துச் செய்ய ஆள் இல்லை. ஏதோ நீங்களே நடத் துங்கள். ஆனால் மிகவும் எளிமையாக இருக்கட்டும். பெரிதாக என்றால் அவள் தாங்க மாட்டாள்!'' என்று முடித்தாள்.

''எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் அடுத்த வாரமே வைத்துக் கொள்ளலாம் அல்லவா?'' என்று கேட்டான் சித்தார்த்தன்.

''செய்யுங்கள்.''

வந்த காரியம் முடியவும் அவன் சென்றுவிட்டான்.

சக்தி புழுவாய்த் துடித்தாள்.

''வேண்டாம்மா, வேண்டாம்மா, வேண்டாம்மா...'' என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சினாள்.

ஆனால் இத்தனை காலமும் மகளின் காலில் முள் தைத்தால் கூடக் கனிந்து உருகிய தாயார் இப்போது கல்லாய் நின்றாள்.

நெருங்கி நெருங்கிப் பேச முயன்றபோதெல்லாம் விலகி விலகிப் போனாள்.

பிடித்து வைத்துப் பிடிவாதமாகப் பேசியபோது, ''அப்படி யானால் வேறு யாரை மணக்கப் போகிறாய்? பலராமையா?'' என்று அழுத்தமாகக் கேட்டாள் சீதை.

மீண்டும் அடி விழுந்தாற் போலச் சக்தி நகர்ந்தாள்.

''ஒன்று அவனை வரச்சொல்லி நடந்ததைக் கூறிப் பிறகு உன் னைக் கல்யாணம் செய்து கொள்கிறானா என்று கேள்!''

''வேண்டாம்... அய்யோ, வேண்டாம்...'' என்று அருவருப் பும் வேதனையுமாய்த் தவித்தாள்.

அதே கண்டிப்பான குரலிலேயே, ''அல்லது இந்த... இந்தச் சித்தார்த்தனையே மணந்து கொள்,'' என்றுகூறி முடித்தாள் தாயார்.

தாங்க முடியாமல், ''எனக்குக் கல்யாணமே வேண்டாம்!'' என்று வெடித்தாள் மகள்.

சினம் காட்டி முறைத்த தாயின் கையைப் பற்றி, ''அம்மா! நீங்கள்கூட இப்படிப் பேசுகிறீர்களே! சகதி என்று கழுவு என்றுஎன்னிடம் சொல்லிவிட்டு இப்போது என்னைச் சாக்கடை யாகவே ஆக்க முயற்சிக்கிறீர்களேம்மா...'' என்று அழுதாள் சக்தி.

''அசடு போல் பேசாதே, சக்தி. இருக்கிற துன்பத்தில் தெய் வமாகப் பார்த்து ஒரு வழிவிட்டது என்று கொஞ்சம் நிம்மதி யாக இருக்கிறேன். அதைக் கெடுக்காதே!'' என்று மகளிட மிருந்து கையை விடுவித்துக் கொண்டாள் அன்னை.

''தெய்வமாம் தெய்வம்! தெய்வம், கடவுள் என்பது எல்லாம் வெறும் பொய் அம்மா. உண்மையாகவே பொய்தான்!'' என்று குமுறினாள் மகள்.

''பொய்யோ மெய்யோ, இன்றையச் சிக்கலுக்கு இது ஒன்று தான் தீர்வு. வேண்டாம் வேண்டாம் என்று என் உயிரைப் பிடுங் காதே!'' என்று கண்டிப்புடன் பேசிவிட்டு நகர்ந்தாள் சீதை.

கடைசியாக, "அம்மா, அன்று... அன்னைக்கு... அம்மா... எனக்கு நினைக்கவே பயமாக இருக்கிறதே. தயவு பண்ணி என்னை விட்டுவிடுங்கள், அம்மா!" என்று அழுதாள் சக்தி.

சற்று நேரம் சீதை பேச்சிழந்து நின்றாள்.

பிறகு மகளை உட்கார வைத்து முதுகை வருடியபடியே சொன்னாள். "சக்தியம்மா, யாரோ ஒருவனிடம் மாட்டிக் கொள் வது வேறு, மனைவி என்ற பதவியில் அமர்வது வேறு. திரும ணத்தில் கணவனுக்கு மட்டுமே உரிமைகள் கிடைப்பதில்லை. மனைவி கையிலும் பெரிய ஆயுதம் கிடைத்து விடுகிறது. இதைப் பயன்படுத்தும் விதத்தில் அவளது சந்தோஷம் சக்தி எல்லாம் பெருகுகிறது!" என்று மென்மையாக எடுத்துச் சொன் னாள்.

காதிலே வாங்காமல், "வேண்டாம், வேண்டாம்" என்று பத றினாள் சக்தி.

இவளை எப்படித் தேற்றுவது? என்னவென்று தைரியம் சொல்வது?

யோசித்துப் பார்த்தும் ஒரு வழியும் காணோம்.

தன்மனம் இளகுவதை மகளுக்குக் காட்டிக்கொள்ளாமல், "அம்மாவின் முடிவுதான் என் முடிவு என்றெல்லாம் சொல்லு வாயே, இப்போது இதுதான் என் முடிவு. சொல்லிவிட்டேன். அதன்படி நடந்து காட்டு!" என்று கடினமான குரலில் கூறி அங் கிருந்து நகர்ந்து விட்டாள் சீதை.

ஆற்றுவாரில்லாமல் அழுதுகொண்டே இருந்தாள் சக்தி.

தூக்கத்திலும் விசிக்கும் மகளைப் பார்த்துச் சீதைக்குக் கண் ணீர் பொங்கியது.

''அம்மா ராட்சசியாகி விட்டாள் என்று நினைத்தாயா?'' என்று வாய்க்குள் முணுமுணுத்தாள்.

வழக்கம்போலக் கணவன் படத்தருகே சென்று அமர்ந்தாள்.

சக்தியைப் போலவே அவள் தந்தைக்கும் கண்ணில் புன் னகை.

தந்தையின் பரிசை மகளிடம் இப்போது அடியோடு காண முடியவில்லையே.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாகக் கணவனுடன் இணைந்து நகைத்தது நினைவுக்கு வந்தது.

அந்தப் பொல்லாத நாளன்றுகூட எப்படிச் சிரித்தார்.

அன்று இறக்கும் தறுவாயில் அவர் சொன்னது நினைவுக்கு வந்தது.

''என்னால் ஆன மட்டும் நீங்கள் சொன்னபடியே வளர்த் தேனே. ஆனால் இப்போது அவ அழ அழக் கல்லாக இருக் கும்படியும் நேர்ந்துவிட்டதே. மற்றப்படி வேறே நான் என்ன தான் செய்யட்டும். இனி அவள் இன்னொருவருடன் வாழக்கூ டும் என்பது நிச்சயமாக நடக்காத காரியம். இவனோடும் ஒருக் கால் கணவன் என்றாகிவிட்டால் இவனுடன் மெல்ல மெல்ல ஒன்றாகி விடமாட்டாளா என்கிற ஆசைதான் எனக்கு - அப்படி அழுகிறாளே! என்னால் தாங்க முடியவில்லையே!'' என்று தானும் கண்ணீர் சொரிந்தாள்.

★ ★ ★

**யா**ருடைய கண்ணீருக்கும் காத்திராமல் திருமண நாளும் வந்தது.

மகளின் கெஞ்சும் பார்வை குழப்பப் பார்வையாகி, குழப் பப் பார்வை குற்றம் சாட்டும் பார்வையாகி, அத்துடன் கோப மும் விரக்தியும் கலப்பதைக் காணாதது போலக் கண்டு தனிமை யில் நொந்தாள் தாயார்.

மனது கேளாமல் சவுந்திரத்துக்கு மட்டும் திருமணம் பற்றி எழுதினாள் சீதை.

தான் மட்டுமாக என்றாலும், விட்டுக் கொடுக்காமல் கல்யாணம் நேரத்தில் வந்து கலந்து கொண்டாள் அந்த அம்மாள்.

''நல்லா இருடி, என் கண்ணு!'' என்று சக்தியின் கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டை அழுத்திவிட்டு, சீதையைத் தனியே அழைத்துச் சென்று விடைபெற்றுக் கொண்டாள்.

''பணம் என்றால் எல்லாமே மறந்து போகுமா, அண்ணி? வருகிறதாக இருந்த பெண் வரவில்லை என்று தகவல் வந்த போது ஆச்சரியமாகவும் வருத்தமாகவும் இருந்ததே தவிர நாங் கள் இந்தச் சூதை எண்ண வில்லையே. எங்கள் பலராமனுக்குப் பெண் கிடைக்காமல் போகாது அண்ணி. ஆனால் சக்தி முகம் வாடிக் கிடப்பது கூடவா தெரியவில்லை? சிவராமண்ணன் மட்டும் இருந்திருந்தால் இப்படி நடக்குமா?'' என்று வெந்த புண் என்று தெரியாமல் வேல் பாய்ச்சித் தன் கொதிப்பை. ஆற்றிக் கொண்டு கை நனைக்காமலே கிளம்பிவிட்டாள்.

''அது நிசம்தான்!'' என்று வேதனையால் துடித்தபடியே எதி ரொலித்தது. சீதையின் மனம். அவர் இருந்திருந்தால் இந்த அவலம் எல்லாம் நடக்க முடியுமா?

அன்றே தன் வீட்டிற்குச் சென்றுவிடச் சித்தார்த்தன் திட்ட மிட்டு இருந்தான்.

கிளம்புகையில் தங்களோடு வந்து வசிக்கும்படி சீதையிடம் கேட்டான் பிறகு அவன். ''இங்கே தோட்டம் பாழடையாமல் பாதுகாக்க யாரையாவது ஆள் போட்டுக்கொள்ளலாம். நீங்கள் இங்கே தனியாக இருக்க வேண்டாம்,'' என்றான்.

ஆனால் சீதை மறுத்துவிட்டாள்.

'தனியாக...' என்று புருவங்களை உயர்த்தியவனிடம், ''என் றேனும் ஒருநாள் சக்திக்கு உங்கள் வீடு அடியோடு சகிக்க முடியாததாகி விட்டால் அன்று திரும்பி வந்து தங்க என்று அவ ளுக்கு ஒரு இடம் வேண்டும். அப்படி ஒரு இடம் தேவை இல்லை என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகையில் தானாகவே வருவேன்!'' என்று முடித்துவிட்டாள்.

இரத்தப் பசையே இல்லாதது போல் முகம் வெளுத்துப் போயிருந்த மகளை, சற்றுமுன் தாலிகட்டித் தன்னவள் ஆக்கிக் கொண்டவனுடன் அனுப்பிவிட்டுத் தாங்கமாட்டாத தவிப்பு டன் பூஜையறையில் போய் விழுந்தாள் அந்தத் தாயார் - ஆற்றவோ தேற்றவோ யாரும் இல்லாமல்.



8

**சி**த்தார்த்தனுடைய இல்லத்தை வீடு என்று கூறுவதை விடவும் மாளிகை என்று கூறுவது தான் பொருத்தம் ஆகும்.

வீட்டின் முன்புறமாகப் பெரிய புல்வெளி பச்சைப் பட்டாடையாகப் பரந்து கிடந்தது.

அரை வட்டமான புல்வெளியை அடுத்து அகலமான காரோடும் பாதை.

பாதையின் இருமருங்கிலும் சீராக வளர்ந்து மலர்ந்திருந்த வண்ணப் பூச்செடிகள்.

புல்வெளியில் இடையிலும் ஆங்காங்கே பூச்செடிகள்.

காரைவிட்டு இறங்கினால் அரண்மனை போலவே நீளமான படிகள்...

சட்டென சக்தியின் நினைவில் ஏதோ நெருடியது.

இந்தப் படிகளை அவள் பார்த்திருக்கிறாள்.

எப்போது பார்த்திருக்கக்கூடும் என்று அனுமானிப்பதற்குப் பிரமாதமான ஊக சக்தி தேவையில்லையே.

அன்று சுய உணர்வை இழந்த நிலையில் கொண்டு வரப் பட்டு இருந்தாள்.

அப்போது அத்துமீறி அடைந்ததை இன்று அதிகாரத்துடன் பெறுவதற்காகச் சுய உணர்வுடனேயே அழைத்து வரப்பட்டிருக் கிறாள்.

சீ!

அடிவயிற்றிலிருந்து கசந்து வழிந்தது அவளுக்கு.

இதை எல்லாம் விட்டுக் கண்ணுக்கு எட்டாத தூரம் வரை ஓடிவிட வேண்டும் போலச் சக்திக்குத் துடித்தது.

ஆனால் அடியெடுத்து வைக்கமுடியாமல் எத்தனை கட்டு கள், தாய், அன்பு, சமூகம்... என்று.

இவைகளில் சிக்கிக் கொண்ட பிறகு அமுந்தி அமுந்திப் போவது தவிர விடுதலையே கிடையாதா?

"வா, சக்தி!" என்று கையை நீட்டினான் சித்தார்த்தன்.

படிக்கட்டிலேயே நின்றுவிட்டது அப்போதுதான் புரிந்தது சக்திக்கு.

அவனது நீட்டிய கைகளில் இருந்து விலகிப் படியேறினாள்.

நேராக மாடிக்கு அழைத்துச் சென்றான் அவன்.

தங்க நிறத்தில் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த ஒரு வெண்ணிறக் கதவைத் திறந்து, ''இதுதான் உன் அறை!'' என்றான்.

சக்தி பிரமித்தாள்.

அரும்பாக்கம் வீட்டையே உள்ளடக்கி விடலாம் போல இருந்தது அறை.

முன்புறச் சுவர்களில் இளம் சிவப்பும் ஒருபுறச் சுவரோடு மேல் தளத்தில் லேசான தளிர்ப் பச்சை நிறமும் தங்க நிறத்தில் சர விளக்கும்...

பிரமிப்பை மீறிக்கொண்டு, பணம் இருந்தால் எப்படியும் செலவழிக்கலாம் போல் இருக்கிறது என்று எண்ணம் ஓடியது சக்திக்கு.

''பிடித்திருக்கிறது அல்லவா, சக்தி?'' என்று குழைவான குரலில் கேட்டான் அவன்.

என்ன குழைவு!

''தங்கத்தால் கம்பிகள் அமைத்துவிட்டால் சிறைகூடப் பிடித்துப் போகுமா?'' என்றாள் வெறுப்பாக.

''சக்தி!'' என்று அதட்டினான் அவன்.

ஆனால் உடனேயே குரலைத் தணித்து, ''இங்கே வந்து பாரேன்,'' என்று கூட்டிச் சென்றான்.

கிட்டத்தட்ட ஒருபுறச் சுவரையே அடைத்தாற்போல அமைக்கப்பட்டிருந்தது வார்ட்ரோப்.

ஒவ்வொரு கதவாகத் திறந்து காட்டினான்.

விதம்விதமான சேலைகள்.

இன்னொரு பக்கமாகச் சுவரோடு பதித்திருந்த அலமாரியைத் திறந்தான்.

வரிசையாக நகைப் பெட்டிகள்.

பெட்டிகளில் இருந்த ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டி, ''டிசைன் பிடிக்கிறதா, சக்தி? கழுத்தில் அணிந்து பார்க்கிறாயா?'' என்றான் அதே குழைவான குரலில்.

அணிந்து பார்த்து அந்த மயக்கத்தில் உன் கைகளில் விழ வேண்டுமா?

வெறுப்புடன் திரும்பி, சன்னல் பக்கமாக நடந்தாள் சக்தி.

''எல்லாம் உனக்காகவே சேர்த்தேன், சக்தி!''

அவன் சொல்லச் சொல்ல அடக்கமாட்டாமல், ''எல்லாவற்றையும் ஒன்றாகக் குவித்து ஒரு லிட்டர் பெட்ரோலை ஊற்றிக் கொளுத்துங்கள்!'' என்று கூறினாள் சக்தி.

''சக்தி!''

கண்களில் கோபம் ஜொலித்தபோதும் வினாடிக்குள் அவன் தன்னையே அடக்கிக் கொண்டான்.

''உனக்குக் களைப்பாக இருக்கும். சற்று நேரம் படுத்து ஓய்வு எடுத்துக்கொள். நான்... ஒரு மணி நேரம் கழித்து உனக்கு வீட்டைச் சுற்றிக் காட்டுகிறேன்,'' என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

அவனது அதட்டலின் வேகத்தில் நின்றிருந்த சக்தியின் இதயம் மீண்டும் துடிக்கத் தொடங்கியது.

ஓய்ந்துபோய் அங்கிருந்த சோபா ஒன்றில் சாய்ந்தாள்.

சொன்னது போலவே ஒரு மணி நேரம் சென்ற பின் சித்தார்த்தன் வந்தான்.

சக்தியின் கண்களில் இருந்த கலக்கத்தைக் கவனியாதவன் போல, ''வா சக்தி! வீட்டையும், தோட்டத்தையும் சுற்றிப் பார்க் கலாம்,'' என்று அழைத்துச் சென்றான்.

அந்த அறையையும் பார்க்க நேருமே என்று உள்ளூரக் கலங்கியிருந்தாள் சக்தி.

ஆனால் அதை உணர்ந்தவன்போல அவனும் வீட்டின் ஒரு பகுதியை விட்டுவிட்டான். ''அந்தப் பக்கம் எல்லாம் விருந்தா ளிகள் அறைதான், இங்கே வா...'' என்று வேறுபுறம் அழைத் துச் சென்றான்.

பெரிய நூலகம் ஒன்று இருந்தது.

அவ்வளவு புத்தகங்களைப் பார்த்ததும் தன்னை அறியாது கண்களை விரித்தாள் சக்தி.

லேசாக முறுவலித்து, ''எண்பது சதவீதம் என் அப்பா சேக ரித்து வைத்தது, நான் சேர்த்தது கொஞ்சம்தான்!'' என்றான்.

அடுத்து அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது அங்கே இருந்த பூஜையறை.

பெரிய தெய்வப் படங்கள் சுத்தமாகத் துடைக்கப்பட்டு இருந்தன.

துலக்கி வைக்கப்பட்டிருந்த பெரிய வெள்ளிக் குத்துவிளக்கு ஒன்று.

யார் பூஜை செய்கிறார்கள்? நிச்சயமாக இவனாக இராது.

''இது என் தாயார் பூஜையறை. சிறுவயதில் அவர்கள் பூஜை செய்வதைப் பார்த்திருக்கிறேன், இந்த முருகன் படத்தைக் காட்டி, ''கேட்பதைக் கொடுக்கும் குமரன்!'' என்பார்கள். அப்பாவின் உடல் நலம் கெட்டபோது அவருக்கு முன் போய்

விடவேண்டும் என்று கேட்டு அதேபோல் போய்விட்டார்கள். அம்மா இறந்தபோது எனக்கு வயது பதினெட்டு. இரண்டு ஆண்டுகள் கழித்து அப்பா இறந்தார்... இந்த அறையைச் சுத் தம் செய்து வைப்பது சமையல்காரம்மாள்தான்... மற்றப்படி நான்கூட இங்கே... ஒரு தரம் வந்து வணங்கியிருக்கிறேன். உன் னைப் பார்த்த பிறகு நீ என் மனைவியாக வேண்டும் என்று கேட்டேன்!'' என்று முறுவலித்தான்.

குரோதத்துடன் முருகன் படத்தை முறைத்துவிட்டு, ''எனக்கு இந்த சாமி பூதம் இதில் நம்பிக்கையில்லை!'' என்று கடுப்புடன் உரைத்தாள் சக்தி.

கடைசியாகத் தோட்டத்தைக் காட்டினான். ''இதைக் காலை வேளையில் பார்த்தால்தான் மிக நன்றாகயிருக்கும். மொத்தத் தில் உனக்கு வீடு பிடித்திருக்கிறது அல்லவா, சக்தி?'' என்று அக்கறைபோலக் கேட்டான்.

அவ்வளவு நேரமும் அங்கங்கே பணிவு காட்டி நின்ற பணி ஆட்களின் குறுகுறுத்த பார்வை அவளைத் தீயாய்த் தகித்துக் கொண்டிருந்தது.

அந்தப் பொல்லாத நாளின் போது சித்தார்த்தன் அங்கிருந்த வேலையாட்களை எல்லாம் அகற்றியிருந்தது அவளுக்குத் தெரி யாத விஷயம். எனவே அன்றிருந்த தேவையான நிலைமையில் யாரையும் பார்த்த ஞாபகம் இல்லாத போதும், 'இவர்களில் யாரெல்லாம் அன்று என்னைப் பார்த்திருப்பார்கள்?' என்று எண்ணி எண்ணி அவமானத்தில் துடித்துக் கொண்டிருந்தாள் சக்தி.

இத்தனைக்கும் காரணகர்த்தாவான அவனை வேதனைப் படுத்திவிடும் வெறியில், ''பிடிக்கவில்லை என்றால் இடித்துத் தகர்த்துத் தரை மட்டமாக்கி விடுவீர்களா?'' என்று ஆத்திரத்து டன் கேட்டாள்.

மீண்டும் மேல் மாடிக்குச் செல்லும் வரையில் அவன் எதுவும் சொல்லவில்லை.

சென்ற பின், அவளிடம் திரும்பி, "இவ்வளவு ஆத்திரம் கொள்ளக் காரணம் இல்லை!" என்றான்.

காரணம் இல்லையாமே!

அவளுக்கு உடம்பு எரிந்தது. "நான் இங்கே இப்போது இருப்பதே ஒரு காரணம்தான்," என்றாள் சீற்றத்துடன்.

"யோசித்துப் பேசு, சக்தி. நான் உன்னைக் கைவிட்டு விடவில்லை!"

"இல்லை, நீங்கள் காலை இடறிவிட்டவர்!" என்றாள் அவள் உள்ளக் கொதிப்பில்.

அவன் இதமாகவே பேச முயன்றவனாய், "அதற்குப் பிராயச்சித்தமாகத்தான் உன்னை மணந்திருக்கிறேன், சக்தி!" என்றான்.

சக்தியின் சினம் எல்லை மீறியது. "பிராயச்சித்தமா? தவறு செய்தவன், இழைத்த தவறை எண்ணி வருந்தி அதை ஈடு செய்வதுதான் பிராயச்சித்தம். சிலையைப் பங்கப்படுத்தியவன் மேலும் போட்டு உடைக்க அதிகாரம் பெறுவதா பிராயச்சித்தம்!" என்று வெடித்தாள்.

சற்றுத் தயங்கிவிட்டு, "காலம் காலமாய் இதன் முடிவு இது என்றுதான் நடந்து வந்திருக்கிறது, சக்தி. பஞ்சாயத்தார் முடிவு என்று படித்திருப்பாயே..." என்றான் அவன்.

"காலம் காலமாகப் பெண்களுக்கு அநீதி செய்வதே நம் சமுதாயத்துக்குப் பழக்கப்பட்டுப் போயிற்று!" என்று குறுக்கிட்டுச் சொன்னாள் சக்தி.

அவள் பேச்சைக் கவனியாதவன் போல, "அங்கேயும் பணத்தைக் கொடுத்துவிட்டு விலகிவிடுவதும், இல்லை என்று அடியோடு மறுப்பதும்கூட நடந்திருக்கிறது!" என்றான் அவன்.

அவனை ஏறிட்டுப் பார்த்தாள் சக்தி. "அப்படியே நீங்கள் கைவிட்டு விடவில்லையாக்கும்! ரொம்பவும் தாராள மனசு தான்!" என்றாள் ஏளனமாக, "ஆமாம், அதற்காக நான் நன்றியோடு உங்கள் காலில் விழ வேண்டுமா?"

"நான் கைவிடவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொண்டால் போதுமானது," என்றான் அவன் அமர்த்தலாக.

என்ன திமிர்?

சக்திக்கு உள்ளம் கொதித்தது. "என்னைக் கைவிடாதீர்கள். மணந்து கொள்ளுங்கள் என்று நான் உங்களிடம் கேட்டேனா? மணந்து கொண்டாராமே! எதற்காக? எதற்காக எனக்குத் தாலி கட்டினீர்கள்! பறக்க முடியாமல் என் சிறகுகளை வெட்டியதோடு மட்டும் உங்களால் திருப்தி அடைய முடியவில்லையே. இன்னமும் ஒவ்வொரு இறகாகப் பிய்த்து எறிந்து நான் துடிப்பதைப் பார்த்து மகிழ நினைத்தீர்கள். மணந்து கொண்டீர்கள். தவிர, இந்த மணத்தால் எனக்கு என்ன நன்மை? எனக்கு நீங்கள் இழைத்த கொடுமைக்கு இது எந்த வகையில் பிராயச் சித்தம்?" என்றாள் ஆத்திரமும் அழுகையுமாக.

"சற்று அமைதியாகக் கேள் சக்தி. அப்போது நீ அவசரத்துடன் பலராமை நாடிக் கிளம்பியிரா விட்டால் அது நடந்தே இராது. என் அன்பை உனக்குப் புரியவைக்க அவகாசம் இல்லை. என் காதல்..."

'காதல்!' வெறுப்புடன் சிரித்தாள் அவள். "கண்ட அசிங்கத்துக்கெல்லாம் அந்தப் புனிதமான பெயரைச் சூட்டிக் கேவலப் படுத்தாதீர்கள்!" என்று சீறினாள்.

அவளையே பார்த்தபடியே, ''என்னுடைய உணர்வுகள் பற்றி எனக்குத் தெரியும்!'' என்றான் அவன்.

அவளுக்குச் சீற்றம் அடங்கவில்லை.

அன்றுவரை இழப்பை எண்ணி அழவும், தாயிடம் துடிக்கவும், பின்னர் கெஞ்சவும் முடிந்ததே தவிர, தவறு இழைத்தவனைக் குத்திக் குதறும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இன்றும் வாய்ப்பு என்று எண்ணிச் செயல்படும் அளவு அவளிடம் அமைதியில்லை.

அடியோடு மூழ்கிவிட்டோம் என்ற தவிப்பும், அது மூழ்கவே இல்லை என்பது போன்ற அவனது வாதம் மூட்டிய சினமுமே அவளைப் பொங்கி எழ வைத்திருந்தன.

எனவே மேலும் சீறி விழுந்தாள். ''உங்களுடையது காதலாக இருந்திருந்தால் என் வேதனையைக் கண்டுசகித்திருப்பீர்களா? என்னை நீங்களே துன்புறுத்தியிருப்பீர்களா? வேறு வழியில்.''

''அது என்ன வழி என்றுதான் சொல்லேன்,'' என்று பொறுமையை இழந்தாற் போலக் குறுக்கிட்டான் சித்தார்த்தன். ''உன் தாயிடம் கேட்டுப் பார்த்தேன். உன்னிடம் மன்றாடினேன். இருவரும் கண்ணை மூடிக் கொண்டு மறுத்தீர்களே! வேறு வழி இல்லாமல்தான் இப்படியாயிற்று,'' என்றான்.

''அதற்காக? உங்களுடையது உண்மையான காதலாக இருந்திருந்தால், விலகி நின்று என் மகிழ்ச்சி...''

''உன் மகிழ்ச்சியைத் தூர நின்று பார்த்துப் பெரு மூச்சுவிட்டு வாழ்ந்திருக்க வேண்டுமாக்கும்! எந்த யுகத்துக் கதை இது?'' என்று ஏளனமாக மீண்டும் குறுக்கிட்டான் அவன். ''எவன் கையிலோ உன்னை ஒப்படைக்க நான் என்ன ஏமாளியா? அல்லது கையாலாகாத கோழையா?''

கண்ணில் பொங்கும் சினத்துடன், "இல்லை. கோழை என்று நினைக்கவில்லை. என்னைக் காலடியில் போட்டு மிதிக்கும் ராட்சசன் என்றுதான் நினைத்தேன்," என்றாள்.

சட்டெனத் தணிந்துவிட்ட குரலில், "அல்ல சக்தி. என்னை மணந்தாக வேண்டிய கட்டாயத்தை உனக்கு ஏற்படுத்தினேன். அவ்வளவுதான், தயவு செய்து அதை மறக்க முயற்சி செய்" என்றான் அவன்.

"சாகும்போது மறப்பேன்!" என்றாள் அவள் வெறுப்பாக.

இந்த எரிமலைச் சீறலும் எதிர்ப்பேச்சும் பகல் மறையும் வரைதான்.

இரவோடு அவனும் அறையினுள் வந்தபோது, சக்தி பதை பதைத்துப் போனாள்.

உடம்பெல்லாம் நடுநடுங்க, கண்களில் அச்சத்துடன், "கிட்டே வராதீர்கள், அய்யோ, அம்மா அம்மா... அய்யோ!" என்று அவள் பதறிக் கதறியபோது அவன் அப்படியே நின்றுவிட்டான்.

அமைதி காட்டினால் ஆசையாக அணைக்கலாம்.

எதிர்த்து நின்றால் அடக்கிப் பார்க்கலாம்.

ஆனால் அஞ்சி நடுங்குகிறவளை எப்படி நெருங்குவது?

மிகவும் மிருதுவாக அவளைப் பார்த்து, "பயப்படாதே. சக்தி. இப்போது நான் உன் கணவன், உன்னை வருத்துவேனா? சக்தி, கொஞ்சம் கேளேன்," என்று அன்பாகப் பேசிப் பார்த்தான்.

ஆனால், அவன் பேச்சோ குரலோ மனதில் பதியாமல், பய வெறி ஒன்றே தலை தூக்கி நிற்கக் கண்ணீருடன், "வேண்டாம்

''வேண்டாம்...'' என்று சக்தி உருப்போட்ட போது, அவன் மேலே பேசாமல் வெளியேறினான் - ''உனக்குப் பிரியமற்ற எதுவும் நடக்காது. பயப்படாதே!'' என்ற உறுதிமொழியைக் கொடுத்துவிட்டு.



## 9

**ச**க்தி - சித்தார்த்தன் திருமணத்திற்குப் பின்னர் இருபது நாட்கள் இப்படியே கழிந்தன.

இந்த இருபது தினங்களில் சக்தியை உற்சாகப்படுத்த அவன் எவ்வளவோ முயன்றான்.

ஆசையுடன் அவன் வாங்கி வைத்திருந்த நகைகளை அவள் கண்ணெடுத்துப் பார்க்கவே இல்லை.

இருந்த வகைகளுக்குள் மிகவும் எளிதாக இருந்த சேலைகள் தவிர மற்றவைகளைத் தொடுவதாக இல்லை.

அன்பாக, பிரியமாக, கனிவாக, ஆசையாக, எந்த வகையிலும் அவனால் அவளை அணுக முடியவில்லை.

பார்த்ததுமே மனதைப் பூட்டிக் கொள்கிறவளிடம் எப்படி அணுகுவது?

பூட்டை உடைக்காமலே திறக்க முயன்றான் அவன்.

பலன் இல்லை என்று கண்டபோது, அன்றுவரை தோல்வியைச் சந்தித்திராத அவன் மனம் பொறுமை இழக்கத் தொடங்கியது.

அன்றும் அப்படித்தான்.

சன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற மனைவியிடம், ''தோட்டத்தில் சற்று உலாவிவிட்டு வாயேன், சக்தி. இந்த அறைக்குள்ளேயே அடைந்து கிடப்பானேன்?'' என்றான் பிரியமான குரலில்.

அவன் குரலில் திடுக்கிட்டுத் திரும்பிய சக்தி, உடனே சுதாரித்துக் கொண்டு, "அறைக்கு வெளியே சென்றுவிட்டால் மட்டும் கைதியல்ல என்று ஆகிவிடுமா? முளைக்கயிற்றில் கட்டிய மாடு போல அங்கேயும் தடைதான்," என்றாள் வெறுப்பாக.

கண்ணில் கனிவு மறைய, "என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேலி போல வினவினான் அவன்.

"கயிறு அவிழ்வதற்காகக் காத்திருப்பதுதான்," என்றாள் அவள் அலட்சியமாக.

"அவிழுகிற கட்டு இல்லை என்று ஆன பிறகு...?" என்றான் அவன் கூர்மையான பார்வையுடன்.

"உடம்பிலிருந்தே விடுதலை பெறும் நாளுக்காகத் தவம் இருக்க வேண்டியதுதான்," என்று மீண்டும் தோட்டத்தின் புறமாகத் தலையைத் திருப்பிக் கொண்டாள் சக்தி.

கணத்தில் மூண்ட சினத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "சக்தி! நான் அவ்வளவாகப் பொறுமைசாலி அல்ல!" என்றான் எச்சரிப்பது போல.

குரோதத்துடன் திரும்பிப் பார்த்து, "ஆமாம், தெரியாமல் எதிர்ப்பெயரை வைத்துவிட்டார்கள், பாவம்..." என்றாள் சக்தி.

"ஏதோ அவர்களிடமாவது அனுதாபம் இருக்கிறதே, அதுவே பெரிது!" என்றான் அவன் கேலி போல.

"பிள்ளை செய்த பாவத்துக்குப் பெற்றவர்கள் என்ன செய்வார்கள்?" என்றாள் சக்தி பதிலுக்கு.

"அளவு மீறிய அன்பில் விளைந்த தவறு என்று எடுத்துக் கொள்ளக்கூடாதா, சக்தி?" என்று தணிவான குரலில் வினவினான் சித்தார்த்தன்.

''தவறுஎன்று எடுத்துக்கொண்டு அதை மறந்து உங்களோடு ஒத்து வாழவேண்டுமாக்கும். சாமர்த்தியத் திட்டம்தான்!'' என்று இகழ்ச்சியாக உதட்டை வளைத்தாள் சக்தி.

ஆனால், அவன் கோபத்துடன் அவள் பக்கமாக இரண்டு எட்டு எடுத்து வைக்கவும், முகத்தில் அச்சம் பரவ, 'அய்யோ!' என்று பின்னடைந்தாள்.

புருவ மத்தியில் முடிச்சுடன் வெளியேறினான் அவன்.

'இவளை எப்படி மாற்றுவது?' என்று வெகு தீவிரமாக அவன் யோசித்தபோது, 'சக்தி சாதாரணப் பெண் இல்லை!' என்ற அவளது தாயின் குரல் செவியில் எதிரொலித்தது.

''நானும் தனிப்பட்டவன்தான்!'' என்று தன்னம்பிக்கை யோடு எண்ணிக் கொண்டான் சித்தார்த்தன்.

மூன்றாம் வார இறுதியில் ஒரு மாலையில், ''இந்த ஞாயி றன்று ஓர் உறவினர் வீட்டுக்குச் செல்ல வேண்டும், சக்தி. காலை உணவின்-பின் கிளம்ப வேண்டும்,'' என்றான் சித்தார்த்தன்.

''நான் வரவில்லை,'' என்றாள் சக்தி, எங்கோ பார்த்தபடி.

''பரவாயில்லை, சக்தி. என்னைப் பார்த்துக்கூடப் பேசலாம்!''

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்துவிட்டு உதட்டைக் கடித்தபடி தரையைப் பார்த்தாள் சக்தி.

''சக்தி! நம் திருமணத்திற்கு நான் யாரையுமே அழைக்க வில்லை. அதை அப்போது தெரியப்படுத்தவும் இல்லை. இப் போதுதான் சிலருக்கு, மிகவும் நெருங்கிய சில பேருக்கு மட்டும் எழுதினேன். என் பெரியம்மா அவர்களில் ஒருவர்.

''இது விஷயத்தில் அவர்களுக்கு மிகுந்த வருத்தம்தான், ஆனாலும் என் மீது கொண்ட அன்பால் நமக்கு விருந்து

தருகிறார்கள். அவர்களை மதித்து அந்த விருந்தில் நாம் கலந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம். அவர்களது வீடு தாம்பரத்தில் இருக்கிறது. இங்கே கொஞ்சம் வேலை இருப்ப தால் பதினோரு மணிக்கெல்லாம் அங்கே போய்விடவேண்டும் என்று இருக்கிறேன். அதனால் பத்துக்கெல்லாம் தயாராகிவிடு. எதற்கும் ஒரு செட் உடை எடுத்துக்கொள்,'' என்று அமைதியா கவே சொன்னான் அவன்.

இந்த இருபது தினங்களாகத் தினம் பார்த்துப் பழகியதாலும், என்னதான் குத்தலாகவும் அவமதிப்பாயும் பேசினாலும் அவன் சினம் காட்டாமல் அடங்கியே இருந்ததாலும், மேலும் அவள் வெகுவாக அஞ்சியிருந்தது நிகழாமல் இருந்ததாலும், சக்திக்கு மனதில் தைரியம் பெருகியிருந்தது.

அந்தத் தைரியத்தில், ''அங்கெல்லாம் வர எனக்கு விருப்பம் இல்லை,'' என்று அசட்டையாகவே சொன்னாள்.

ஆனால் அவன் முகம் சட்டென இறுகியது. ''சக்தி! நாம் அங்கே போகப் போகிறோம். அது நிச்சயம். அங்கே நீ முகத் தைச் சற்று மலந்தாற்போலவே வைத்துக் கொள்ளப் போகிறாய். அதுவும் நிச்சயம்!'' என்றான் கனிவான குரலில் தெளிவாக.

அதே குரல்!

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் சக்தி.

ஆழமாகப் பார்த்துவிட்டு, ''தயாராக இரு,'' என்று கூறி அகன்றான் அவன்.

''உத்தரவா?'' என்று உள்ளூரப் புகைந்தபோதும், அந்தக் குரலை அலட்சியம் செய்ய அவளுக்குத் துணிவு இருக்க வில்லை.

அந்தப் பெரியம்மா வீட்டில் யாரையுமே - அவர்கள் சித் தார்த்தனுடைய உறவினர் என்ற வலுவான காரணம் இருந்த போதிலும்கூட, அவளால் வெறுக்க முடியவில்லை.

பெரிய குடும்பம் அது.

மூன்று பிள்ளைகளும் ஐந்து பெண்களுமாகக் கலகலவென்று இருந்தது வீடு.

திருமணமான பெண்கள் மூவரில் இருவர் வந்திருந்தனர்.

பையன்களில் இருவர் மணமானவர்கள்.

எல்லோருக்குமே இரண்டு மூன்று குழந்தைகள்.

அதிலும் இரண்டாவது பையனின் குழந்தை ரமா அழகான கவுனுடன் தளர்நடை வைப்பதும், கீழ்த்தாடைப் பல்லைக் காட்டுவதுமாக எல்லோரையும் மயங்க வைத்துக் கொண்டிருந்தது.

தன்னந்தனியாக வளர்ந்திருந்த சக்திக்கு இந்தக் கூட்டம் புதிய அனுபவமாக இருந்தது.

விளையாட்டும், சிரிப்புமாக அவர்களது பேச்சு! அவளது இயல்பான முறுவலைச் சற்று மலரவும் வைத்தது.

புது மணமகள் என்ற நிலையில் அவளை வைத்து இளைய தலைமுறையினர் அவ்வப்போது செய்த கேலி மட்டும் இல்லையானால் பழைய சிரிப்பு முழுமையாகவே அவளிடம் மலர்ந்திருக்கக் கூடும்.

ஆனால் சித்தார்த்தன் அங்கே பிரியமான உறவினனாக இருந்தது அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அவனுடைய பெரியன்னை முதலில் சற்றுக் கவலையாகக் காணப்பட்டபோதும் சற்று நேரத்திலேயே பிரியமாகப் பேசத் தொடங்கிவிட்டாள்.

ஒவ்வொருவராக அறிமுகம் செய்து வைத்துவிட்டு அந்த அம்மாள் சமையல் அறையை நாடிச் சென்றாள்.

''கொஞ்சம் இந்தக் கணக்குகளைப் பார், சித்து,'' என்று வீட்டுப் பெரியவர் சித்தார்த்தனை அழைத்துப் போனார்.

''இதோ வருகிறோம்,'' என்று பெரிய இரு பையன்களும் அவர்களைத் தொடர்ந்து சென்றுவிடவே, இங்கே மற்றவர்களின் ரகளை தொடங்கியது.

''எங்கே அண்ணி, இப்போது எங்கள் பெயரை எல்லாம் சொல்லுங்கள், பார்ப்போம், உம், நான் கலாவா... ராதாவா?''

சந்தேகமாகச் சக்தி நின்றபோது, ''அய்யோ, அது மீரா!'' என்றது ஓர் இரட்டைவால்.

''ஊகூம். அது பெரியண்ணி.''

''இல்லை, இல்லை... இது...''

என்று அவளைத் திணறடித்துச் சிரித்துப் பரிகசித்து விளையாடினர் அந்த இளம் தலைமுறையினர்.

''உன் இடுப்பு இவ்வளவு ஒல்லியாக இருக்க என்ன செய்தாய், அண்ணி? பெல்ட் போட்டாயா?'' என்று சற்றே சதைப் பிடிப்பான ஒரு பெண் அக்கறையுடன் விசாரித்தாள்.

கடைசியில் அவள்தான் மீராவாக இருந்தாள்.

சித்தார்த்தன் பின்னே சென்ற இருவரில் ஒருவன் திரும்பி வந்தான். ''அண்ணனுக்குப் பெரியம்மா என்றாலும் எல்லோருக்கும் அண்ணியாக எப்படி ஆனாய் என்று குழம்புகிறதா, அண்ணி? எங்கள் அம்மாவுக்குக் கல்யாணம் ஆகிப் பதினைந்து ஆண்டுகள் வாரிசே வரவில்லை. பிறகு காட்டாற்று வேகம்தான். எட்டே ஆண்டுகளில் எட்டுப் பிள்ளைகள். இரண்டு இரட்டைகள். மூச்சைப் பிடித்துக்கொண்டு பெற்றுத் தள்ளி விட்டார்கள்!'' என்று மூக்கைச் சுருக்கிக் கண்ணை விரித்தான் அவன்.

''இந்தத் துரை இப்போதே வேகத்தில் தொடங்கிவிட்டான். கல்யாணம் ஆகிச் சரியாக ஒன்றரை ஆண்டுதான் ஆகிறது இவன் மகளுக்கு ஒன்பது மாதம் நிறையப் போகிறது!'' என்று அவனை வம்புக்கிழுக்கிறாள் அவனுடைய சகோதரி.

''அங்கே என்ன கலாட்டா? அவள் பயந்துவிடப் போகி றாள். இங்கே வந்து கொஞ்சம் வேலைகளைப் பாருங்கள்!'' என்று அழைத்தாள் பெரியன்னை.

தானும் உதவி புரியச் சென்றபோது, ''நீ கொஞ்சம் உட்கார்ந் திரம்மா. சும்மாவே அசந்துபோய்த் தெரிகிறாய். கவனியாமல் கொட்டம் போடுகிறதுகளே என்றுதான் அதுகளை அழைத் தேன். முதலில் இந்த எலுமிச்சைச் சாற்றைக் குடி!'' என்று சக்தியை மீண்டும் அறைக்கு அழைத்து வந்து அமரச் செய்தாள் அந்த அம்மாள்.

வாயில் பக்கம் நிழலாடியது.

''ஹாய் சக்தி!'' என்று உள்ளே வந்தாள், சுகுணா.

திரும்பிப் பார்த்து, ''அட சுகுணாவா! வாம்மா. உட்கார். உனக்குச் சக்தியை ஏற்கெனவே தெரியுமா? இரு. முதலில் இது கள் காலி பண்ணிவிடும் முன்னால் உனக்கும் கொஞ்சம் ஜூஸ் கொண்டு வருகிறேன்!'' என்று அவசரமாக உள்ளே சென்றாள் சித்தார்த்தனின் பெரியன்னை மங்கையர்க்கரசி.

''நீ எங்கேடி இங்கே?'' ஆச்சரியமாகக் கேட்டாள் சக்தி.

''அதுவா!'' என்று குறுஞ்சிரிப்புடன் கண்ணடித்தாள், சுகுணா.

''சொல்லேன்டி,'' என்றாள் சக்தி ஆவலுடன்.

''இங்கே என் ஒன்றுவிட்ட அண்ணி மகள்... நேற்றுப் பார்த் தபோது, ஒரு முக்கியமான ஆள் இங்கே இன்று வரப்

போவதாகச் சொன்னாள். அவர் என்னவோ அதிசயம் அவரைப் பார்க்க என்று இங்கே வரமுடியுமா? கலாவின் கல்லூரிப் புத்தகங்களை என் தங்கைக்குத் தர முடியுமா என்று கேட்பது போல ஒரு கதை'' என்று நகைத்தாள் சுகுணா.

''அது யார்?'' என்று சக்தி கேட்குமுன், கையில் தம்ளருடன் மங்கையர்க்கரசி வந்தாள்.

தம்ளரைச் சுகுணாவிடம் கொடுத்துவிட்டு, ''சக்தி! இவள் நம் ராதாவின் நாத்தனார். ஒன்றுவிட்ட உறவு. சுகுணா! சக்தியைத் தான் எங்கள் சித்தார்த்தன் மணந்திருக்கிறான்!'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

''என்னது!''

''எங்களுக்கும் ஒரே அதிர்ச்சிதானம்மா. திடீரென்று நினைத்து நடத்தி முடித்தும்விட்டான். என்ன ஆனாலும் செத்துப்போன தங்கையின் ஒரே பிள்ளை. இங்கேயும் ஒரு மூத்த பிள்ளைபோல இருக்கிறவன். விட முடியுமா? அதனால்தான் விருந்துக்கு அழைத்தோம். எனக்குச் சக்தி திமிராய் இருப்பாளோ என்று முதலில் கவலைதான். ஆனால் தங்கமாய் இருக்கிறாள். பேசிக்கொண்டு இருக்கிறீர்களா? இன்னும் கொஞ்சம் வேலை இருக்கிறது,'' என்று எழுந்து உள்ளே போனாள்.

தோழியின் உதடுவரை வெளுத்த தோற்றம் சக்திக்குச் சஞ்சலத்தை அளித்தது.

ஏன் என்று அவளுக்குச் சரியாகப் புரியவில்லை.

அதற்குள் சுகுணாவின் அண்ணன் குமரனோடு சித்தார்த்தனே அங்கே வந்தான்.

''உனக்குக் குமரனைத் தெரியுமல்லவா, சக்தி? சௌக்கியமா சுகுணா? கொஞ்ச நாட்களாக உங்கள் வீட்டுக்கு வர முடிய

வில்லை, மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் அதற்காக!'' என்று முறுவலித்தான்.

அந்த முறுவலை இயல்பாக ஏற்க முடியாமல் பார்வையைத் திருப்பிய சக்திக்குச் சுகுணாவின் முகம் இன்னமும் திகைப்பை ஊட்டிற்று.

ஏன் இந்த வேதனை?

அதற்குள் சித்தார்த்தனின் முதுகில் பலமாகத் தட்டி, ''இது என்ன நாடகம், பிரதர்? சக்தியைப் பற்றி என் ஓட்டை வாய்த் தங்கையின் வாயைக் கிளறி அறிய வந்தாய். வந்த வேலை முடியவும், விஷயம் நின்றுவிட்டது என்று உண்மையைத்தான் சொல்லேன்!'' என்று போட்டு உடைத்தான் குமரன்.

இப்போ சக்திக்கு எல்லாம் புரிந்தது.

கூடவே சுகுணாவுக்கும் புரிபட்டுப் போனதுதான் மிகவும் பரிதாபமாக இருந்தது.

தன் வேதனையை, அவமானத்தைப் பிறர் அறியாது மறைத்து ஒன்றுமில்லாதது போலக் காட்டத் தோழி செய்த பெரு முயற்சி சக்தியின் மனதை உருக்கியது.

கலாவின் இடுப்பில் ஒட்டிக் கொண்டு வந்த குழந்தை ரமாவைத் தூக்கிப் போட்டு விளையாடினாள்.

குழந்தையைச் சிரிக்க வைத்து மற்றவர் கவனத்தையும் அதில் திருப்பித் தானும் குழந்தையிடமே முழுக்கவும் லயித்தவள் போலப் பாவனை செய்து கலகலத்தாள்.

சுகுணா தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும்வரையில் அதே பாவனையில் இருந்தாள் சக்தி.

அந்த அழகிய குழந்தையின் விளையாட்டு விரைவிலேயே பாவனையை நடப்பாக்கிற்று.

சற்று நேரத்தில் சுகுணாவும் சேர்ந்து கொள்ளச் சூழ்நிலையை மறந்து இருவருமே குழந்தையிடம் லயித்துப் போயினர்.

கணவனின் கண்கள் ஒரு புதுப் பளபளப்புடன் தன்னை விழுங்குவதை அப்போது அவள் கவனிக்கவில்லை.



## 10

சுகுணா அதிக நேரம் தங்கவில்லை.

வழக்கம் போலவே கலகலப்பாகப் பேசிச் சிரித்து விட்டுத்தான் கிளம்பினாள்.

ஆனால் அதற்கு அவள் செய்துள்ள முயற்சியை உணர்ந்திருந்த சக்திக்கு உள்ளம் உருகிப் போயிற்று.

பேதைப் பெண் என்று தோழிக்காக உருகியபோதே, இப்படி இவளை ஏய்த்து விட்டானே என்று கணவன் மீது கோபமும் ஏற்பட்டது.

''ராட்சசன்!'' என்று உள்ளூரக் கூறிக்கொண்டாள். மதிய உணவின் பின் பெரிய ஆண்கள் மீண்டும் ஆபீஸ் அறைப்பக்கம் செல்லவும், ''நீங்கள் ஓய்வு எடுக்கவில்லையா?'' என்று கணவனிடம் கேட்டாள் மங்கையர்க்கரசி.

''உன் பிள்ளைகள் கணக்கில் செய்து வைத்திருக்கும் குளறுபடிக்கு அது ஒன்றுதான் குறைச்சல்!'' என்று தலையில் அடித்துக் கொண்டார் அவர்.

மங்கையர்க்கரசியின் முகத்தில் கவலை தோன்றவும், ''பெரிதாக ஒன்றும் இல்லை பெரியம்மா. எழுதத் தெரியாமல் எழுதியிருக்கிறார்கள். அவ்வளவுதான். இரண்டு நாள் முனைந்து வேலை செய்தால் சரியாகிப் போகும்,'' என்று ஆறுதலாகக் கூறிவிட்டுப் போனான் சித்தார்த்தன்.

அந்த ஒரு வார்த்தையில் திருப்தி கொண்டவளாக மங்கை யர்க்கரசி முக மலர்ச்சியுடன் செல்வதைச் சக்தி ஆச்சரியத்துடன் கண்டாள்.

மாலையில் நிறைய ஜாதிப்பூ மொட்டுக்களைச் சக்தியின் நீண்ட சடையில் வரிசை வரிசையாகத் தைத்துச் சிங்காரித்து மகிழ்ந்தாள் மங்கையர்க்கரசி.

பெரியவர்கள் மனதை நோகவிட வேண்டாம் என்று தலையைக் கொடுத்த சக்திக்குச் சித்தார்த்தனைப் பற்றியே அவள் பேசவும் எரிச்சலாக வந்தது. காட்டிக் கொள்ள முடியா மல் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அவன் அம்மாகூட இங்கேதான் ஓர் ஆண்டு வளர்ந்தாள். எங்களுக்கும் அப்போது பிள்ளைகள் பிறக்கவில்லை. அம்மா இறந்து போகவும் இங்கே அழைத்து வந்தேன். ரொம்பவும் கெட்டிக்காரி. அவளது பள்ளி விழாவில் பார்த்தாராம் சித்து வின் அப்பா. ஒரே பிடிவாதமாய் மணந்து கொண்டார். வயது வித்தியாசம் நிறைய இருக்கிறதே என்று எனக்குத்தான் கவலை யாக இருந்தது. இருபது வயது வித்தியாசம் ஆனால், கண்மணி யும் ஒரே பிடிவாதம் பிடித்தாள். மனம் ஒன்றிப் போகும்போது வயது, அழகு, அந்தஸ்து எதுவும் தெரிவது இல்லை, ஒரு பதி னேழு பதினெட்டு வருடம் - அவளைப் போல மகிழ்ச்சியோடு ஒரு பெண் வாழ்ந்திருக்கமாட்டாள் அவ்வளவு ஆசையாக வைத்துக் கொண்டார்.

"சித்துவைக் கூட அவள் கடிந்து ஒரு வார்த்தை சொன்னால், அவருக்குப் பிடிக்காது. கண்மணிகூட சொல்லுவாள். ஒரு பிள் ளையைக் கண்டிக்காமல் வளர்த்தால் கெட்டுவிடும் என்பாள். அவள் சொல்லும் போதும் சிரிப்பார். அவ்வளவுதான். கண் மணி செத்த பிறகு வாழும் விருப்பமே இல்லாமல் இரண்டே ஆண்டுகளில் போய்விட்டார். அவ்வளவு அன்பு அவளிடம்...

"சில சமயம் சித்துவுக்கும் அவன் அப்பாவின் குணம்தான் என்றே நான் நினைப்பதுண்டு கோபத்தை லேசில் காட்டுவ தில்லை. என்ன சிரித்தாலும் கடைசியில்தான் நினைத்ததையே சாதிப்பது-

"சக்தியம்மா, ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ள வேணும். கோட்டை கோட்டையாய்ப் பணத்துடன் சின்ன வய சிலேயே கண்டிப்பார் இல்லாமல் போய்விட்டது. அங்கே இங்கே கெட்ட சகவாசத்தினால் ஒன்றிரண்டு தப்புகளை அவன் செய்திருக்கலாம். ஆனால் அவன் நிலைமையில் இன்னொருத் தன் இருந்திருந்தால் முழுக் கழுதையாகிப் போயிருப்பான். இவன் அப்படி இல்லை.

"சில சமயம் உன்முகத்தில் புதுப்பெண்ணுக்குத் தேவை யான மலர்ச்சி இல்லாத மாதிரி தெரிகிறதும்மா. ஊர் உலகில் நீ என்ன கேள்விப்பட்டிருந்தாலும் அதெல்லாம் கடந்த காலம், இன்றைக்கு அதனால் ஒன்றுமில்லை என்று ஒதுங்கி வாழவேண் டும். கண்மணியின் பிள்ளை அவளைப் போலவே, சந்தோஷ மாக வாழ்ந்தால்தான் எனக்கும் ஆறுதலாக இருக்கும்..."

சித்தார்த்தனுடைய கடந்த கால வாழ்க்கையை எண்ணித் தான் சஞ்சலப்படுவதாக அவனுடைய பெரியன்னை நினைப் பதைச் சக்தி உணர்ந்து கொண்டாள்.

'பாவம், இவர்கள் ஏன் வீணாக வேதனைப்பட வேண்டும்?' என எண்ணியவளாக, "அதெல்லாம் ஒன்றுமில்லை பெரி யத்தை. என் அம்மாவுக்கு வேறே யாரும் இல்லை. அவர்கள் தனியாக இருப்பார்களே என்ற நினைவில், அடிக்கடி மனது கஷ்டமாகி விடுகிறது," என்றாள் சமாதானமாக.

"ஓஹோ, அதுதானா? சீக்கிரமே பேரன் பேத்தி என்று காட்டி அவர்களை இழுத்து உங்களோடு வைத்துக் கொள்ள

வேண்டியதுதானே!'' என்று கவலை தீர்ந்த உற்சாகத்தில் சிரித்தாள் மங்கையர்க்கரசி.

ஆனால், 'குழந்தையா' என்று எண்ணிய மாத்திரத்தில் அருவருப்பிலும் அவமானத்திலுமாக முகம் கன்றிச் சிவந்து போய், தன் தீர்மானத்தை அடியோடு மறந்து 'சீ' என்று அவள் அலறி விடப் போகும் அந்தச் சமயத்தில், 'அம்மா!' என்று கூவியபடி மங்கையர்க்கரசியின் இரண்டாவது மகன் வந்தான்.

தொடுத்தது போக மீதியாகக் கிடந்த அரும்புகளைத் தொடுக்கும் பாவனையாகச் சட்டென்று குனிந்து முகபாவனையை மறைத்துச் சமாளித்தாள் சக்தி.

''என்னம்மா இது, மணி ஐந்தாகிறது. டிபன் கிபன் வேண்டாமா? பசியால் உயிர்!...'' என்றவன் பேச்சை நிறுத்தி விசிலடித்தான்.

''அண்ணியின் அலங்காரம் வெகு வெகு பிரமாதம். அண்ணனை இதோ... அதைவிட அம்மா, அண்ணியிடமே டிபனை அனுப்புங்கள்,'' என்று கூறிவிட்டு, ஆபீஸ் அறைக்கு ஓடினான் அவன்.

அங்கே அவன் என்ன செய்தானோ?

மங்கையர்க்கரசியிடம் மறுத்துப் பேச முடியாமல் டிபன் தட்டும் காபியுமாகச் சக்தி ஆபீஸ் அறைக்குள் சென்ற போது அங்கே சித்தார்த்தனைத் தவிர வேறு யாரும் இல்லை.

பார்வையால் அவளைப் பருகியபடி, ''நன்றி... சக்தி!'' என்று தட்டைப் பெற்றுக் கொண்டான் அவன்!

அவனை நிமிர்ந்தே பாராமல், ''பெரியவர்களுடைய மனதை வேதனைப்படுத்த வேண்டாம் என்று எடுத்து வந்தேன்,'' என்று விட்டேற்றியாகச் சொல்லிவிட்டுத் திரும்பினாள் சக்தி.

சட்டென வழியை மறைத்து, ''நீ உடனே திரும்பிச் சென்றாலும் பெரியம்மாவின் மனம் வேதனைப்படத்தான் செய்யும். சற்று உட்கார்,'' என்றான் அவன்.

சக்தி உட்காராமல் சன்னல் பக்கம் சென்று வெளியே பார்த்துக் கொண்டு நின்றாள்.

தோட்டத்தில் மங்கையர்க்கரசியின் பேரக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன.

''என் கையைப் பிடிச்சுக்கோ,'' என்று போட்டி போட்டுக் கொண்டு கொஞ்சம் பெரிய குழந்தைகள் ரமாவுக்கு உதவ முன் வந்ததையும், ''இப்படித்தான் குட்டிக் கர்ணம் போடணும்,'' என்று தலையெல்லாம் மண்ணாக்கிக் கொண்டதையும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவளுக்கு.

பின்னிருந்து அவளையே பார்த்துக்கொண்டு இருந்த கணவனை மறந்தே போனாள்.

சற்றுப் பொறுத்துக் கதவு தட்டப்படவும்தான் திடுக்கிட்டுப் போய்த் திரும்பினாள்.

''பூஜை வேளைக் கரடி!'' என்று தன்னைத்தானே விளம்பரப் படுத்திக்கொண்டு உள்ளே வந்த தம்பி ஒரு கணம் திகைத்து விட்டு, ''என்ன அண்ணா மைசூர் பாகு உப்பு சரியில்லையா?'' என்றான் கிண்டலாக.

இயல்பாகச் சிரித்துக் கொண்டு, ''உப்பு இனிப்பு எல்லாம் சரிதான். வயிற்றில்தான் இடம் இல்லை. மதிய உணவு சற்று அதிகம்,'' என்று காபியை மட்டும் அருந்தினான் சித்தார்த்தன்.

சின்னவன் முகத்தில் குறும்பு கூத்தாடுவதைக் கண்டு அதற்கு இடம் கொடாமல், ''சீக்கிரம் வாங்கடா, கணக்கைச் சற்று வேகமாகப் பார்க்க வேண்டும்... நீ போ சக்தி,'' என்று வேலையில் முனைந்தான்.

பெண்கள் சிற்றுண்டி வேளையில் எல்லோர் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு மழலைப் பட்டாளம் உள்ளே ஓடி வந்தது.

''பாத்தீபாத்தீ, பாப்பா தாத்தா... பாப்பா தாத்தா...! என்று குஞ்சுக் குரல்கள் கூவின.

''கலா! சாப்பாடு எடுத்துப் போடம்மா!'' என்று உத்தரவிட்டாள் தாயார்.

''பாப்பா தாத்தாவா? அது என்ன அத்தை?'' என்று விசாரித்தாள் சக்தி.

''ரொம்பவும் பரிதாபம், அம்மா. பிறவியிலேயே அவனுக்குக் கைகால் விளங்காது. வயது முதிர்ந்து முடிஎல்லாம் நரைத்துவிட்ட போதும் சின்னப் பிள்ளைபோல் முட்டி போட்டுத் தவழ்ந்துதான் எங்கே யானாலும் செல்கிறான். அதனால்தான் இதுகள் ''பாப்பா தாத்தா'' என்கிறதுகள். என்ன பாவம் செய்தானோ பாவம்!'' என்று இரக்கத்துடன் பேசினாள் மங்கையர்க்கரசி.

''பிறவியிலேயே ஊனம் என்றால் பிறக்கும் போதேயா ஒருவரால் பாவம் செய்துவிட முடியும்? நீங்கள் சொல்வது சரியில்லை, அம்மா!'' என்று ஆட்சேபித்தாள் மூத்த மகள் ராதை.

''எனக்கும் அதேதான் தோன்றியது,'' என்றாள் சக்தி.

''அது அப்படி இல்லையம்மா. ஒரு கொலை செய்துவிட்டுச் சட்டையை மாற்றிக் கொண்டால் சட்டம் விடுமா? பிறவிகள் எல்லாம்கூட ஆத்மாவுக்குச் சட்டை மாற்றுவது போலத்தான். கடவுள் ரொம்பவும் கறார் ஆசாமி ராதை. எத்தனை சட்டை மாற்றினாலும், விடாது பிடித்துக் கணக்குப் பார்த்துக் கொடுத்து விடுவார்!'' என்றார் அந்த அம்மாள்.

அந்தக் காலண்டரில் படமாகத் தொங்கிய முருகனிடம் சக்தியின் பார்வை பதிந்தது. ''பொல்லாத தப்புகள் பலப்பல.

நானும் செய்தேனோ?'' என்று மானசீகமாக அவனிடம் கேட்டுக் கலங்கினாள்.

எப்போதோ அவள் செய்த தப்புக்குத்தான் இப்போது தண்டனையா... அல்லது கடவுள் என்பது கற்பனையாக இருந்து மெலிந்தோரை வலியோர் அடிப்பதுதான் மெய்யா?

இதே கலக்கம் நெஞ்சைச் சூழ்ந்து உறுத்தியதாலோ என்னவோ அன்றிரவு அங்கேயே தங்க நேர்ந்து, தனி அறையில் கணவன் கைகளில் இரவைக் கழிக்க நேர்ந்த போதும் அவளால் முழுமையாக எதிர்க்க முடியவில்லை.

ஆனால் அங்கிருந்து வீடு திரும்பிய பிறகு அவன் சொந்த வீட்டிலும் இரவின் இருளில் அவளை நெருங்கவும் அவள் பதறிப் போனாள்.

அவளது வெறுப்பு, மறுப்பு எதற்கும் இப்போது மதிப்பில்லை என்று கண்டதும், வலுவில் கணவனின் அறைக்கு ஒரு நாள் காலையில் சக்தி சென்றாள்.

அவன் ஏதோ வேலையாக மேசை முன் அமர்ந்திருந்தான். சக்தியைக் கண்டதும் வியப்புக் காட்டிப் புருவத்தை உயர்த்தினான்.

''நீங்கள் சுகுணாவை மணந்து கொள்ளுங்கள்,'' என்றாள் அவள் மொட்டையாக.

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை,'' என்றாள் சக்தி தீவிரத்துடன் ''சுகுணா உங்களைக் காதலிப்பவள்.''

அவன் பேசாமல் தோளைக் குலுக்கினான்.

''உஸ்... உங்களுக்கும் ஒரு பெண் வேண்டும்.''

அவளை ஆழம் பார்த்துவிட்டு, ''ஒரு பெண் இல்லை. நீதான் வேண்டும்!'' என்றான் அவன் அழுத்தத்துடன்.

''இல்லை இல்லை...'' என்றாள் சக்தி பதட்டத்துடன்.

இரு பெரிய மூச்சுகளை எடுத்துவிட்டு, பதட்டத்தைச் சமாளிக்க முயன்றபோதே தன் சக்தியின்மை அவளுக்குப் புரிந்தது.

அவளது உணர்ச்சிகளுக்கு ஒரு மதிப்பும் கிடையாதா? இது என்ன அநியாயம்?

ஆத்திரத்துடன், ''உங்கள் விருப்பம் ஒன்றுதான் உலகத்தில் முக்கியம், பெண்களுடைய மனம் பற்றி ஒன்றுமே இல்லை அல்லவா?'' என்று குற்றம் சாட்டினாள்.

கையில் இருந்த பேப்பரை பைலில் வைத்து மூடிவிட்டு இன்னொரு பைலை எடுத்துப் பிரித்தான் அவன். பிறகு நிமிர்ந்து, ''இடையில் ஓர் இருபது நாட்களை அடியோடு மறந்துவிட்டுப் பேசுகிறாய்போல இருக்கிறதே!'' என்றான் குரலில் சிறு கிண்டலுடன்.

முகம் சிவந்த போதும் விடாமல், ''நான் சுகுணாவைச் சொன்னேன். அவள் மனதில் ஆசையை மூட்டிவிட்டு ஏமாற்றி விட்டீர்கள்!'' என்றாள் கோபமாக.

பொறுமை இழந்தவன் போல வேகமான மூச்சை வெளியிட்டவன், ''ஆசையைத் தூண்டும் விதமாக அவளிடம் நான் ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை என்றால் நீ நம்பப் போகிறாயா?'' என்று கேட்டுவிட்டு மேசைமேல் இருந்த வேலை மீது குறிப்பாக ஒரு பார்வை.

அவனது குறிப்பைப் பிடிவாதமாக உணர மறுத்து, ''மாட்டேன், நம்ப மாட்டேன்... நிச்சயமாக நம்பு மாட்டேன், சுகுணாவை நீங்கள் ஏமாற்றித்தான் விட்டீர்கள்!' என்று படபடப்புடன் குரலை உயர்த்திப் பேசினாள் சக்தி.

'ஹிஸ்டீரியா நோயாளி மாதிரிக் கத்துகிறேனோ?' என்று தோன்றியபோதும் அவளால் எதையும் அடக்க முடியவில்லை.

''இன்னொரு பெண்ணைப் பற்றிப் பேசுகிற ஒருவனிடம் ஆசையை எதிர்பார்த்த அவள் ஒரு முட்டாள். தானாக எதை எதையோ கற்பனை செய்து கொள்கிற முட்டாளைப் பற்றி எனக்கு எவ்வித அக்கறையும் இல்லை!'' என்றான் அவன் குரல் இறுக.

''ஆமாம். மற்றவர்களைப் பற்றி உங்களுக்கு ஒரு அக்கறை யும் கிடையாதுதான். உங்களுக்கு உங்களுடைய விருப்பங்கள் மட்டும்தான் முக்கியம். மற்றவர்கள் எப்படித் துடித்தாலும் எள்ளளவும் கவலை கிடையாது!'' என்று வேகமாகப் பேசினாள் சக்தி. வெறி கொண்டவள் போலக் கத்தினாள் என்றுகூடச் சொல் லலாம்.

அவன் வேகமாக எழுந்து இரண்டு எட்டில் அவளை அணுகி அவளது தோளைப் பற்றினான்.

தீச்சுட்டாற் போலத் துடித்த அவளை, இலகுவாகத் தன் அணைப்பில் நிறுத்தி, ''இரவும் பகலும் இருபத்து நாலு மணி நேரமும் இப்படி உன்னை என் அணைப்பில் கொள்வதுதான் என் விருப்பம். ஆனால் உன் மனதை அனுசரித்தே பெரும் பான்மை நேரம் விலகி இருக்கிறேன். மறக்காதே!'' என்று கூறிப் பின் விடுவித்து விட்டுத் திரும்பிப் போய்த் தன் வேலையில் ஆழ்ந்தான்.

சில நாட்களாகவே சக்திக்கு உடம்பில் எத்தனையோ துன் பங்கள்.

அடிக்கடி கண்களை இருட்டியது.

நெஞ்சில் பிசைந்தது.

வாய் கசந்து வழிந்தது.

பல நாட்களாகச் சரிவர உண்ணாமல் உறங்காமல் இருந்த தன் பயன் என்று நினைத்தாள்.

மனதில் இருக்கும் வேதனைகள் போதாதென்று இது வேறா என்று எரிச்சல் வந்தது... இந்த எரிச்சல் வேதனை வெறுப்பு எல்லாம் மறந்து போக, சித்தார்த்தனுடைய வீட்டில் சக்திக்குச் சற்று ஆறுதல் தந்த புகலிடம் அவனது நூலகம்தான்.

அருமையான புத்தகங்கள் நிறைய இருந்தன.

அன்று அவளிடம் அகப்பட்டது, இராமனின் சிறு பிராயம்.

''கோசலை தன் மணிவயிறு வாய்த்தவனே தாலேலோ...'' என்றவரிகளைப்படித்தபோது திடீரென்று அவளுக்கு மூச்சு நின்றது.

அதிர்ச்சியில் சில நிமிடங்கள் அவளுக்குச் சிந்திக்கக்கூட முடியவில்லை.

இந்த வெறுப்பிலும் அருவருப்பிலும்கூடப் பிள்ளை கனியக் கூடுமா?

சீ!

சீச்சீ!

நிச்சயம் இராது.

இருக்காது. இருக்காது என்று ஜெபம் போல ஆயிரம் தரம் சொல்லிக் கொண்ட போதும், அது அதுதான் என்பதற்கு உரிய காரணங்களை அடுக்கி வந்தது அறிவு.

தலை சுற்றல்.

காலை வேளைகளில் குமட்டல்.

சோர்வு.

எல்லாவற்றுக்கும் மேலாக நாள் கணக்கு.

எத்தனையோ கதைகளில் சிறு அலட்சியத்துடன் படித்தது எல்லாம் இப்போது பூதாகரமாக நின்று நர்த்தனம் ஆடத் தொடங்கின.

இது குழந்தையேதான் என்பது மனதுக்குத் தெளிவானதும் கைகளில் முகம் புதைத்து வெகு நேரம் அழுதாள்.

இதுதான் இனி வாழ்க்கை. இதிலிருந்து விடுதலை இல்லை. வாழ்ந்து தொலைப்போம் என்ற சலிப்பில் சற்றே நின்றிருந்த கண்ணீர் மீண்டும் பரவலாக ஓடியது.

மதிய உணவுக்கு என்று வீட்டுக்கு வருவது சித்தார்த்தனுக்கு வழக்கம் இல்லை.

ஆனால், மாலையில் வீடு திரும்பியபோது மனைவியின் முகம் அவனுக்குத் திகைப்பை அளித்தது.

முகமலர்ச்சியுடன் மாடர்ன் மனைவியாக அவனை அவள் வரவேற்றது இல்லைதான்.

என்றாலும், இப்படிக் கண் சிவந்து கண்ணிமை எல்லாம் வீங்கும் அளவு திடீரென்று என்ன நேர்ந்திருக்கக்கூடும்?

"என்ன?" என்றான் கவலையோடு.

"நான் டாக்டரிடம் போக வேண்டும்!" என்றாள் அவள் மொட்டையாக.

கண்களில் கூர்மையும் ஓர் ஆவலும் பரவ, "ஏன்?" என்று கேட்டான் அவன்.

"அபார்ஷன் செய்ய!" என்று வெடித்தாள் சக்தி, மீண்டும் கண்ணீர் பெருக.

சிறு அமைதிக்குப் பிறகு, ''ஏன் சக்தி, பெற்றுக் கொண்டால் என்ன?'' என்றான் இதமாக.

''எதற்கு?'' என்று சீறினாள் சக்தி. ''அழிவதற்கா? அழிப்பதற்கா? எதற்கு வாரிசு வேண்டும்?'' என்றாள் கொதிப்புடன்.

அவன் முகம் பாறையாயிற்று. ''இரண்டில் ஒன்றுதான் பிறந்தாக வேண்டும் என்பதில்லை!'' என்று திரும்பினான்.

''எப்படியானாலும் எனக்கு வேண்டாம்!'' என்றாள் சக்தி தீர்மானமாக.

அவன் நிதானமாக மீண்டும் அவள் புறம் திரும்பினான். அவளையே பார்த்து, ''சக்தி! இரவும் பகலும் உனக்கு நான் காவல் இருக்க நேர்ந்தாலும் சரி இந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளத்தான் போகிறாய்!'' என்றான் தாழ்ந்த குரலில் தெளிவாக.



## 11

**சி**த்தார்த்தனின் அந்தக் குரலில் ஒரேயடியாகப் பதறிப் போனாள் சக்தி.

மீண்டும் அவளுக்குத் தோல்வியா?

தாங்கமாட்டாமல் மீண்டும் கண்ணீர் பெருகலாயிற்று.

சட்டென முகம் இளக அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான்.

ஆனால், உடனேயே வேறு எண்ணம் கொண்டவனாகத் தன் அறைக்குச் சென்றுவிட்டான்.

அப்போது மட்டுமல்ல, இது விஷயமாக சக்தி எவ்வளவோ அவனிடம் சீறி, அழுது, ஆத்திரப்பட்டு வாதாடிப் பார்த்தும் தன் பிடிவாதத்தில் இருந்து அவன் மாறவே இல்லை.

விரும்பாமல் வெறுப்பில் வந்த குழந்தை ஊனமாகப் பிறக்கக்கூடும் என்று பயமுறுத்திக்கூடப் பார்த்தாள்.

பாறையில் மோதி ஓய்வது போலக் கடைசியாக ஓய்ந்து போனாள்.

ஒரு குழந்தை உருவாகும்போது முதல் மாதங்களில் ஒரு தாய்க்கு ஏற்படும் அத்தனை உபாதைகளும் சக்திக்கும் ஏற்பட்டன.

வேண்டாத பிள்ளை என்பதாலோ என்னவோ இந்தத் துன்பங்கள் சக்தியைப் பல மடங்கு அதிகமாகவே தாக்கின.

அவன் எவ்வளவோ உதவ முயன்றான். தலை சுற்றுகையில் இதமாகத் தாங்க வந்தான். குமட்டலின் போது நெற்றியைப் பிடிக்கக் கையை நீட்டினான். தலை பாரத்துடன் சோர்ந்து கிடக்கையில் இதமாக வருட முனைந்தான். ஆனால், அவனது உதவிகள் அத்தனையும் அவள் பிடிவாதத்துடன் ஒதுக்கினாள்.

அவன் வீட்டுக்கு அழைத்து வந்த டாக்டரைக் கையைத் தொட்டுப் பார்க்கவும் அனுமதிக்கவில்லை.

''சில பெண்களுக்குத் தொடக்க காலத்தில் இப்படி ஒரு 'காம்ப்ளெக்ஸ்' வருவதுண்டு, சித்தார்த்தன். பயப்பட வேண்டாம். இந்த மாத்திரைகளைக் கொடுங்கள். வாந்தி நிற்கும். தலை சுற்றலைக்கூட ஓரளவு தடுக்கும். தைரியமாக இருங்கள்,'' என்று புன்னகையுடனேயே விடைபெற்றுச் சென்றார் அந்த டாக்டர் அம்மா.

டாக்டர் தந்த மாத்திரைகள் கழிவு நீர்க்குழாயில் மறைந்தன.

முகத்தின் மேல் உள்ள கோபத்தில் கண்ணைப் பிடுங்கிக் கொண்டதாகச் சொல்வார்கள்.

தனக்காக அவன் பாடுபடுகிறான் என்பதை உணர்ந்தபோது அவனைப் பழி வாங்குவதற்காகவே டாக்டருடைய ஆலோசனைகளை அலட்சியப்படுத்தினாள்.

''பார், உன்னால்தான், உன் பிடிவாதத்தால்தான்...'' என்று காட்டுவதற்காக வேண்டுமென்றே தன் துன்பங்களைப் பல மடங்காக்கிக் கொண்டு அவனை வருத்தும் முயற்சியில் தன்னையும் மிகுதியாகத் துன்புறுத்திக் கொண்டாள்.

இரவு பகல் கண்ணீரிலேயே கரைந்தாள்.

சிலநாள் பொறுத்துப் பார்த்துவிட்டு அவளைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் சென்றான் சித்தார்த்தன்.

எலும்பும் தோலுமாக இருந்த மகளைப் பார்த்து முதலில் கலங்கிய சீதைக்கு விஷயம் தெரிந்ததும் மெல்ல முகம் மலர்ந்தது.

''கடவுள் கிருபை!'' என்று கன்னத்தைத் தொட்டு நெட்டி முறித்தாள்.

''நான் வேலையை முன்னிட்டு வெளியே செல்லும் நேரங்களில் சக்தியைச் சற்று கவனத்துடன் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று மகள் மீது அக்கறை காட்டிப் பேசிய மருமகன் முன்பு செய்த பிழைகள் எல்லாம் அடியோடு மறந்து போயின சீதைக்கு.

வேதனையோடு கிணற்றடிக் கல்லின்மீது அமர்ந்திருந்தாள் சக்தி.

தாயின் முக மலர்ச்சி அவளுள் மிகுந்த வருத்தத்தை உண்டாக்கியிருந்தது.

மகள் கருவுற்றிருக்கிறாள் என்பதில் இவ்வளவு ஆனந்தப் படுகிறார்களே, இந்த அம்மா.

இந்தப் பிள்ளைக்குப் பின்னே மகளுக்கு எவ்வளவு அவமானம் நேர்ந்திருக்கக் கூடும் என்று புரிந்து கொள்ள முடியாதா?

அந்த அளவுகூட யோசிக்கத் தோன்றாதா?

எப்படியோ, ஊர் உலகத்தின் முன்னே காட்ட ஒரு பிள்ளை என்று வந்துவிட்டால் போதுமோ?

தாயன்பு, பாசம் எல்லாம் இவ்வளவுதானா?

சக்திக்கு மனம் தவித்தது.

இப்படி ஒவ்வொன்றும் துன்பமாகவே இருப்பதை எண்ணியபோது, இதே தோட்டத்தில் அவள் சிட்டாய்ச் சிறகடித்த நாட்கள் நினைவுக்கு வந்தன.

ஒருவேளை அந்த நாட்களை நினைவு கூர்ந்தால் மனதின் பளு இலகுவாகுமோ என்ற ஆவலில் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

கொடியாகக் கிடந்தது ராமபாணம், ஒரு தோழி வீட்டில் வாங்கி வந்து நட்டு மூன்று மாதங்கள் பொறுமையாக நீர் ஊற்றியபின் அதுமுதல் தளிர்விட்டது, மொட்டுவிட்டது, உள்ளங்கை அகலத்திற்கு நீள இதழ்கள் விரிந்து தோட்ட முழுமையும் மணம் பரப்பியது... நினைக்க நினைக்கக் கண்ணீர்தான் பெருகியது.

பின்புறமாகக் காலடி ஓசை கேட்டது.

சித்தார்த்தன்தான்.

எழுந்து செல்ல முயன்றபோது, இலகுவாக அவளது தோளைப் பற்றி அழுத்தி அமரவைத்து, "உட்கார் சக்தி," என்றான் அவன்.

''அழகான, அதேசமயத்தில் லாபகரமான தோட்டம்!'' என்று பாராட்டினான்.

''ரசித்துக் கொண்டிருந்தாயா, சக்தி?'' என்று பேச்சுக் கொடுத்தான்.

பேச விருப்பமற்று உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள் சக்தி.

அவன், ''கேட்கிறேனே,'' என்று அழுத்தம் கொடுக்கவும், ''பழங்கணக்குப் பார்த்தேன்,'' என்றாள் வெறுப்புடன்.

''பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பது போல, இந்த இடத்தில் ஒரு காலத்தில் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தேன் என்று எண்ணிப் பார்த்தேன். இன்று நரகமாக மாறிவிட்ட விசித்திரத்தை நினைத்து வருந்திக்கொண்டு இருந்தேன்,'' என்று கொட்டித் தீர்த்தபோதே மீண்டும் விழிகளில் நீர் பெருகலாயிற்று.

''சக்தி, என்ன இது, குழந்தைபோல், நீ அழுதால் உன் தாயார் வருத்தப்பட மாட்டார்களா?''

''எதிர்பார்த்துத்தானே திருமணத்தை நடத்தி வைத்தார்கள், படட்டும்!'' என்றாள் விட்டேற்றியாக.

''சக்தி, உன் கோபத்தை எல்லாம் என்னோடு நிறுத்திக்கொள். எனக்குத் தெரிந்த அளவில் உன் தாயார் நியாயமான அளவு கூடச் சுகம் அனுபவித்தவர்கள் அல்ல; அவர்களை மேலும் மேலும் துன்புறுத்துவது தவறு!'' என்றான் சித்தார்த்தன்.

''சைத்தான் வேதம் ஓதுகிறது என்று ஒரு வார்த்தை சொல்லக் கேட்டிருககிறேன்,'' என்றாள் சக்தி ஏளனமாக.

அவன் முகம் லேசாகச் சிவந்தது. ''எதிர்பார்த்தேன் ஆனால் ஓதுவது யாராக இருந்தாலும், ஓதப்படுவது வேதம் என்பதுதான்

முக்கியம் சக்தி. உன்னை இழக்க முடியாத காரணத்தினால் நான் ஒரு துன்பம் இழைக்க நேர்ந்தது. ஆனால் அதற்காக உன் தாயாரை மேலும் துன்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை,'' என்றான்.

மனதிற்குப் பிடிக்காவிட்டாலும் அவன் பேச்சில் உண்மை இருந்தது சக்திக்குப் புரிந்தது.

இதே தாயாரை உள்ளங்கையில் வைத்துத் தாங்க வேண்டும் என்று மனதில் உறுத்திக் கொண்டிருந்தது நினைவு வந்தது.

அம்மாவுக்கு அவளது வேதனை புரியவில்லை என்று நினைத்தாளே. ஒருவேளை வேறு ஒருவனுடன் இணையமாட்டாள் மகள் என்பதை உணர்ந்து, இவனோடாவது அவளது வாழ்வு மெல்ல மலர்ந்துவிடக்கூடும் என்று எண்ணியிருப்பார்களோ?

மகளின் வாழ்வு மலர இது ஒரு வாய்ப்புதான் இருக்கிறது என்று எண்ணி மனத்தில் உறுதியாக நின்றார்களோ?

ஆனால் வேரில் தீ வைத்தபின் மலர் எங்கிருந்து வரும்?

மீண்டும் கண் கலங்கியது சக்திக்கு.

வாயில் கதவு திறக்கும் ஓசை கேட்கவும், சட்டெனக் கண்களை அழுந்தத் துடைத்துக்கொண்டு பார்த்தாள் சக்தி.

பார்த்த அளவில் அவள் முகம் மேலும் வெளுத்தது.

ஏனெனில் வந்தவன் பலராம்.

மனைவியின் வேகமான மூச்சிழுப்பையும் முக வெளுப்பையும் உணர்ந்து, வாயில் புறம் தானும் பார்த்தான் சித்தார்த்தன்.

திறந்த கதவருகில் தயங்கி நின்றவனைக் கண்டதும், 'யார் சக்தி, திருச்சி பலராமனா?' என்று ஊகித்துக் கேட்டான்.

சக்தியின் பதிலை எதிர்பாராமல், ''மிஸ்டர் பலராம்! இங்கே வாருங்கள். நாங்கள் இங்கே இருக்கிறோம்...'' என்று குரலும் கொடுத்தான்.

திகைப்புடன் திரும்பிய பலராமின் கண்கள் பெரிதாக விரிய மேலும் சற்றுத் தயங்கிவிட்டு மெல்ல அவர்கள் இருந்த பக்கம் வரலானான்.

''வாருங்கள் மிஸ்டர் பலராம். உங்கள் பெற்றோர் எல்லாம் சுகமா?'' என்று வீட்டுக்கு உடையவனாக வந்தவனை விருந்தி னனாக்கி வரவேற்றான் சித்தார்த்தன்.

திணறிப்போய், ''நான்.. நான் அத்தையைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்... வந்து... உங்களை எதிர்பார்க்க வில்லை...'' என்று தடுமாறினான் பலராம்.

எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் பிசிறின்றிச் சித்தார்த்தன் பேசுவதையும் பலராம் திணறுவதையும் கண்ட சக்திக்கு ஒரு மாதிரி ஆயிற்று.

''அத்தையும், மாமாவும் வரவில்லையா, அத்தான்? குமார் எப்படிப் பரீட்சை எழுதியிருக்கிறான்? நன்றாகத்தானே?'' என்று விசாரித்து அவனை ஆசுவாசப்படுத்திக் கொள்ள இடம் அளித் தாள்.

நன்றி கண்களில் துவங்க, ''ஆமாம், சக்தி. முதல் வகுப்பு எப்படியும் வரும் என்றான். சக்தி, இங்கு மாற்றலாகி வந்து இருக்கிறேன். ஆஸ்டலில் தனியாகத்தான் இருக்கிறேன். ஒன்றும் பிடிக்கவே இல்லை... அத்தையையாவது பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்,'' என்றான் அவன்.

''ஏன் அத்தான் இந்தக் கஷ்டம் எல்லாம்? மாற்றல் வேண் டாம் என்று திரும்பிப் போக வேண்டியதுதானே!''

''சொல்லலாம் சக்தி. ஆனால் இதில் ஒரு சிக்கல். அத்தைக்கும் உனக்கும் உதவியாக நான் இங்கே இருக்க வேண்டும் என்று அம்மாவும் அப்பாவும் நினைத்து இங்கே மாற்றல் வாங்கச் சொல்லி, அப்படிக் கேட்டு வந்த மாற்றல் இது. இப்போது அவசியம் இல்லை. வேண்டாம் என்றால் மாற்றல் தர மறுத்து விட்டார்கள்...'' என்று சொல்லாமல்விட வேண்டியதை எல்லாம் பேச்சு வாக்கில் சொல்லிக் கொட்டிவிட்டு, சக்தியின் முகம் போன போக்கைப் பார்த்து நாக்கைக் கடித்துக் கொண்டு நின்றான் பலராம்.

தாம் கேட்க நினைத்ததைக் கேளாமலே அவர்கள் செய்தும் பலனின்றிப் போனதை எண்ணி வாயடைத்து நின்றாள் சக்தி.

இவர்களின் முகங்களை லேசாகப் பார்த்துவிட்டு இயல்பாக, ''என்ன கம்பெனியில் வேலை பார்க்கிறீர்கள் பலராம்? முடிந்தால் உங்களுக்கு மாற்றல் கிடைக்க ஏதேனும் செய்கிறேன். ஆனால் சென்னைக்கு மாற்றல் என்றால் அது பதவி உயர்வு என்ற நிலையில் இருக்கும், பெரிய அலுவலகத்தில் வேலை செய்து பெயரெடுப்பது என்றைக்கும் நல்லது. வந்தது வந்துவிட்டீர்கள். கொஞ்சகாலம் இருந்துதான் பாருங்களேன்,'' என்றான் சித்தார்த்தன்.

''அப்பாவும் அப்படித்தான் எழுதுகிறார்... நீங்களும் அப்படியே சொல்கிறீர்கள். இது போலவே செய்கிறேன், சார்,'' என்று பணிந்து பேசினான் பலராம்.

ஏற்கெனவே சித்தார்த்தன் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலச் சக்திக்கு ஒரு பிரமை இருந்தது.

இப்போது அவன் என்னவோ பெரியமனிதன் போலவும் அவனிடம் பணிந்து போகும் சின்னப் பையன் போலவும் பலராம் நடந்து கொண்டது அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

பலராமும் அதை உணர்ந்தவன் போல நிமிர்ந்து, "நான் அத்தையைத்தான் பார்க்க வந்தேன்," என்றான் சற்று விரைப்பாக.

"ஓ! சென்று வாருங்கள் பலராம், அனேகமாக அவர்கள் பின் கட்டில் சமையல் செய்து கொண்டிருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். இல்லையானால், நீங்கள் வெளிக்கதவைத் திறந்த போதே கவனித்திருப்பார்கள். நீங்கள் செல்லுங்கள். நாங்கள் சற்றுப் பொறுத்து வருகிறோம்," என்று நடக்க முயற்சித்த சக்தியின் கையைப் பற்றித் தன்னுடன் நிறுத்திக் கொண்டான் சித்தார்த்தன்.

உரிமையுடன் பற்றியிருந்த கரத்தை ஆத்திரத்துடன் உறுத்து விழித்துவிட்டு வேகமாக வீட்டை நாடிச் சென்று மறைந்தான் பலராம்.

"பாவம்! பெற்றோர் மடியிலே வளர்ந்த பிள்ளை!" என்று முறுவலித்தான் சித்தார்த்தன்.

பாவம்! தங்களைப் பார்த்துச் சிரிக்கத்தான் செய்கிறான் என்பதை நன்றாகப் புரிந்து கொண்ட சக்திக்கு ஆத்திரம் வந்தது. "பின்னே எல்லோருக்கும் உங்களைப் போலத் தனிக்காட்டு ராஜாவாக வளரும் பா... பாக்கியம் கிடைக்குமா?" என்றாள் அந்த வாக்கியத்தில் ஓர் அழுத்தம் கொடுத்து.

அவன் சற்றும் கலங்காமல், "அது பாக்கியம் அல்ல, சக்தி. ஆனால் நான் சொன்னது போல என்னிடம் நீ எவ்வளவு கோபமாக வேண்டுமானாலும் பேசலாம்," என்று மறு கரத்தால் அவளது கன்னத்தை மெல்ல வருடினான்.

சட்டென அவன் கையை விலக்கிவிட்டுச் சினத்துடன் வேகமாகத் திரும்பிச் செல்ல முயன்றாள் சக்தி.

திரும்பிய வேகத்தில் தலை சுற்றிக் கீழே விழப்போனாள்.

விழாமல் அவளைக் கைகளில் தாங்கி, ''உடல் நிலையைக் கூடத் தெரியாத வேகமா?'' என்று கடிந்தான் அவன், கணவனாக.

ஆதரவாக அவள் கரத்தைப் பற்றி மெல்ல நடத்தியபடி, ''இந்த வேகத்துக்கும் பலராமனுக்கும் எப்படிப் பொருந்தும்? பாவம். இரண்டே நாளில் தலையாட்டிப் பொம்மையாகிப் போயிருப்பான். அந்த மாதிரி அசிங்கமான நிலையில் இருந்து தன்னைக் காப்பாற்றியதற்காக என்றேனும் ஒருநாள் அவன் எனக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்!'' என்று கூறித் தன் பல் வரிசை தெரிய மெல்லச் சிரித்தான்.

கோபமும் எரிச்சலும் வந்தபோதிலும், சக்தியால் மறுத்துப் பேச முடியவில்லை.

கணவன் சொன்னது நினைவில் இருக்கவும், தாயைக் கவனித்துப் பார்த்தாள் சக்தி.

முன் ஓரமெல்லாம் மிகுதியாக நரைக்கத் தொடங்கியிருந்த தலையும், குழிக்குள் போயிருந்த கண்களுமாகப் பதினைந்து வயது ஏறியிருந்த தோற்றம் அவள் மனதை உருக்கியது.

சீதையின் முன்னிலையில் - அப்போது கணவனிடம் சிரித்துப் பேச முடியாவிட்டாலும் ஓரளவு தன்னை அடக்கியே நடந்து கொண்டாள்.

ஆனால் அதுவே பெரும் முயற்சியாகத் தோன்றவும் இரண்டே நாட்களில் கிளம்பிவிட்டாள்.

எது எப்படி ஆனாலும் தாயார் இனிமேல் சற்று நிம்மதியாக இருப்பாள் என்று தோன்றியது.

திரும்பிச் செல்லும்போது அவன் நன்றி தெரிவித்தான்.

ஏன் என்று கேட்கவில்லை. சக்தி. ஆத்திரத்துடன், ''நான் மிருகம் அல்ல. அதோடு அவர்கள் என்னுடைய தாயார்!'' என்று பதில் இறுத்தாள்.

கூடவே, ''மற்றவர்களின் வேதனைகள் பற்றி, உங்களுக்குக் கூடவா அக்கறை?'' என்று இகழ்ச்சியாக உதட்டை வளைத்தாள்.

பாதையில் இருந்து பார்வையைத் திருப்பாமலே, 'என் விஷயம் என்று வரும்போது மற்றவர்களை நான் மதிப்பது இல்லைதான். ஆனால் அவசியமற்று அடுத்தவர்களைப் புண் படுத்துவதும் என் வழக்கம் அல்ல!'' என்றான் அவன்.

''ரொம்பவும் உயர்ந்த குணம்!'' என்றாள் சக்தி குத்தலாக.

அவன் தோளைக் குலுக்கினான்.

இதே கோபம் வருத்தம். எரிச்சல் இகழ்ச்சியினூடே மேலும் மூன்று மாதங்கள் கழிந்தன.

சக்திக்கு அடிவயிறு சற்றே வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. அப்போது சித்தார்த்தனுடைய உறுதியான உள்ளம் முதல் தடவையாக அதிர்ந்தது.



## 12

ஐந்தாம் மாதம் தொடங்கியதும், பிடிவாதமாகச் சக்தியை டாக்டரிடம் அழைத்துச் சென்றான் சித்தார்த்தன்.

அவள் முன்போலவே அலட்சியப்படுத்தி மறுக்க முயன்றபோதும் அவன் விடவில்லை.

அவளையே பார்த்து, ''சக்தி! நீ நாளை டாக்டரிடம் கட்டாயம் உடலைச் சோதனை செய்து கொள்ளப் போகிறாய்!'' என்றான் தாழ்ந்த குரலில் தெளிவாக.

அந்தக் குரல் நெஞ்சில் பரபரப்பை ஏற்படுத்திய போதும் சக்தி முன்போல் பயந்து விடவில்லை.

இந்தச் சில மாதங்களில் அவன் அவளுக்கு வெகுவாக விட்டுக் கொடுத்து, அவள் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து விலகி இருந்தது எல்லாமாக அவளிடம் ஒரு தைரியத்தை உருவாக்கி இருந்தன.

அந்தத் தைரியத்துடன் தலையை நிமிர்த்தி, "முடியாது என்றால்...?" என்று கேட்டாள்.

அவன் அமைதியாகவே, "சக்தி! முன்பு டாக்டர் வந்தபோது பெற்ற வெற்றியை எண்ணிப் பேசுகிறாயாம்மா? அப்போது இதன் தொடக்க காலம். புதுமையின் மனமும் உடம்பும் அலை பாயும் சமயம். வற்புறுத்த வேண்டாம் என்று டாக்டர் உமா சொன்னாள். 'ஆனால் ஐந்தாம் மாதம் அவையெல்லாம் குறைத்து மறைந்துவிடும், மேலும் ஏதாவது சிக்கல் இருந்தாலும் அப்போது தெரிந்து கொள்வது நல்லது!' என்றும் சொல்லியிருந்தாள். அதற்காகத்தான் சொல்கிறேன். சொல்வதைக் கேள்!" என்று எடுத்துக் கூறினான்.

"மறுத்தால் என்ன செய்து விடுவீர்களாம்? கையையும் காலையும் கட்டியா சோதனை செய்வீர்கள்!" என்றாள் சக்தி துடுக்காக.

அவள் அருகில் நெருங்கி, மெல்லச் சொன்னான் அவன். "இங்கே நீ முதல் தடவையாக வந்த நிலைமை மறந்து விட்டதா?"

திகைத்து விழித்தவளின் கூந்தலை மென்மையாக வருடி, "நீ புத்தியோடு நடந்து கொண்டால் அதெல்லாம் அவசியமற்றுப் போய்விடும்!" என்றான் மெல்லவே.

அந்த மெல்லிய குரலுக்கு இரும்பு வலு உண்டு என்பதை அனுபவத்தில் கண்டிருந்த சக்தி வேறு வழி காணாமல் அவனோடு டாக்டரிடம் சென்றாள்.

பரிசோதனை செய்த டாக்டர் உமா, பிள்ளை வளர்ச்சி சரியாக இருப்பதாகச் சொன்னாள்.

எதற்கும் ஒரு ''எக்ஸ்ரே'' படம் எடுத்துப் பார்த்துவிட வேண்டும் என்றாள்.

மறுநாள் எக்ஸ்ரே ரிசல்ட்டை அறிய மீண்டும் சென்ற போது தான் முதல் தடவையாகச் சித்தார்த்தன் அதிர்ந்தான்.

''பாருங்கள் சித்தார்த்தன். இது உங்கள் மனைவியின் வயிற்றுப் பகுதி,'' என்று படத்தைப் பிரேமில் போட்டு ஒளி பாய்ச்சிக் காட்டினார் டாக்டர் உமா. ''இங்கே கிண்ணம்போல அமைந்து இருக்கும் இந்தப் பகுதி வழியேதான் குழந்தை வெளி வரவேண்டும். இந்தப் பாதிக்கும் மறுபாதிக்கும் வித்தியாசம் இருக்கிறது பாருங்கள் இந்தப்பக்கம் ஒரே எலும்பாக உறுதியாக இருப்பது, மறுபுறம் இரண்டாகப் பிரிந்து அதிலும் ஒன்று பலவீனமாகத் தெரிகிறது அல்லவா?''

''இதனால் ஆபத்தா டாக்டர்?'' என்று அவசரத்துடன் குறுக்கிட்டான் சித்தார்த்தன்.

''யாருக்கு வந்த விருந்தோ!'' என்று அதுவரை அமர்ந்திருந்த சக்தி சற்று சுவாரசியத்துடன் கவனிக்கத் தொடங்கினாள்.

''ஆபத்து? விஞ்ஞானம் வெகுவாக முன்னேறி இருக்கும் இந்த நாளில் ஆபத்து என்று என்ன இருக்கிறது சித்து? சிசேரியன் பண்ண வேண்டியிருக்கும் அவ்வளவுதான்... மற்றப் படி...''

''மற்றப்படி...''

''வலி அதிகம் ஏற்படுமுன் அதைச் செய்ய வேண்டும், சித்தார்த்தன்.''

''காரணம்?''

''அந்த எலும்பு பலவீனமாக இருப்பது தெரிகிறது அல்லவா? இயற்கைப் பிரசவத்தின் போது வெளிவரத் துடித்துக் கொண்டு பிள்ளை முட்டும்போது இந்த எலும்பு தாங்காது. விரிந்து கொடுக்குமுன் உடைந்துவிடும். அது உடனே சிறுநீரக வழிக்குச் சேதம் உண்டாக்கும். சக்தியின் உயிருக்குக்கூட மிகுந்த ஆபத்தை விளைவிக்கும்.''

''டாக்டர்...?'' என்று கூறியபடி எழுந்து நின்றான் சித்தார்த்தன்.

ஆச்சரியமாக அவனைப் பார்த்துவிட்டு, ''அதற்குத்தான் அவசியம் இல்லையே சித்து, ஏன் பதற வேண்டும்?'' என்றார் டாக்டர் இதமாக.

பதட்டத்துடன், ''டாக்டர்! அந்த எலும்பை வலுப்படுத்த வழியில்லையா? அல்லது அப்புறப்படுத்தி விட்டால் என்ன! இது... இது இவளுக்கு ஏன்?... அல்லது எல்லோருக்கும் இப்படித்தான் இருக்குமா?'' என்று கேட்டான் சித்தார்த்தன்.

''பொதுவாக இப்படி இருப்பது இல்லை. சக்திக்கு வித்தியாசமாக அமைந்து விட்டிருக்கிறது!'' என்று சக்தியைப் பார்த்து முறுவலித்தார் டாக்டர்.

இவர்கள் இருவரும் மிகப் பழகியவர்கள் போலப் பேசிக் கொள்கிறார்களே என்று நினைத்தாள் சக்தி. 'சித்து! உமா...'

டாக்டர் தொடர்ந்து பேசவும் அவசரமாகக் கவனிக்கலானாள். ''சில பேருக்கு ஆறு விரல்கள் இருப்பதைப்போல இங்கே அதிகப்படி எலும்பு, மார்பு எலும்புகளில்கூட அதிகப்படி எலும்பு இருக்க நான் பார்த்திருக்கிறேன்! படைப்பு விசித்திரங்களில் இதுவும் ஒன்று,'' என்றார் டாக்டர் அமைதியாக.

''ஓ! ஓ!''

''சித்து, நீங்கள் இப்படிக் கலங்கக் காரணம் இல்லை. அவளைத் தைரியமாக வைத்துக் கொள்வதைவிட்டு விட்டு...'' என்றார் டாக்டர் கடிவது போல.

பிரமையை அகற்றுவது போலத் தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டான் அவன்.

''இல்லை டாக்டர்... சக்திக்கு இந்த வலியை இனம் காணத் தெரியாது போனால், என்ன ஆகும் என்று ஒரு கணம். ஓ...!''

''அதெல்லாம் ஒன்றும் நடக்காது சித்து. அந்த வலி எப்ப டித் தொடங்கும் என்பதில் இருந்து சக்திக்கு நன்றாக உரை ஏற்றி விடுகிறேன். கவலையே தேவையில்லை. ஏன் சக்தி, டைப் பண்ணித் தந்து விடட்டுமா?'' என்று சிரித்தார் டாக்டர்.

முதன் முதலாக வாயைத் திறந்து, ''வேண்டாம்,'' என்று பதில் கூறிவிட்டு லேசாக முறுவலித்தாள் சக்தி.

''சித்து தலைகுப்புற விழுந்து கிடப்பது ஏன் என்று இப்போது தெரிகிறது!'' என்று கேலியாகப் பேசி வழியனுப்பி வைத்தார் டாக்டர்.

வீடு வந்து சேரும் வரையில், சித்தார்த்தன் ஒன்றுமே பேச வில்லை.

வழக்கம்போல் தன் அறைக்குள் ஒடுங்கச் சக்தி சென்ற போது, அவனும் அவள் பின்னாலே வந்தான்.

அவளது கைகளைப் பற்றி, ''சக்தி! உனக்குப் பயம் இல்லை யாம்மா?'' என்று கரிசனமாகக் கேட்டான்.

அவன் கைகளை விலக்கியபடி, ''இல்லை,'' என்றாள் சக்தி சுருக்கமாக.

''சக்தி... சக்தி. இந்த வலி எப்படி இருக்கும், எங்கே வலிக் கும் என்றெல்லாம் டாக்டர் உனக்குத் தெளிவாகச் சொல்லித்

தருவார். கவனமாகக் கேட்டு வைத்துக்கொள் எதற்கும் உன் தாயாரிடமும் கேட்டுத் தெரிந்து கொள். அலட்சியமாக இருந்து விடக்கூடாது சக்தி. முதல் வலி எடுத்தவுடனேயே சொல்லி விடவேண்டும். தாமதமானால் தானே ஆபத்து என்று டாக்டர் சொல்லுகிறார். நாம்தான் முதலிலேயே பார்த்துவிட லாமே. முதல்வலி... ஏன் வலிக்கிற மாதிரி இருந்தால் கூடச் சொல்லிவிட வேண்டும். சரிதானா சக்தி?''

குரல் நடுங்க, அவன் சொல்லிக் கொண்டே போனான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த சக்தியின் கண்கள் ஆச்சரியத்தில் அகன்றன.

அவள் அறிந்த வரையில், அவன் உணர்ச்சிகளைக் கொட்டுகிறவன் அல்ல.

இந்த நடுக்கம், பதட்டம் எல்லாம் அவனிடம் அவள் கண் டவை அல்ல.

ஒரே ஒருதடவை அவன் சற்றே பதட்டமாக - அதைக்கூடப் பதட்டம் என்று சொல்ல முடியாது - ஓர் அவசரத்துடன் பேசி னான் என்றுதான் சொல்லலாம்.

கெஞ்சுவது அறியாத ஒன்று.

அவளது நடுக்கங்களையும் பதட்டங்களையும் எந்த வித மான பாதிப்பும் இன்றிப் பார்த்திருந்தவன்.

அவன் இன்று பதைப்புடன் பேசுகிறான்.

அவளது கெஞ்சலுக்கு மதிப்புத் தராதவன்.

அவளிடமே கெஞ்சுகிறான்!

இந்தத் தலைகீழ்த்தனத்தில் சக்திக்குச் சிரிப்பு வந்தது.

மிகுந்த தவிப்புடன் சொல்லிக்கொண்டு இருந்த அவனுக்குச் சக்தியின் சிரிப்பு திகைப்பூட்டிற்று. ''ஏன் சிரிக்கிறாய் சக்தி? ஏன்... ஏன்? சிரிக்காதே சக்தி!'' என்றான் மேலும் பதறிப்போய்.

வெகு நாட்களுக்குப் பின்னால் வாய்விட்டுச் சிரித்த சக்திக்கு நிறுத்தவே முடியவில்லை.

சிரிப்பின் ஊடே திணறியபடி, ''பூனைக்கும் காலம் வருகிறது!'' என்றவளுக்கு மேலும் மேலும் அலைமேல் அலையாகச் சிரிப்பு பொங்கியது.

சற்றுநேரம் பிரமித்து நின்றான் சித்தார்த்தன்.

பிறகு மனைவியைப் பிடித்து லேசாக உலுக்கி, ''இதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான்.

ஒருவாறு சிரிப்பை நிறுத்தினாள் சக்தி. அவன் கண்களை நேராகச் சந்தித்து, ''மெய்யாகவே புரியவில்லையா?'' என்று கேட்டாள்.

அவன் முகம் வெளுப்பதை ரசித்துப் பார்த்தபடி, ''சீக்கிரமே நிம்மதியாகச் சாகப் போகிறேன்!'' என்றாள்.

அவள் கைகளைப் பற்றி, ''இது என்ன மடத்தனம், சக்தி?'' என்று கலங்கினான் அவன்.

அவள் தோளைக் குலுக்கினாள்.

''இதில் உங்களுக்கு என்ன நஷ்டமாகிவிடப் போகிறது. அந்த டாக்டர் உமாவையே மணந்து கொள்ளலாம்!'' என்றாள் கிண்டலாக.

''உளறாதே. அவள் என் நண்பனின் மனைவி, எங்களோடு சேர்ந்து படித்தவளும்கூட. இதற்குப் போய்... அதைவிடு சக்தி. சாவு என்பது விளையாட்டல்ல, புரியாமல் பேசாதே!'' என்றான் வேகமாக.

''புரிந்துதான் பேசுகிறேன்!'' என்றாள் அவள் தெளிவாக.

நம்ப முடியாதவன் போலத் தலையைக் குலுக்கிக் கொண் டான் அவன். பிறகு நிமிர்ந்து, ''இதற்கு நான் விடமாட்டேன்!'' என்றவன், அன்றே அவளை அழைத்துக் கொண்டு மீண்டும் உமாவிடம் சென்றான்.

''இந்தக் குழந்தை வேண்டாம், உமா. எப்படியாவது அழித்துவிடு!'' என்று பதறினான்.

''ஹேய்! இது என்ன அசட்டுத்தனம், சித்தார்த்தன்!'' என்று வியந்தார் அவர்.

ஏன் என்று விளக்கமுடியாமல், ''வேண்டாம் உமா!'' என்று திரும்பிச் சொன்னான் அவன்.

திகைப்புடன் சக்தியிடம் திரும்பினார் டாக்டர்.

செல்லக் கோபம் காட்டிக் கணவனை முறைத்துவிட்டுக் கன்னம் குழிய டாக்டரிடம் சிரித்தாள் சக்தி.

''எனக்கு வேண்டும், டாக்டர்!'' என்றாள் இனிய குரலில்.

மீண்டும் சித்தார்த்தனிடம் திரும்பி, ''ஐந்து மாதம் ஆகிவிட் டால் குழந்தை முழு உருப்பெற்றுவிட்ட ஒரு தனி உயிர் சித்து. அதை அழிப்பது என்றால் உயிர்க் கொலை. இது புரியாமல் பேசக்கூடாது!'' என்று கடிந்தார் டாக்டர் உமா.

''சக்தியைவிடக் குழந்தை பெரிதல்ல, உமா.''

''இருவருக்குமே ஒன்றும் நேரப் போவது இல்லை. ஆகை யால் ஏன் வீணாக அலட்டிக்கொள்ள வேண்டும்?'' என்று கேட் டார் டாக்டர்.

''விஷயம் புரியாமல் பேசுகிறாயே, உமா.'' என்று சித்தார்த் தன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டவரிடம், பதில் சொல்ல முடியாமல், அவன் திணற, அதை ரசித்தபடி ''வலியைச் சரி வரப் புரிந்து கொள்ளாமல், சொல்லாமல் விட்டு விடுவேனோ என்று பயப்படுகிறார், அதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்கி றீர்களா, டாக்டர்?'' என்று கேட்டாள் சக்தி.

''புரியாமல் ஏன் போகும்? கேளுங்கள் சக்தி. முதலில் இடுப் பில் கிட்டி போட்டது போல பிடிப்பு வரும். அதில் இருந்தே கண்டு கொள்ளலாம்...'' என்று தொடங்கிப் பிள்ளை வலியைப் பற்றி விளக்கினார் டாக்டர்.

ஆனால் நண்பனின் முகம் தெளியாததைக் கண்டு, ''இன்ன மும் பயமா சித்து? வேண்டுமானால், ஒன்பதாம் மாதம் முடி கையில் பிள்ளை பிறக்க வேண்டிய சமயத்துக்கு ஒருவாரம் முன்பாகவே சிசேரியன் செய்து விடலாமா?'' என்று கேட்டார்.

''அப்படித்தான் செய்ய வேண்டும்,'' என்று பாய்ந்தான் சித்தார்த்தன்.

''வேண்டாம், டாக்டர்!'' என்றாள் சக்தி. தெளிவாகக் கண வனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''இவர் படும்பாட்டைப் பார்த்தால் இனி ஒரு பிள்ளை என்பது இராது என்று தோன்றுகி றது. இந்த வலி, இதெல்லாம் அடியோடு தெரியாமல் போய்வி டுமே, அதெல்லாம் தெரிந்துகொள்ள ஆசையாக இருக்கிறது டாக்டர், அதனால் வலி எடுத்த பிறகே பார்த்துக் கொள்ள லாம்,'' என்று பசப்பினாள்.

''ராட்சசி!'' என்று முணுமுணுத்தான் சித்தார்த்தன்.

உமாவும் சிரித்தபடி, ''அவள் விருப்பம் போலவே விட்டு விடுங்கள் சித்து. பெண் மனம் பெண்ணுக்குத் தெரியும். அதனால் சொல்கிறேன்,'' என்றார்.

''அதைப் பிறகு பார்ப்போம்,'' என்று கிளம்பிவிட்டான் அவன்.

வீட்டில் தனிமையில் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான்.

ஆனால், அவள் பிடிவாதமாக, ''இருபத்து நாலு மணி நேர மும் விழித்திருந்து காவல் இருக்க நேர்ந்தாலும் சரி, இந்தக் குழந்தையை இடையில் நான் விடப் போவதில்லை. கூடவே சாவையும் விடப் போவதில்லை!'' என்றாள்.

முதலில் செய்வது அறியாது திணறிய அவன் முகத்தில் அவள் முதலில் கண்ட பார்வை பரவுவதைக் கண்டாள் சக்தி.

எண்ணம் நிறைவேறுவது ஒன்றே குறியாக, எந்த வழியை யும் கடைப்பிடிக்கத் துணிந்தவனாக-

ஏதோ பேசத் தொடங்கியவனை, ''ஒரு வார்த்தை!'' என்று நிறுத்தினாள் அவள்.

''பழைய மாதிரி மயக்க மருந்தினாலோ, வேறு எந்த வகை யினாலுமோ... அல்லது இயற்கையாகவே நேர்ந்தாலுமோ - எந்த வழியில் இந்தக் குழந்தை இடையில் அழிய நேர்ந்தாலும் சரி, அதன் பிறகு என் உயிரை ஒவ்வொரு கணமும் நீங்கள் கட்டிக் காக்கும்படி ஆகிவிடும். கவனத்தில் வைத்துக் கொள் ளுங்கள்,'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

அவன் வெறித்துப் பார்த்தான்.

''புரியவில்லை? பிளக்கில் கை வைக்கிறேனோ, மொட்டை மாடியிலிருந்து குதிக்கிறேனோ, கயிற்றில் தொங்குகி றேனோ...''

ஓர் எட்டில் அவளை அணுகி, இறுக அணைத்து, ''பாவி... என்னவெல்லாம் பேசிவிட்டாய்! பாவி... பாவி... பாவி!'' என்று தவித்துப் போனான் அவன்.

அவனை வெறித்துப் பார்த்தாள் அவள்.

முன்பொரு நாள், ''என்னவெல்லாம் செய்து விட்டாய், பாவி!'' என்று தான் தவித்தது நினைவு வந்தது.

அதே அளவு வேதனையை இன்று அவனும் அனுபவிக்கி றானா?

அதே அளவு துன்பம் இம்மி குறையாமல் இப்போது அவ னையும் துடிக்க வைக்கிறதோ?

பழிக்குப் பழி வாங்குவது என்பது எவ்வளவு இனிமையான உணர்வு என்பதை அவள் ஆனந்தமாக அனுபவிக்கத் தொடங் கினாள்.



## 13

**வீ**டு திரும்பிய பின் சித்தார்த்தன் சக்தியி டம் எவ்வளவோ வாதாடிப் பார்த்தான்.

தொழில் ரீதியில் எத்தனையோ வெற்றி களைக் கொண்டு வந்து சேர்த்த அவனது வாதத் திறமை சொந்த மனைவியிடம் பய னின்றி அடிபட்டுப் போனது.

''உன் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். சக்தி! இந்த எண்ணத்தை விட்டுவிடு!'' என்றான் அவன்.

அவன் கண்களைக் குரோதத்துடன் பார்த்து, ''நானும் ஒரு நாள் உங்கள் காலில் விழுந்து கேட்டேனே. கெஞ்சினேனே. அன்று அதற்கு மதிப்புக் கொடுத்தீர்களா?'' என்று குத்தினாள் சக்தி.

அவன் முகம் கலங்குவதைக் கண்டு அவளுக்கு வேடிக்கை யாக இருந்தது.

கொஞ்சம் சமாளித்துக் கொண்டு, ''எனக்காக மட்டும் அல்ல சக்தி, அன்று உனக்கும் நன்மை செய்வதாகவே எண்ணி னேன்...'' என்றவன், சக்தியின் இகழ்ச்சியான சிரிப்பைக் கவ னியாதவன் போல மேலே தொடர்ந்தான். ''சிறுபிள்ளைத்தன மாகப் பிடிவாதம் செய்தாய் என்று நினைத்தேன். பலராமை மணந்தால் உனக்கு எந்தவிதமான வசதியும் கிட்டாது; இதே போல் வேலைக்குப் போய் வந்து செலவில் சிக்கனம் பிடித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்க நேரிடும் என நினைத்தேன். இவ்வளவு செல்வத்தையும் உனக்கு உரிமையாக்கி உன்னைச் சுகபோகத்தில் மூழ்கடித்து மகிழ்ச்சியாக வாழவைக்கவே நினைத்தேன். எதையும் சீர் தூக்கிப் பாராமல் நீ மறுத்ததால் சிறு குழந்தைக்கு மருந்து புகட்டுவதுபோல, உன் மகிழ்ச்சிக்காகவும் தான் அன்று அப்படி நடந்து கொண்டேன்!''

அவனை ஏளனமாக ஏறிட்டுப் பார்த்தாள் சக்தி.

''உங்கள் அளவு பணம் இல்லாதவர்கள் எல்லாம் மகிழ்ச் சியே அறியாமல் துக்கத்தில் துடிப்பதாகவா நினைக்கிறீர்கள்? என்ன முட்டாள்தனம்!'' என்று வெகுவாக அதிசயித்தாள்.

அவளது கேலி, குத்தல் எதையும் கவனியாதவன் போல அவன் பேசினான். ''நீ பலராமைக் காதலித்திருந்தால்கூட இந் தப் பிடிவாதத்திற்கு அர்த்தம் இருக்கலாம். ஆனால்... அது இல் லையே...''

''காதலிக்கிறேன் என்று நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டா திரிவார்கள்!'' என்று துடுக்காகக் குறுக்கிட்டாள் சக்தி.

''இல்லைதான். ஆனால், உனக்கு உணர்ச்சிகளை வெளிப்ப டுத்துகிற முகம். கொஞ்சமாவது அறிந்து கொள்ள முடியாமலா போகும். இப்போதுதான் சொல்லேன். நீ பலராமைக் காதலித் தாயா என்ன? என்னை வேதனையுறச் செய்ய வேண்டும் என்

பதற்காக இல்லாமல், உண்மையைச் சொல்லு. நீ அவனைக் காதலித்தாயா?'' என்று வினவினான் அவன்.

பொய் சொல்ல முடியாமல், 'இல்லைதான்' என்று தயக்கத்துடன் ஒப்புக் கொண்டாள் சக்தி. ''ஆனால் ஒன்று, அத்தானை மணந்திருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருப்பேன் என்பது மட்டும் நிச்சயம்!'' என்று விடாமல் சொல்லி அவன் முகம் கன்றிக் கறுப்பதைத் திருப்தியுடன் கண்டாள்.

''உங்கள் உடைமைக்கு ஆபத்து எனும்போதே இப்படிப் பதட்டம் வருகிறதே, அன்று என் உடைமையை அழித்தபோது எனக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்று குத்தினாள்.

மான அவமானம் பாராமல், அவன் மீண்டும் மீண்டும் அவளிடம் மன்றாடினான்.

சக்தியின் ஒரே பதில், ''அன்று என்னுடைய கதறலுக்குச் செவி சாய்த்தீர்களா?'' என்றதுதான்.

''அதுதான் சொன்னேனே! வேறு வழி காணாமல் செய்த தவறு என்று. அதை மன்னித்துவிடு!'' என்று கெஞ்சினான் அவன்.

''உங்களுக்கு அடிப்படையே தகராறு போலிருக்கிறது!'' என்றாள் சக்தி, அலட்சியமாகத் தலையை நிமிர்த்தி. ''நியாயம், அநியாயம் தெரியாமல் செய்துவிடும் பிழைக்குத்தான் தவறு என்று பெயர். அறியாமல் செய்யும்போது அதற்குத் தண்டனை தருவதுகூடத் தப்புதான். ஆனால், குற்றம் என்று தெரிந்தே செய்துவிட்டு மன்னிப்பு என்ற தளுக்கான வார்த்தையில் மறைந்து கொள்ள நினைத்தால் அது முடியாத காரியம்,'' என்று பழைய சக்தியாக நின்று பேசினாள்.

''அறத்திற்கு மட்டும்தான் அன்பு சார்பு என்பது இல்லை, சக்தி. மறத்திற்கும் அதுவேதான் துணை என்று படித்தது இல்

லையா? நான் செய்தது தவறு... குற்றம்தான். ஆனாலும் பிறகு என் அன்பில் அது மறைந்து விடும் என்று நினைத்தேன். அதிக மான அன்பினால் நடந்த மறம் என்று மன்னித்துவிடு சக்தி.''

இன்னமும் அவன் தன் பிழையை உணரவில்லை, உணர்ந்து வருந்தவில்லை என்று சக்திக்குத் தோன்றியது. இப்போதைக்கு அவனுடைய மனைவியின் உயிருக்கு வந்திருக்கும் ஆபத்து நீங்க வேண்டும் என்பதுதான் அவன் எண்ணம். இதற்காக மன் னிப்புக் கேட்பது மட்டும் அல்ல, சொன்னால் காலைக் கூடப் பிடிப்பான்.

தலையைத் திருப்பிக் கொண்டு, ''கொலை செய்துவிட்டுச் சட லத்திடம் மன்னிப்புக் கேட்பதால் என்ன பயன்?'' என்றாள்.

''கொலைகாரனுக்கும் மன்னிப்பு உண்டு, சக்தி.''

ஜன்னல் வழியே வானை வெறித்துப் பார்த்து, ''நீங்கள் என் உயிரை அழித்திருந்தால் ஏதோ காரணம் என்று சமாதானப்பட் டிருப்பேன். ஆனால், நீங்கள் அழித்தது உயிரினும் மேலான ஒன்று, உயிரைக் கொடுத்தேனும் காக்க வேண்டிய ஒன்று என்று நான் கட்டிக்காத்து வந்த ஒன்றை. அதை அவமதித்துக் கொன்றுவிட்டு மன்னித்துவிடு, மறந்துவிடு என்றால் நான் என்ன மிருகமா, எண்ணமற்றுப் போக!'' என்றாள் வெறுப்பாக.

''இவ்வளவு பேசுகிறவள் இத்தனை நாள் சாவுக்காக முயற்சி செய்யாததுகூட ஆச்சரியம்தான்!'' என்று குத்துப்பட்ட வலி தாளாமல் திரும்பினான் அவன்.

''சாவில் பயம் கொண்டு உயிரோடு இருந்தேன் என்று நினைத்தீர்களா?'' என்றாள் சக்தி ஏளனமாக. ''சின்ன வயதில் இருந்து என் அம்மா மகிழ்ச்சியோடு வாழ்ந்தது என் அப்பா வோடு வாழ்ந்த அந்த இரண்டே ஆண்டுகள்தான். அவர்கள் மனதை மேலும் நோகடிக்க வேண்டாம் என்றுதான்...''

அவன் துரும்பையும் பற்றுகிறவன் ஆகி, அவள் அருகில் வந்து, ''அதே காரணம் இன்னமும் இருக்கிறது சக்தி. உன் தாயாருக்காகத் தற்கொலை செய்வதுஇல்லை என்றாயே...'' என்றான் அவசரமாக.

அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

''நானாகத் தற்கொலை செய்வதில்லை என்றேனே தவிர, தானாக வரும் விடுதலையைக்கூடத் தவிர்ப்பதற்கு நான் என்ன முட்டாளா?''

மிருகமா?

முட்டாளா?

அவனை மட்டம் தட்டும் வேகத்தில் வேண்டும் என்றேதான் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசினாள் சக்தி.

ஆனால், அவன் பொருட்படுத்தாமல், ''அவர்கள் கதி என்ன ஆகும் என்று யோசித்துப் பார் சக்தி, அவர்களது வாழ்வின் பற்றுக்கோடே நீதானே!'' என்றான்.

''இந்த ஆறு மாதங்கள் என்னைப் பிரிந்து வாழவில்லையா? பிறகும் இருப்பார்கள். அதோடு எப்படியும் கடைசியில் குழந்தையைக் காப்பாற்றிவிட முடியுமே. நான் மட்டும்தானே...''

''மேலே சொல்லாதே, சக்தி,'' என்று அவள் வாயைப் பொத்தினான்.

அவளை இறுக அணைத்து, ''அய்யோ வேண்டாம், வேண்டாம், வேண்டாம். சொல்லாதே!'' என்று துடித்தான்.

''விடுங்கள்,'' என்று விலக முயன்றாள் சக்தி.

''விடமாட்டேன், உன்னைப் போகவிடமாட்டேன். டாக்டரிடமும், உன் அம்மாவிடமும் எல்லோரிடமும் சொல்லுவேன்.

வீட்டோடு நர்சை வைப்பேன். கணம் தவறாமல் உன்னைக் கண் காணிப்பேன். வலி எடுத்த வினாடியே கண்டுபிடித்து..."

அவனை உதறிவிட்டு, "அப்படி ஏதும் செய்தீர்களானால், உடனே பிளக்கில் கையை வைத்து விடுவேன்!" என்று மிரட்டினாள் சக்தி. "இது உங்களுக்கும் எனக்கும் இடையே நடக்கும் போர். இதில் ஒருமுறை நீங்கள் வெற்றி பெற்றீர்கள். ஆனால் இப்போது வெற்றிபெறப் போவது நான்!" என்றாள் கர்வத்துடன்.

தோற்று ஓய்ந்தவன் போல சன்னலில் சாய்ந்தான், சித்தார்த்தன்.

"மனைவி என்ற பதவி கிடைக்கும்போது அவள் கையிலும் ஓர் ஆயுதத்தைக் கொடுத்த மாதிரி!" என்று ஒருதரம் தாயார் சொன்னது சக்திக்கு நினைவு வந்தது.

"வலுவான ஆயுதம்தான், இப்படி அயர்ந்துவிட்டானே!" என்று நினைத்தாள்.

மெல்ல விழிகளை உயர்த்தி, "பெரிய ஆயுதம் கிட்டிவிட்ட தைரியத்தில் மேலே மேலே மாறிப் பேசுகிறாயா சக்தி?" என்று கசப்புடன் கேட்டான் அவன்.

"சகவாச தோஷம்!" பளிச்சென்று பதில் வந்தது அவளிடம் இருந்து.

"நான் எப்போது..." என்று ரோஷமாகத் தொடங்கியவன், குரலைத் தணித்து, "அது வேறு சக்தி, ஒரு குழந்தை பிறந்துவிட்டால் நீ மாறி விடுவாய் என்று நினைத்தேன். ஆனால் இப்படி ஆகும் என்று எண்ணவில்லையே!" என்று வருந்தி முகம் வாடினான்.

"ஓ...கோ! அதுதானா விஷயம்! பெரிய திட்டம்தான்!" என்றாள் அவள் பரிகாசமாக.

''குழந்தை ரமாவிடம் நீ நெகிழ்ந்ததைக் கண்டேன். நம் இரு வரையும் இணைக்கும் பாலமாகக் குழந்தை உருவாகிவிட்டால் உன் வெறுப்பெல்லாம் மாறிவிடும் என்று நினைத்தேன். ஆனால்...'' என்று வேதனைப்பட்டான்.

''ஆகக் குழந்தைக்காக மட்டும்தான், உங்களுக்கென்று ஒன் றுமே இல்லை. பாவம்!'' என்று போலியாக அனுதாபப்பட்டாள் அவள்.

சட்டென முகம் கன்றிவிட, 'நானும் மனிதன்தானே சக்தி!' என்றான் அவன் மெல்லிய குரலில்.

''பரவாயில்லை. உண்மைகூட வாயில் வருகிறது.''

வார்த்தைகள் சாட்டையாய்ச் சுழன்று அடித்தன.

வேறு எதுவும் சொல்லத் தோன்றாமல், ''சக்தி! புரியாமல் பேசுகிறாயேம்மா. நீ விளையாடுவது உன் வாழ்வோடு!'' என்று தொடங்கினான்.

சக்தி குறுக்கிட்டு, ''மற்றவர்களே அதை வைத்து விளையா டுவது எனக்கு அலுத்துவிட்டது. அதனால் இனி நானே விளை யாடப் போகிறேன்!' என்றாள் கர்வப் புன்னகையோடு.

உதடுகள் இறுக ஒருதரம் கண்களை மூடித் திறந்தான் சித் தார்த்தன். ''கடைசியாக உன் முடிவுதான் என்ன?'' என்று கெஞ் சல், தவிப்பு எல்லாவற்றையும் விடுத்துக் கேட்டான்.

''பல மாதங்களுக்குப் பிறகு எனக்கு மீண்டும் கடவுள் நம் பிக்கை வந்திருக்கிறது, ஏதோ ஒரு வழியில் என் துன்பங்களை முடிக்கிறாரே!'' என்றாள் அவள் விட்டேற்றியாக.

''அப்படியானால் சாவிலேயே உறுதியாக இருக்கிறாய்,'' என்றான் பார்வையை அவள் முகத்திலேயே பதித்து.

''ஆமாம்!'' என்று அழுத்தம் திருத்தமாக வந்தது பதில்.

அவன் தன் ஆறடி உயரத்துக்குமாக நிமிர்ந்தான். ''ஆனால் ஒன்றை அறிந்து கொள். நான் அவ்வளவு எளிதாக உன்னைச் சாக விட்டுவிடமாட்டேன்!'' என்றான் ஒரு தீரத்துடன்.

அவள் இகழ்ச்சியும் அலட்சியமுமாகத் தோளைக் குலுக்கி விட்டுத் திரும்பினாள்.

அவளை நிறுத்தி, ''சக்தி! இது உனக்கும் எனக்குமான போர் என்றாய். டாக்டரிடம்... உன் தாயாரிடம்... வேறு யாரிடமும் சொல்லக்கூடாது என்று நிபந்தனை விதித்தாய். சரி, ஒப்புக்கொள் கிறேன். வலி வரும் பொழுது நீயாகச் சொல்லமாட்டேன் என் றாய்! அதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நானாகவே அதைக் கண்டு கொண்டு உன்னை உன்னிடமிருந்து கூடக் காப் பாற்றுவேன் பார்!'' என்று சவால் விட்டான் அவன்.

''வேளை கடக்குமுன் முடியாது!''

''முடிந்து விட்டால்?''

''நல்வாழ்த்துக்கள்!'' என்று கேலியாக உதட்டைப் பிதுக்கி னாள் சக்தி.

ஆனால் அப்போது பிள்ளை வலி என்றால் அது எப்பேர்ப் பட்ட பெருவலி என்று அவளும் அறிந்திருக்கவில்லை.

மனிதன் போடும் திட்டங்களுக்கெல்லாம் மேலாக உயரத் தில் இருந்து கொண்டு ஒருவன் போடுகிற திட்டம் மட்டும்தான் நடைபெறும் என்பதை அவனும் அறிந்திருக்கவில்லை.



14

சக்திபோட்ட நிபந்தனைகளை மீறாதபடியே அவளைக் காக்கச் சித்தார்த்தன் பல ஏற்பாடுகளைச் செய்தான்.

முதலாவதாக மாமியாரைத் தங்களோடு தங்குமாறு அழைத்து வந்தான்.

சந்தேகத்துடன் பார்த்த மனைவியிடம் தனிமையில், "உன் நிபந்தனையை மீறி, அவர்களிடம் உண்மையைச் சொல்ல நானும் முட்டாள் இல்லை, சக்தி. ஆனால் ஒரே மகளுடைய பேறுகால சமயத்தில் வாய்க்கு ருசியாகப் பொங்கிப் போட வென்று தாயார் உடன் இருப்பது வழக்கம்தானே. அதில் அவர்களுக்கு ஓர் ஆனந்தம் இருக்குமே. உன் பிடிவாதம் வென்றால் அது ஒன்றேனும் அவர்களுக்கு மிஞ்சட்டுமே!' என்று கூறிய போது அவளால் மறுத்துப் பேச முடியவில்லை.

இரண்டாவதாக, டாக்டரிடம் சென்று வலி, வேதனை என்று பிரசவம் பற்றி அனைத்தையும் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொண்டான். குறைப் பிரசவம்கூட இதேபோல அவளைப் பாதிக்கக்கூடும் என்றபோது கலங்கிப் போனான். ஆனால் அவன் கலங்கிப் பயன் என்ன?

மூன்றாவதாகத் தன் வெளி வேலைகளை - அலுவலகங்கள், தொழிற்சாலை, மில், மீட்டிங் என்று அந்த வேலைகளை வெகுவாகக் குறைத்துக் கொண்டான். அவன் பார்த்தாக வேண்டிய பைல்கள் எல்லாம் வீட்டுக்கே வந்தன. முக்கிய விஷயங்களைப் பேச மானேஜர்கள் வீட்டுக்கே வர நேர்ந்தது. பெரும்பாலும் டெலிபோனிலேயே வேலைகளை முடித்தான். எந்த வேலையிலும் அதிக நேரம் தொடர்ந்து ஈடுபடாமலே இடையிடையே அவளை நாடி வந்து கண்காணித்தான்.

கடைசியாக, மீண்டும் இரவை மனைவியின் அருகில் கழித்தான்.

திகைப்பும், வெறுப்புமாக விலகியவளிடம், "இது என்னுடைய பாதுகாப்பு நடவடிக்கை மட்டும்தான். இந்த நிலையிலும் உன்னிடம் வேறு உறவு நாட நானும் மிருகம் அல்ல. பேசாமல் படு," என்றான்.

பிழை செய்து கட்டாய மணம் செய்த கணவனை வாட்டி வதைப்பதில் சக்தி முதலில் பெரும் திருப்தி கண்டாள்.

ஆனால் இந்தத் திருப்தி நிலைக்கவில்லை.

இயல்பாகக் குரூர குணம் இருந்திருந்தால் அது மற்றவர் வேதனையில் மகிழும் வலிமையைத் தந்திருக்குமோ என்னவோ?

இயல்பில் எல்லோரிடமும் பிரியம் காட்டும் சக்திக்கு அவனுடைய வருத்தத்தில் அதிக நாள் மகிழ முடியவில்லை.

ஆழ்ந்த தூக்கம் என்பதை அறவே விடுத்து ஒவ்வோர் அசைவுக்கும் அவன் தலை தூக்கிக் கவனமாக ஆராய்வதைக் காணும் போதெல்லாம் அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று.

குளியலறை, கழிவறை போகும் போதுகூட அவன் வெளியே காவல் காப்பதைக் கண்டபோது கொஞ்சம் பரிதாபம் கூட உண்டாயிற்று.

இதுவே இப்படியானால், தோட்டத்தில் உலவப் போவது போன்றவைகளைக் கேட்கவே வேண்டாம்.

ஒரு நாள் இரவில் திடுமென விழித்தாள் சக்தி.

விழித்ததுமே அவன் இல்லாததை உணர்ந்தாள்.

மொட்டை மாடியில் பின்னே கைகட்டிக் கொண்டு அவன் குறுக்கும் நெடுக்குமாக நடப்பது தெரிந்தது.

அரவமின்றி எழுந்து சென்று பார்த்தாள்.

அவ்வப்போது நின்று அவன் நிலவை வெறித்தான்.

நீர் திரையிட்டாற் போல விழிகள் பளபளத்தன.

கல்லுக்குள் ஈரமா?

மனது இளகிவிட, "தூங்கவில்லை?" என்று மெல்ல வின வினாள் சக்தி.

திகைப்புற்றுத் திரும்பிய அவன் அவளைக் கண்டதும் வேக மாக வந்து அவள் கைகளைப் பற்றி, "சக்தி! உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள். தருகிறேன். இந்தச் சாவு ஜெபத்தை மட்டும் விட்டுவிடு சக்தி. உனக்கு என் சொத்து முழுமையுமே எழுதித் தந்து விடுகிறேன் ப்ளீஸ். சக்தி!" என்று கெஞ்சினான்.

சட்டென அவன் கைகளை உதறினாள் சக்தி. "இந்தப் பணக் காரத் திமிர் மட்டும் ஒருநாளும் போகாது இல்லையா? பணத் தைக் காட்டி எதையும் சாதித்து விடலாம் என்கிற திமிர். இப் போது சாவிடம் பேரம் செய்து பார்ப்பதுதானே?" என்று பரிக சித்தாள்.

"அய்யோ, பாவம் என்று பேச வந்தது என் முட்டாள்தனம்!" என்று திரும்பி நடந்தாள்.

பின்னோடு தொடர்ந்து, "அப்படி இல்லை, சக்தி. பணம் என்றில்லை. என் கை, கால் எந்த உறுப்பை வேண்டுமானாலும் தருகிறேன். எனக்கு அது தண்டனையாகிப் போகட்டும்!" என்று மீண்டும் கெஞ்சும் குரலிலேயே பேசினான் அவன்.

"கை! கால்! கேட்க மாட்டேன் என்கிற தைரியம்தானே. ஒரு வேளை கேட்டு விட்டால் எப்படித் தருவீர்களாம். முடியவில் லையே என்று சுலபமாக இரண்டு சொட்டுக் கண்ணீர் விட்டு விடலாம்," என்றாள் கேலியாக.

"ஏன் சக்தி முடியாது? துருப் பிடித்த ஆணியால் குத்திக் கொண்டு 'செப்டிக்' ஆக விட்டு விட்டால் அந்தப் பகுதியை

டாக்டர் அப்புறப்படுத்தித்தானே தீர வேண்டும்!'' என்று அவன் அனாயாசமாகச் சொன்னபோது அவளுக்குத் திக்கென்றது.

வலுவும் வனப்புமான அவனது கரங்கள்!

உறுதியான நீண்ட கால்கள்!

''சீச்சீ!'' என்றாள் உரக்க.

''உயிரைக் காக்க உறுப்பைக் கொடுப்பது பெரிது அல்ல சக்தி. இவற்றை இழந்தால்கூட என்னால் வாழ முடியும். ஆனால் உன்னை இழப்பதை நினைத்துப் பார்க்கக்கூட எனக்குத் துணி வில்லை சக்தி. உன்னை இழந்து என்னால் வாழவே முடியாது சக்தி. நான் செய்தது தப்புத்தான். அதற்காக எனக்கு எந்தத் தண் டனை வேண்டுமானாலும் கொடு. நான் அதை ஏற்றுக் கொள்கி றேன். ஆனால், நீ உனக்கு அல்லவா தண்டனை தருகிறாய்? எண்ணிப் பார், சக்தி!'' என்று மன்றாடினான்.

''இல்லை, இது எனக்கு விடுதலை!'' என்றாள் சக்தி அமை தியாக.

ஆனால் முகத்தில் ஓங்கி அறை விழுந்தாற்போல அவன் தள்ளாடவும் அவளுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

தானே வருந்துகிறவனை இன்னமும் புண்படுத்தினோமோ, என்று வருந்தினாள்.

சீறும் பாம்பை அடிக்கலாம். ஆனால் செத்த பாம்பை அடிப் பது பேடித்தனமாகப் பட்டது.

★ ★ ★

**வ**ழக்கம் போல ஓரிரு முறை சித்தார்த்தனுடைய பெரிய தாயாரின் வீட்டுக்குப் போய் வந்தனர்.

அங்கிருந்தும் வந்தார்கள்.

அச்சமயங்களில், ரமாக்குட்டியை வெறித்துப் பார்த்து விட்டு, அவன் பார்வையைத் திருப்பிக் கொள்வதைச் சக்தி கவனித்தாள்.

ஒருதரம் காலைக் கட்டிய குழந்தையை விலக்கிவிட்டான்.

''குழந்தை மேல் தப்பென்ன?'' என்றாள் மெல்லிய குரலில்.

''ச்சு'' என்று வேதனையான கசப்புடன் தோளைக் குலுக்கினான் அவன்.

அப்படியே அதை விடாமல் தனிமையில், ''குழந்தை தெய்வத்துக்குச் சமம். அதை வெறுக்காதீர்கள்,'' என்றாள் சக்தி.

''குழந்தையை அனாதையாக்கிவிட்டு ஓடத் துடிப்பவள் வாயில் இருந்து உதிரும் முத்துக்களா?'' என்று அதிசயம் காட்டினான் அவன்.

அவனது கேலிக் குரலில் வருத்தம் மறைந்திருப்பதை உணர்ந்த சக்தியால் சினம் கொள்ள முடியவில்லை.

''குழந்தையை அன்புடன் ஆதரிக்க நீங்கள் இருப்பீர்கள்!'' என்றாள் மெல்லிய குரலில்.

''அன்புடனா? ஆதரிப்பதா?'' வெறுப்பான பார்வை ஒன்று அவளது வயிற்றை நாடிச்சென்று உயர்ந்தது. ''என் உலகத்தையே தாக்க முயலும் ஒன்றிடம் அன்பு எப்படி வரும், சக்தி?'' என்றான் கசப்புடன்.

சற்று திகைத்தாள் சக்தி. ''உங்கள் உலகம் என்னோடு முடிந்துவிடாது. வேறு ஒருத்தியை மணந்து...''

பிறகு அவள் காற்றிடம்தான் பேசிக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

தம்பி, தங்கை என்று யாரும் இல்லாமல் வளர்ந்ததாலேயே சக்திக்குச் சிறு குழந்தைகளிடம் மிகுந்த பிரியம் உண்டு.

ஆயினும் அன்றிருந்த ஆத்திரத்தில் தசைப் பிண்டமாக வயிற்றில் உருவாகி இருந்த குழந்தையை அழித்துவிட அவள் எண்ணியது உண்மையே.

இன்னும் முழுமை பெற்று எந்தவிதக் கவலையும் இல்லாமல் தாயின் வயிற்றில் பாதுகாப்புடன் 'குளுக் குளுக்' என்று அசையத் தொடங்கியிருந்த போதும், அதனிடம் அப்படி ஒன்றும் அன்பு பெருகி விடவில்லைதான், ஆயினும் அழிப்பது தவறாகத் தோன்றியது. அவ்வளவுதான்.

ஏதோ ஒரு குழந்தை... அது அவனில் இருந்து உருவானது என்பதால் மட்டுமல்ல - எப்படியானாலும் ஒரு குழந்தை தாயை இழந்து தந்தையின் வெறுப்புக்கு ஆளாகி வாழ்வது என்றால், அது அவளுக்கு வேதனையைத் தந்தது.

பொறுப்புணர்ச்சியுடன் வளர்ந்த விதம் இன்று எப்படியோ போகட்டும் என்று பொறுப்பைத் தட்டிக் கழித்து ஓடவிடவில்லை.

மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தபோது, சுகுணாவின் ஞாபகம் வந்தது.

ஆயிரம் திட்டங்களை மனதில் போட்டு முடித்தாள்.

எண்ணிவிட்டால் தயங்குவது அவளது வழக்கம் இல்லையே.

அங்கே இங்கே செல்ல வேண்டும் என்று அவனிடம் கார் கேட்டாள் சக்தி.

அவளை ஒருதரம் கூர்ந்து நோக்கிவிட்டு, "நானும் வருகிறேன்," என்றான் சித்தார்த்தன்.

''அய்யோ! கூடாது...''

சட்டென முகம் வெளுக்க, ''வலியில்லையே, சக்தி!'' என்று பதறி எழுந்தான்.

கொஞ்சம் பாவமாயும், கொஞ்சம் சிரிப்பாயும் இருந்தது அவளுக்கு, ''அதெல்லாம் ஒன்றும் இல்லை,'' என்று சமாதானம் சொன்னாள்.

மீண்டும் ஒரு தரம் அவளை ஆழப் பார்வையால் அளந்து விட்டு டிரைவரை அழைத்து அவளை அனுப்பிவைத்தான் அவன்.

சுகுணாவிடம், ''நான் இறந்தால், நீ குழந்தையைப் பார்த்துக் கொள்வாயா?'' என்று பேச்செடுத்தாள் சக்தி.

''இதென்னடி உளறல்!'' என்று ஆச்சரியப்பட்டாள் அவள்.

''உளறல் இல்லை. சுகுணா. கொஞ்சம் வெளிப்படையாகத் தான் பேசுவோமே. நீ முன்பு காதலித்தது அவரைத்தானே?'' என்று நேரடியாகக் கேட்டாள் சக்தி.

''அவர் அப்போது உன் கணவர் அல்ல!'' என்றாள், அவள் எங்கோ பார்த்தபடி. உடனேயே திரும்பி, ''அதில் அவரது பிசகு ஏதுமில்லை சக்தி. நீ எதையாவது கற்பனை செய்து கொண்டு அவருடைய மனதை நோகடிக்காதே, அவர் மனதில் அன்றும் இன்றும் நீதான்!'' என்றாள்.

''நானே இல்லாமல் போய்விட்டால்?''

சுகுணாவின் விழிகள் அகன்றன. ''இதென்ன உலக மகா உளறல் சிகரத்தனம்? புது வியாதியா?''

''சீ... அதெல்லாம் இல்லையடி, உண்மையாகத்தான் சொல் கிறேன். என் உடம்பில் ஏதோ எலும்பு சரியில்லையாம். அதனால் பிரசவத்தில் நான் செத்துப் போவேனாம்.''

''கத்தரிக்காய் வெட்டுகிற மாதிரி என்ன சாதாரணமாகச் சொல்லுகிறாய்! சித்தார்த்தனுக்குத் தெரியுமா? அவர் பெரிய டாக்டரைப் பார்த்து...''

''ஷ்... சுகுணா, நான் சொல்வதை முதலில் கேட்டு முடியேன்,'' என்று அழுத்தத்துடன் தொடங்கினாள் சக்தி.

''முதலில் இதெல்லாம் அவருக்குத் தெரியும்...''

''தெரியுமா? அய்யோ சக்தி, உன் இழப்பை அவர் தாங்க மாட்டாரே. பாவமாய் இருக்கிறதே!'' என்று பரிதவித்தாள் சுகுணா.

''எல்லாம் தாங்குவார்!'' என்று சக்தி அலட்சியமாகச் சொல்லவும் திகைத்தாள்.

''என்னடி நீ...''

''எல்லாம் சொல்கிறேன். நீ குறுக்கிடாமல் கேள். ஆனால், முதலில்...'' என்று தொடங்கி யாரிடமும் சொல்லக்கூடாது என்று அவளிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு, விஷயங்களை ஓரளவு சொன்னாள்.

''முதலில் மறைக்க முடிந்தாலும், கடைசி சமயத்தில் எப்படியும் கண்டு கொள்ளுவார். ஆபரேஷனில் பிள்ளை சேதமின்றிப் பிறந்துவிடும். பின்னால், அது தாயன்பு தெரியாமல் நிற்கக் கூடாது இல்லையா? அதோடு என் மனமும் எனக்குத் தெரியும்.''

''இப்படிப் பேசாதே சக்தி, பிறகு நானே உன் மரணத்தை வேண்டுகிறவள் ஆகி விடுவேனோ என்று பயமாகக்கூட இருக்கிறது!'' என்று பயந்த குரலில் கூறினாள் சுகுணா.

''வேண்டினால் எனக்கு நன்மையே செய்தவள் ஆவாய்!'' என்றாள் சக்தி நிதானமாக.

''ஏன், சித்தார்த்தன்...?''

''எனக்குப் பிடிக்கவில்லை!'' என்று தோளைக் குலுக்கினாள் சக்தி.

''அவரைப் பிடிக்காமல்கூட ஒரு பெண்ணா? பைத்தியம் பார். நானே அவரிடம் எல்லாம் சொல்லுகிறேன். வேண்டும் என்றா வலியை மறக்கப் போகிறாய், பாவி! அவர்மனம் என்ன வேதனைப்பட்டிருக்கும்? அவரை இப்படித் துன்புறுத்தாதே சக்தி, உன் காலில் விழுகிறேன்.''

''அப்புறமாக என் படத்திற்கு மாலை போட்டு அதன் முன் னால் விழு...'' என்று சிரித்தாள் சக்தி.

''ராட்சசி! எப்படித்தான் இப்படியெல்லாம் இரக்கமற்றுப் பேசுகிறாயோ?'' என்று வேதனைப்பட்டாள் சுகுணா.

''அதெல்லாம் விடுடி. இப்போது சொல். அவரை மணந்து குழந்தையைப் பார்த்துக் கொள்வாயா? என் அம்மாவையும் கூட, ம்...?''

''நினைத்துப் பார்க்கக்கூட நடுக்கமாக இருக்கிறது சக்தி. அந்த மாதிரி ஆசையெல்லாம் வந்துவிடுமோ என்று... உன் முடிவை விழைபவள் ஆகிவிடுவேனோ என்று... வேண்டாம். இந்தப் பேச்சை இத்தோடு விட்டுவிடு சக்தி!'' என்று முடிக்க முயன்றாள் சுகுணா.

பலவாறு வாதம்செய்து சுகுணாவின் அரைகுறையான இசை வைப் பெற்றாள் சக்தி.

''இது சித்தார்த்தனையும் பொறுத்த விஷயம் சக்தி. அதை மறந்து என்னிடம் மட்டும் பேசுகிறாயே,'' என்றாள் அவள்.

''அவரை நான் பார்த்துக் கொள்கிறேன்,'' என்றாள் சக்தி தன் னம்பிக்கையோடு.

உற்சாகத்துடன் வீடு திரும்பியவள் நேராகக் கணவனிடம் சென்றாள்.

ஏதோ கடிதங்களைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் கையில் இருந்ததை வைத்துவிட்டு எழுந்து வந்தான்.

''வெளியே போய் வந்தது உடம்புக்கு ஒன்றும் அசதியாக இல்லையே!'' என்று விசாரித்தான்.

''இல்லை... வந்து...'' என்று தயங்கினாள் சக்தி.

''என்ன?''

''வந்து... எனக்காக ஒன்று செய்ய வேண்டும். செய் வீர்களா?'' என்று நயமாகத் தொடங்கினாள் அவள்.

வழக்கம் போலப் பார்வையை அவள் முகத்திலேயே பதித்து, ''நீ மட்டும் வலி எடுத்தவுடனேயே சொல்வாயானால் எதுவானாலும் செய்கிறேன்!'' என்று கேலியாகச் சிரித்தான் சித்தார்த்தன்.

உதட்டைக் கடித்துக்கொண்டு திரும்பினாள் சக்தி.

உடனே முகம் வாட, ''என் ஏற்பாடுகளுக்கு எல்லாம் அவ சியம் இராது சக்தி. ஒருவேளை... ஒருவேளை உன் பிடிவாதம்!'' என்றான் தாழ்ந்த குரலில்.

முதலில் திக்கென்ற போதும் சமாளித்துக் கொண்டு, ''இது எல்லோரும் சொல்வதுதான்!'' என்றாள் சக்தி விட்டேற்றியாக.

''நான் எண்ணாததைச் சொல்வதில்லை!'' என்று அமைதியா கவே கூறிவிட்டு மேஜைக்குத் திரும்பிச் சென்றான் அவன்.



15

**சா**வின் சாத்தியக்கூறு தெரிந்தபின் முன் போலப் பூஜை செய்யத் தொடங்கினாள் சக்தி.

பூஜை என்றால் பெரிதாக ஆசார அனுஷ்டானங்களோடு செய்வது இல்லை.

குளித்த பின் சுவாமி படங்களுக்குப் பூப் போட்டு வணங்குவாள். அவ்வளவுதான்.

அதிலும் கேட்டதைக் கொடுக்கும் குமரன் அவன் என்று முன்பே சித்தார்த்தன் சொல்லியிருந்தானே.

பூக்கூடையுடன் அன்று அவள் பூஜையறைக்குள் சென்ற போது அங்கே அவன் நின்றிருந்தான்.

இருகை கூப்பி, கண்மூடி, உதடுகளின் இதய பூர்வமான ஏதோ வேண்டுதலோடு... அவன் நின்றிருந்த கோலம் அவளுள் பரிதாபத்தை எழுப்பியது.

திரும்பிப் போய்விட எண்ணியபோது, அவன் அசைவை உணர்ந்து திரும்பி அவளைப் பார்த்தான்.

அவன் பார்வையில், அவள் கையில் இருந்த பூக்கூடை படவும் வருத்தமாகச் சிரித்து, ''பாவம், கடவுள்!'' என்றான்.

அவன் வேண்டியது, அவளுக்குப் புரிந்தது.

திடுமென ஓர் அவசரத்துடன் அவள் அருகே வந்து, ''இன்று மட்டும் எதுவும் வேண்டிக் கொள்ளாதே சக்தி, ப்ளீஸ்...'' என்று கேட்டுக் கொண்டான்.

கூடைப் பூவைக் குனிந்து பார்த்தபடி சற்று நேரம் பேசாமல் நின்றாள் சக்தி. பிறகு மெதுவாக, ''உங்களோடு இணைந்து சிரித்து மகிழக்கூடிய மனைவியாக ஒரு நாளும் என்னால் வாழ முடியாது. இப்படிப்பட்ட நிலைமையில் இதுவே மேல் அல்லவா?'' என்றாள்.

''நிச்சயமாக இல்லை, சக்தி. கடும் வார்த்தைகளால் குத்திக் கிழித்தாலும் சரிதான். அந்த வார்த்தைகளைச் சொல்லவேனும் நீ இருக்க வேண்டும். சுடு முகமானாலும் நான் பார்க்க உன் முகம் இருக்க வேண்டும், சக்தி! ப்ளீஸ்.''

சக்தி பதில் சொல்லாமல் நின்றாள்.

அவளது கை முஷ்டிகள் இறுகின.

''பாவி! உனக்குத்தான் இரக்கமே கிடையாதே!'' என்றான் கசந்த குரலில்.

பதில் சொல்ல வாயெடுத்தவளை ஒரு கையை உயர்த்தி அடக்கினான்.

''அன்று நீ இரங்கினாயா பாவி என்று கேட்கப் போகிறாய். அப்படித்தானே! அன்று பாவியாக இருந்த எனக்கு இரக்கம் இல்லாமல்தான் இருந்தது. அதேபோல் இன்று பாவியாக இருக்கும் உன்னிடம் இரக்கம் இல்லாததாகவே ஆகிவிட்டது. மெய் சக்தி, நீ செய்வது கூடப் பாவம்தான். போ. அதற்குக் கடவுளையும் துணைக்குச் சேர்த்துக்கொள். போ போ!'' என்று படபடத்தான்.

வழக்கம்போல் படங்களுக்குப் பூவை வைத்துவிட்டுக் கரம் கூப்பிய சக்திக்கு அன்று ஏனோ எதையுமே கடவுளிடம் கேட்கவே முடியவில்லை.

சாவில் உறுதியாக இருந்தாலும், அவளையும் மீறிக் கொண்டு சக்தியின் மனதில் அச்சம் தோன்றியது.

சக்தியுடைய சிறு பிராயத்தில் அவளோடு கூடவே வாழ்ந்திருந்த பாட்டியாருக்குப் பிரியமான தேவாரப் பாடல்களில் 'தலையே நீ வணங்காய்' ஒன்று.

அன்று தன்னையே அறியாமல் முணுமுணுத்தவள் ''உற்றார் யாருளரோ, உயிர்கொண்டு போகும் பொழுது'' என்ற வரியில் அப்படியே மனம் கலங்கிப் போனாள்.

பிடிக்காதவன் என்றாலும் பேணுகிற கணவனே. கூடவே தாயார் - இந்த ஆதரவுகளை எல்லாம்விட்டுவிட்டு உயிர் தன் னந்தனியாக அல்லவா செல்லும்?

அது எங்கே செல்லும்?

இந்த அகன்ற வெளியில் திக்குத் திசை தெரியாமல் தவிக் குமோ?

அவளுக்குத் தலை சுற்றிற்று. நிற்க முடியாமல் தள்ளாடி னாள்.

''சக்தி, என்னம்மா?'' என்று பதறினான் சித்தார்த்தன்.

தலையை அசைத்துவிட்டு, ''கொஞ்சம் பயமாக இருந்தது... சா... சாவைப் பற்றி...?'' என்று கூறிவிட்டு முறுவலிக்க முயன் றாள்.

சட்டென அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டான் அவன் - யாரிடமிருந்தோ அவளைக் காப்பவன்போல...

எதையோ அவளிடம் அணுக விடாமல் தடுப்பவன் போல.

ஆனால் பகை வெளியில் இருந்து வந்தால் அல்லவோ அவளைக் காக்கக்கூடும்.

அவள் உள்ளத்தினுள்ளே எதிரி இருக்கையில் யாரிடம் இருந்து - எதனிடம் இருந்து அவளைக் காப்பது?

''இப்படி ஆகக்கூடும் என்று நான் எண்ணவில்லையே சக்தி!'' என்று அவன் தவித்தபோது தன் அச்சத்தையும் மீறிக் கொண்டு அவன் மீது பரிதாபம் தோன்றியது அவளுக்கு.

அதன் பிறகு இருவரும் ஓர் இறுக்கம் தளர்ந்துவிட்டாற் போலக் கோபதாபம் இன்றிப் பேசிக் கொண்டு இருப்பது வழக்கமாயிற்று.

தங்கள் கதை பற்றிக்கூடப் பேசினர்.

''அம்மா புது தினுசாக ஒரு பர்பி செய்தார்கள்,'' என்று ஒரு நாள் அவனுக்கு டிபன் எடுத்து வைத்து விட்டுத் தானும் ஒரு தட்டுடன் அமர்ந்தாள் சக்தி.

பேச்சினூடே, ''எத்தனை கதைகள். திரைப்படங்கள் வந்து விட்டன. தவறிழைக்கப்பட்ட பெண் புது வாழ்வை வேறு ஒருவனோடு தொடங்குவதாக, நானும்... வேறு ஏன்... பலராமையே மணந்திருந்தால்!'' என்று கேட்டாள் சக்தி.

''உன் மனம் பலராமை ஏற்கெனவே நாடியிருந்தால் ஒரு வேளை - அதாவது நூற்றுக்குப் பத்து சதவீதமான ஒருவேளையாக அது நடந்திருக்கலாம். ஆனால் பலராமிடம் அந்த மாதிரி லயிப்பு உனக்கு இருக்கவில்லையே!'' என்றான் அவன்.

கடைசியாகத் திருச்சிக்குச் சென்றபோது பலராமின் பார்வையில் வெட்கப்பட்டதும், முகம் சிவந்ததும் சக்திக்கு நினைவு வந்தது.

எனவே, ''ஒரேயடியாக அப்படிச் சொல்லி விடவும் முடியாது...'' என்று இழுத்தாள்.

''நன்றாக முடியும். சொல்லு சக்தி, பலராமைப் பாராமல் உன்னால் ஒருநாள் கூட இருக்க முடியாது போல. அந்த வினாடிகளில் பலராமை அணைத்தே தீர வேண்டும் போல... அதற்குத் தடையாக வரக்கூடிய அனைத்தையும் சுட்டுப் பொசுக்கி விட வேண்டும்போல... அப்படியெல்லாம் உனக்குத் தோன்றியது உண்டா? இல்லைதானே...'' என்று கேட்கும்போதே அந்த

மாதிரி உணர்ச்சிகள் தனக்குத் தோன்றின என்று சொல்லாமல் சொன்னான் சித்தார்த்தன்.

சக்திக்குப் புரிந்தது.

இந்த முரட்டுத் தீவிரத்துக்கும் காதலுக்கும் எப்படிப் பொருந்தும்?

''காதல் ஒரு மென்மையான உணர்வு என்று...''

''எந்த முட்டாள் சொன்னது?'' என்று குறுக்கிட்டுக் கேட்டான் சித்தார்த்தன்.

ரோஷம் பிறக்க... ''ஏன், நான்தான் சொல்கிறேன்,'' என்று அறிவிப்பது போலச் சொன்னாள் அவள்.

'அதுதானே பார்த்தேன்,' என்றது சித்தார்த்தனின் குரல் அமைதியாக.

திகைப்புடன் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள் சக்தி.

முகம் சீரியஸ் ஆகவே இருந்தபோதும் கண்கள் மட்டும் சிரிப்பதைக் காணவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எவ்வளவு இலகுவான கேலி!

அடக்க முயன்றும் முடியாமல் லேசாகச் சிரித்துவிட்டு, ''என் கேள்விக்கு நீங்கள் இன்னமும் பதில் சொல்லவில்லை,'' என்றாள் அவள்.

''நீ அப்படிப்பட்டவள் இல்லை என்பதைத்தான் நான் ஏற்கெனவே கண்டு கொண்டுவிட்டேனே சக்தி,'' என்றான் அவன்.

''எப்படிப்பட்டவள்? எப்படிக் கண்டீர்கள்?''

''மற்றவர்களைப்போல உன்னிடம் ஆடை அணிகளில் அதீதம் இல்லை. பேச்சில் கண்ணியம். ஆண்களிடம் ஓர் ஒதுக்கம்,

அதோடு உன் தாயார் தனித்து வாழ்ந்து உன்னை வளர்த்த விதம்...''

சக்தி சிரிப்பில் அவன் பேச்சை நிறுத்தினான். ''பலராமனை மணந்து கொள்ளும்படி அம்மாதான் என்னிடம் சொன்னார் கள்,'' என்று முறுவலித்தாள் சக்தி.

''இருக்கலாம். அது உனக்காகச் செய்த தியாகம். தன் மனதைத் தானே அடக்கிக் கொண்டது. ஆனால் அவர்கள் தானே நம் திருமணத்துக்கு உன்னை வற்புறுத்தியதும்!''

காபியை அவனிடம் கொடுத்துவிட்டு, பழைய நினைவுக ளில் லயித்தாள் சக்தி.

''சரியாகத்தான் கணக்கிட்டிருக்கிறீர்கள்!'' என்றாள் கண்களில் வியப்புடன்.

கப்பைக் கீழே வைத்த அவன் முகம் வாடிற்று. ''தீமையில் இருந்து நன்மை வரமுடியாது என்று காந்தி சொல்லியிருக்கிறார் சக்தி. அவ்வளவு பெரிய மகாத்மாவுக்கு உலக விவகாரம் தெரியவில்லை என்று நினைத்தேன். முடிவு நலம் என்றால் வழி யைப்பற்றி அலட்ட வேண்டியது இல்லை என்று எண்ணினேன். எவ்வளவு பெரிய அடிவிழுந்துவிட்டது பார். என் திட்டங்கள் எல்லாம் இன்று எங்கே போயின?'' என்று வேதனைப்பட்டான்.

அவனைத் தேற்ற வேண்டும்போல இருந்தாலும் வழி தெரியாமல் சக்தி திகைத்தாள்.

''சக்தி! ஒன்று மட்டும் கேட்கட்டுமா? தயவு செய்து என்னை மன்னித்து விடுகிறாயா? மன்னிப்பால் நான் உன்னிடம் வேறு எதையும் கோருகிறேன் என்று எண்ணிவிடாதே, அதெல்லாம் இல்லை. ஆனால் அந்த... அந்தக் குற்றத்தை நீ மன்னித்துவிட் டாய் என்று தெரிந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும்!'' என்றான் கம்மிய குரலில்.

சக்திக்கும் குரல் எழும்பவில்லை.

''என் அம்மாவிடம் கேட்டுப் பாருங்கள். எனக்குத் தப்பைச் சகிக்க முடியாது. மன்னிக்கவும் வராது. ஆனால் நீங்கள் அதற்காக உண்மையாக வருத்தப்படுகிறீர்கள் என்றால் அதுவே போதும்!'' என்று முடித்தாள்.

தாயாரிடம் பழையமாதிரி உள்ளதெல்லாம் சொல்லிக் கலகலக்க முடியாமல் தவித்த சக்திக்குச் சித்தார்த்தனுடைய பெரிய தாயாருக்கும் சீதைக்கும் இடையே தோன்றிய நெருக்கம் ஒரு வரமாகப்பட்டது.

ஆனால் அதன் பயனாக இன்னொரு சின்னச் சிக்கல் உண்டாயிற்று.

மங்கையர்க்கரசியின் சின்னப் பெண் கலாவின் காதலுக்காக அவளுடைய தந்தையிடம் சிபாரிசு பண்ணச் சித்தார்த்தன் தேவைப்பட்டான்.

ஒரு தரம் சீதை திரும்பும்போது கூடவே வந்த கலா, சக்தியிடம் கெஞ்சிப் பேசினாள். ''அவருக்குப் பணம் இல்லையாம் அண்ணி. பணம் இருந்தால் சரியாகிப் போகுமா? ஆனால், அண்ணன் சொன்னால் தட்டமாட்டார் அப்பா. அதுதான் உன்னிடம் வந்தேன்!'' என்று குழைந்தாள்.

''நீயே உன் அண்ணனிடம் சொல்வதுதானே!'' என்று ஜூஸை அவளிடம் நீட்டினாள் சக்தி.

''சொல்லலாம். பிறகு அண்ணனும் அதையே சொன்னால்? நீ சொன்னால்... அதுவும் இப்போது சொன்னால் அண்ணனால் தட்ட முடியாதே!'' என்று சக்தியின் வயிற்றைச் சுட்டிக் காட்டிக் கண் சிமிட்டினாள்.

சக்திக்கும் சிரிப்பு வந்தது.

இரவின் தனிமையில், கணவனிடம் அதைப்பற்றிப் பேசி னாள். "உனக்காகச் செய்கிறேன். ஆனால் நீ வலியைச் சொல் வாயா?" என்று அவன் பேரம் பேசினான்.

பதிலே சொல்லாமல் திரும்பிக் கொண்டாள் சக்தி.

ஒரு வாரம் சென்றதும், "ஆ காட்டு அண்ணி!" என்று சாக் லெட்டைக் கொண்டு வந்து அவள் வாயில் போட்டாள் கலா.

அங்கே அப்போது வந்த அண்ணன் வாயிலும் ஒன்று போட்டாள்.

"அண்ணன்வெறும் சிபாரிசு மட்டும் பண்ணவில்லை, அண்ணி, அவருக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறார். இனி சீக்கிரமே எங்கள் கல்யாணம் டும்டும்!" என்று குதூகலித்தாள்.

அவள் சென்றபின் சற்றுநேரம் சக்திக்கு ஒரே சங்கடமாகிப் போயிற்று.

இன்றுவரை அவனுக்கு நன்றி சொல்ல நேர்ந்தது இல்லை.

இன்று எப்படிச் சொல்வது?

அவள் முகத்தையே பார்த்தவாறு நின்றவன் சட்டென அரு கில் வந்தான். "என்னிடம் நன்றிக் கடன் படுவது அவ்வளவு கஷ்டமா? பரவாயில்லை. தீர்த்துவிடு," என்றவன் அவளை இழுத்து மூச்சுத் திணற முத்தமிட்டான்.

முதல் தடவையாக விலகத் தோன்றாமல் நின்றாள் சக்தி.

இரவு, பகல் நல்ல ஓய்வின்றி இருந்ததாலோ என்னவோ சித் தார்த்தனுக்கு உடம்பு மெலிந்தது.

இதற்காகத் தாயிடம் வேறு திட்டு வாங்கிக் கட்டிக் கொண் டாள் சக்தி.

''ஊர் உலகில் குழந்தை பிறப்பது இல்லையா? மாப்பிள்ளை யைக்கூடக் கவனிக்க முடியாமல் உனக்கு என்ன ஆகிவிட்டது? அவருக்குக் கன்னத்து எலும்பெல்லாம் தெரிகிறது, பார்!'' என்று அறியாத அந்தத் தாயார் அதட்டினாள்.

ஒன்றும் சொல்ல முடியாமல் சிரித்து வைத்தாள் மகள்.

ஆயினும் குழந்தை, கணவனின் வாழ்வைப்பற்றி ஓர் உறுதி செய்து கொள்ள வேண்டும். சுகுணாவை நாடிச் சென்றாள்.

அவள் வீட்டில் யாரோ உறவினர் வந்திருந்ததால் அவ ளோடு தனியே எதையும் பேச முடியவில்லை.

தனிமையான பேச்சுக்கு அவள் இடம் கொடுக்காதது போல வும் தோன்றியது.

சித்தார்த்தனிடம் பேச முயன்றபோதே, ''பொறுப்புகளை அடுத்தவர் மேல் சுமத்திவிட்டால் நிம்மதியாகப் போகலாம் என்று தோன்றுகிறதாக்கும்!'' என்று வரண்ட குரலில் லேசான கேலி இழையோடச் சொன்னான். கூடவே, ''கொஞ்ச நாட்கள் பொறுத்திரு, சக்தி. எல்லாம் தெளிவாகி விடும்,'' என்று ஆறுதலும் கூறினான்.

ஆனால், அது தெரிந்தபோதோ, தெரிந்த விஷயம் சக்திக்கு ஓர் அதிர்ச்சியாகவே அமைந்தது.

''இன்று நம் வீட்டில் ஒரு சின்னத் தேநீர் விருந்து!'' என்று கணவன் கூறியபோது, அவள் அதிகமாக எதுவும் எண்ண வில்லை.

''மணமக்களுக்கு'' என்று பட்டுச் சேலையும் வேட்டியும் அழ கான பாக்கெட்டுகளில் வந்தபோதும் அப்படியே.

அவனிடம் வேலை செய்பவர்களில் யாருடைய திருமணம் என்றாலும், வீட்டில் தேநீர் விருந்துடன் சேலை, வேட்டி, பரிசு கொடுப்பது அவனது வழக்கம் என்பது அவள் அறிந்ததுதான்.

ஆனால், மாதங்கள் முதிர்ந்துவிட்ட இந்த நேரத்திலும் என் பதுதான் அவளுக்கு வியப்பை அளித்தது.

மணமக்களைக் கண்டபோதோ மயங்கி விழாத குறைதான்.

''சிரித்த முகத்தோடு வாழ்த்து!'' என்று அவள் காதோடு மென்குரலில் பணித்துவிட்டு, முன்னே சென்று, ''வாருங்கள் பலராம்! வரவேண்டும் சுகுணா!'' என்று உற்சாகமாய் வரவேற்றான் சித்தார்த்தன்.

சமாளித்துக் கொண்டு, அவனைப் பின்பற்றினாள் சக்தி.

விருந்து முடிந்த பின் டெலிபோன் அழைப்புக்குப் பதில் சொல்லச் சென்றான் சித்தார்த்தன்.

அங்கிருந்த இசைத் தட்டுகளை ஆராய்ந்து கொண்டிருந்தான் பலராம்.

அப்போது கிடைத்த தனிமையில், ''இவரை... பலராமை எப்படித் தெரியும்?'' என்று விசாரித்தாள் சக்தி.

ஒரு விநாடி யோசித்துவிட்டு, சக்தியை நேராகப் பார்த்தாள் சுகுணா. பிறகு, ''இவர் உன்னைக் காதலித்தவர் என்று எனக்குத் தெரியும், சக்தி.'' போட்டு உடைத்தாள்.

பேந்த விழித்த சக்தியிடம், ''இன்னொரு பெண்ணைக் காதலித்த ஒருவனை என்ன தைரியத்தில் மணந்தாய் என்று கேட்கிறாயா? நானும் ஒருவரைக் காதலித்தவள்தானே. தோல்வியின் துயரம் எனக்கு நன்றாகவே தெரியும். அவர் மனம் ஆறுதல் அடைய என்னால் முடிந்தவரை முயற்சி செய்யப் போகிறேன்... ஒரு விசித்திரம் பார்த்தாயா? கணவன் மனைவியைக் காதலித்தவர்களே கணவன் மனைவி ஆகிவிட்டோம்!'' என்று உதட்டால் நகைத்தாள்.

கண் வேறு கதை சொன்னது.

அவர்களது பேச்சைக் கவனித்துவிட்டுப் பலராமும் அருகில் வந்தான்.

"நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டவர்கள் சக்தி. ஒருவர் மீது ஒருவருக்கு அனுதாபமும்கூட. ஆசையை விடவும் அது வாழ்வுக்கு வலுவான அடிப்படை. அதோடு உன் கணவரே முதல் போட்டு ஒரு தொழில் தொடங்கி எங்களைப் "பார்ட்னர்" ஆக்கி இருக்கிறார். பழைய கதைகளை எண்ணி வருந்த நேரம்கூட இல்லை. நாங்கள் மகிழ்ச்சியாக வாழ்வோம் என்றே நினைக்கிறேன். உன் கணவர் எல்லாவற்றையும் சொல்லித்தான் எங்கள் திருமணத்துக்கே ஏற்பாடு செய்தார். வீணாக எங்களை நினைத்து வருந்தாதே சக்தி. அதிலும் இப்போது மகிழ்ச்சியோடு இருப்பது முக்கியம்," என்றான் பலராம்.

"நான் வருந்துவதாக யார்..." என்று தொடங்கிய சக்தி, கப்பென்று அடக்கினாள்.

யார் சொல்லியிருக்கக்கூடும் என்பதை அறியப் பிரமாத ஊகம் தேவையில்லையே.

விருந்தினர் சென்றபின், கோபத்துடன் முறைத்த மனைவியிடம், "உன் பொறுப்புகளை மற்றவரிடம் ஒப்படைத்துவிட்டு பாரமற்ற மனத்தோடு போய் விடலாம் என்று நினைத்தாயா சக்தி, அவ்வளவு எளிதாக உன்னை விட்டு விடுவேனா? உன் அடி மனத்துக்கு அத்தனை தளைகளையும் பூட்டுவேன், தெரியுமா?" என்றான் சித்தார்த்தன்.

எரிச்சலோடு அங்கிருந்து அகன்றாள் சக்தி.

எரிச்சல் விரைவிலேயே கலக்கமாக மாறியது.

பாவம் செய்தவருக்குத் தண்டனை கொடுக்கலாம்.

பரிதாபத்துக்கு ஆளானவர் விடுதலை பெறலாம்.

ஆனால், ஒன்றும் அறியாத குழந்தை?

''குளுக் குளுக்'' என்று ஒருவிதக் கவலையும் இல்லாமல் பாதுகாப்பான தாய் வயிற்றினுள் அசைந்து விளையாடும் இந்தக் குழந்தை?

கபடமற்ற சுகுணா குழந்தையையும், முதிர்ந்த தாயையும் பார்த்துக் கொள்வாள் என்று நினைத்தாளே... அது கனவாகிப் போயிற்றே.

ஒருக்கால் சித்தார்த்தன் வேறு ஒருத்தியை மணந்தால்கூட அவள் இவர்கள் இருவரிடமும் அன்பாக இருப்பாள் என்று என்ன நிச்சயம்?

நினைக்க நினைக்க மனம் கலங்கியது அவளுக்கு.

நிம்மதியாக வாழத்தான் விடவில்லை; நிம்மதியாகச் சாக வுமா விடக்கூடாது?

அவள் கலங்கியிருந்த இந்த வேளையில், ''சக்தி! எனக்குத் தண்டனை என்றாய். உனக்கு விடுதலை என்றாய். ஆனால் தாய் - தந்தையின் அணைப்பில் வளர வேண்டிய குழந்தை, அனா தையாகித் தவிப்பதா? வீண் பிடிவாதத்தை விடுத்து யோசித் துப் பார்,'' என்று வாதாடி, கலங்கிய குட்டையில், மீன் பிடிக்க முயற்சி செய்தான் அவளுடைய கணவன்.

''அனாதை என்று ஆவானேன்? நீங்கள் பார்த்துக் கொள்வ துதானே!'' என்று மிடுக்காகச் சொல்லிச் சென்றாலும், மனதில் இதே கலக்கமாகவே இருந்தது அவளுக்கு.

இதே கலக்கத்தில் தூக்கம் வராமல் திணறினாள் சக்தி.

அவள் அசைந்த போதெல்லாம், எழுந்து பார்த்த அவனுக்கு அவளைவிடவும் சிவராத்திரிதான்.

காலை சிவந்த கண்களுடனும், சிறு சோர்வுடனும் அமர்ந்தி ருந்த அவனிடம், "சற்று நேரம் தூங்குங்களேன்," என்றாள் சக்தி.

பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான் அவன்.

உதட்டைக் கடித்துவிட்டு, "டாக்டர் சொன்ன கெடுவுக்கு இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றன. சிலமணி நேரங் கள் தூங்குவதால் தோற்றுவிடமாட்டீர்கள்," என்றாள் எங்கோ பார்த்தபடி.

எழுந்து சென்று ஒருமணி நேரத்தில் எழுப்பிவிடுமாறு டெலிபோனில் ஏற்பாடு செய்துவிட்டுப் படுத்தவன் உடனேயே தூங்கிப் போனான்.

முதல் தடவையாக அவன் தூங்கும்போது பார்த்துக் கொண்டு நின்றாள் சக்தி.

அகன்ற நெற்றி, அடர்ந்து ஏறிய புருவங்கள், நேரான நாசி, செதுக்கிய உதடுகள். சற்றே எடுப்பாயிருந்த கன்னத்து எலும்பு கள். உறுதியான முகவாய்...

அனாவசியமான சதைச் சரிவுகள் அற்று இறுகிய தசைக் கட் டுகளோடு அமைந்த உயரமான மனிதன்...

முழுமையாக ஓர் ஆண்மகன்.

"எதற்காக இவனை மறுத்தோம்?" என்று முதல் தடவையா கக் குழம்பினாள் சக்தி.

இயல்பாக அழுத்தமான உதடுகள் தூக்கத்தில் லேசாகத் தளர, காப்பற்ற பிள்ளை போலத் தோன்றினான்.

தன்னை நம்பாமல் டெலிபோனில் எழுப்பச் சொன்னதை நினைக்கையில் சிரிப்பு வந்தது அவளுக்கு.

ஓசைப்படாமல் அறைக்குச் சென்று, டெலிபோனை எடுத்து நம்பரைக் கூறி "சற்று முன் டைம் அலாரம் வைத்தோம் அதைக் கான்சல் செய்து விடுங்கள்," என்றாள்.

ஆனால் அவனுக்குத் தூக்கம் கொடுத்து வைக்கவில்லை போலும்.

அரைமணிக்கு முன்னதாகவே டெலிபோன் மணியடித்தது.

அந்த மணிச் சத்தத்தில் வினாடியில் எழுந்தான் அவன்.

எழுந்ததுமே விழிகளால் அவளை நாடி அவள் சும்மா இருப்பதைக் கண்டு அமைதியுற்றவனாகி டெலிபோனை எடுத்தான்.

உடனேயே லேசாகப் புருவங்கள் நெரியச் சற்று நேரம் மிகுந்த கவனத்துடன் கேட்டான்.

டெலிபோனை வைத்துவிட்டு சக்தியிடம் திரும்பினான்.

"நம் பாக்டரியில் தீப்பிடித்திருக்கிறதாம். தீயணைப்பு படை சென்று விட்டதாம். உள்ளே ஓர் இருபது பேர் மட்டும் சிக்கியிருக்கக் கூடும் என்ற பயம் இருக்கிறது... சக்தி! நான் அங்கே போக வேண்டும்," என்றான் மொட்டையாக.

"நானும் வரட்டுமா?" என்று எழுந்தாள் சக்தி. "ஏதாவது உதவி..."

அவன் பார்வையில் பேச்சை நிறுத்தினாள்.

"இந்த நிலையிலா?" என்று அருகில் வந்து அவள் தோளில் கையை வைத்து, "மற்றவருக்குக் கஷ்டம் என்றால் நிலை மறந்து உதவ நினைக்கும் மனம் என்னிடம் மட்டும் இரும்பாக இருப்பது ஏன் சக்தி! நான்தான் பிழை செய்தவன். குற்றவாளி ஆனால் நீ...? தெரிகிறது விடுதலை என்பாய் அப்படித்தானே. ஆனால் யோசி. இது மெய்யாகவே விடுதலைதானா அல்லது

வீண் பிடிவாதத்திற்காக நீ கொடுக்க முயற்சிக்கும் நரபலியா என்று... சக்தி! இன்று எனக்குப் போக மனமில்லை. வெறும் பாக்டரி மட்டும் என்றால் போகாமலே இருந்து விடுவேன். ஆனால் இருபது பேரின் உயிர். அதனால்... நான்...'' என்றவன் அவளை இறுக அணைத்தான்.

தடதடக்கும் அவனது இதயத் துடிப்பை உணர்ந்து கலக்கத்துடன் அவள் விலக முயற்சிக்கும்போது அவனாகவே அவளை இறுக அணைத்தான்.

கீழே சமையல் கட்டில் பூசணிக்காய் வடகம் செய்யச் சொல்லி மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்த மாமியாரை அழைத்து, ''சற்று வெளியே போய்வர வேண்டியிருக்கிறது. சக்தியைக் கவனித்துக் கொள்ளுங்கள்,'' என்றான்.

சரியென்ற போதிலும் மாமியாரின் கண்களில் கேலிச் சிரிப்பைக் கண்டான் சித்தார்த்தன்.

உண்மை அறியாது சிரிப்பவளிடம் எதுவும் சொல்ல முடியாமல், ''அவளுக்கு ஒன்றும்தெரியாது. சற்று அருகிலேயே இருந்து கவனியுங்கள்,'' என்று உணர்ச்சியுற்ற குரலில் சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினான்.

மருமகனின் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பதற்காக என்று மகளை நாடிப் படியேறியபோதுதான் சக்தி இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

''உன் பக்கத்திலேயே இருக்க வேண்டுமாம், மாப்பிள்ளை உத்தரவு!'' என்று வெள்ளையாகச் சிரித்த தாயிடம் தானும் சிரித்து மழுப்பினாள் சக்தி.

''அவருக்கு ஒரே பயம் அம்மா. முதல் தடவை பாருங்கள். ஏதோ பிறகேனும் இது மாறிவிட்டால் நல்லது,'' என்று நடித்தாள்.

''நான் தோட்டத்தில் சற்று நடந்துவிட்டு வருகிறேன் அம்மா. நீங்கள் கொஞ்ச நேரம் ஓய்வாக இருங்கள். உழைத்து உழைத்துக் களைத்தது எல்லாம் போதும்!'' என்று அனுப்பி வைத்தாள்.

எப்படி எல்லாம் முயற்சி செய்கிறான் என்று எண்ணும் போது சக்திக்குச் சிரிப்பு வந்தது. பாவமாகவும் இருந்தது.

அங்கே தீயில் என்ன ஆயிற்றோ என்று உள்ளூர வேதனைப் பட்டபடி மெல்ல நடந்தாள்.

அங்கே அவன் என்ன செய்யக் கூடும்?

சும்மா பார்த்துக் கொண்டு நிற்பவன் அல்ல அவன். அவன் தீக்குள் பாய்வதுபோல ஒரு உரு வெளித்தோற்றம் தோன்றி அவளைக் கலங்க வைத்தது.

மனதை வேறு திசையில் திருப்ப முயன்றாள். அவன் பேச்சை அசை போட்டாள். அவன் சொன்ன மாதிரி இது வீண் பிடிவாதத்தின் பலிதானோ?

சாவைப் பற்றிய அச்சம், குழந்தை பற்றிய கவலை, கணவனைப் பற்றிய பரிதாபம், தாயைப்பற்றிய வேதனை எல்லாம் ''வலிக்கிறது'' என்ற ஒரே ஒரு வார்த்தையில் மறைந்துவிடும். ஆனால்...

மனது குழம்பியபோது இன்னொன்று நினைவு வந்தது. அவன் கூறுவதுபோலப் பிழைத்துவிட்டால் பிறகு என்ன ஆகும்?

எல்லாவற்றையும் மறந்து மற்றவர்போலக் குடும்பம் நடத்துவது அவளால் முடிகிற காரியம் என்று அவள் எண்ணவில்லை.

முழுக்க முழுக்கப் பிரிந்துவாழ்வது அவனுக்கு இயலக்கூடிய காரியம் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

இப்போதுகூடச் சில சமயங்களில் அவன் கண்களில் அந்தத் தீ கொழுந்து விடுவதைச் சக்தி கண்டிருக்கிறாள்.

அவள் கவனிப்பதை உணர்ந்ததும், சிரமப்பட்டு அதை அவன் அடக்குவதையும் பார்த்திருக்கிறாள்.

பிழைத்துவிட்டால், பிறகு இது எத்தனை நாள் நடக்கும்?

கைமீறும்போது பழைய கதைதானே.

''சீச்சீ'' என்று அருவருப்புடன் தோளைக் குலுக்கிய போது அது நிகழ்ந்தது.

காலைத் தூக்கி அடி வைக்க முடியாமல் இடுப்பு தொடை எலும்புகள் அனைத்தையும் கிட்டி போட்டது போல ஏதோ ஒன்று இறுகப் பிடித்தது.



16

சக்தி திகைத்து நின்றாள்.

இதுதானா, இதுவேதானா?

ஒரு கணம் இனமறியாத பயத்தில் சக்தியின் இதயம் வெகு வேகமாகத் துடித்தது.

வலி என்று இல்லை.

ஆனால், அசையக்கூட முடியவில்லை.

மிஞ்சி மிஞ்சிப் பத்தே விநாடிகள்தான் இருந்திருக்கும்.

அப்படி நேர்ந்ததே கனவோ என்பது போல பிறகு உடம்பு அவள் சொன்னபடி கேட்டது.

டாக்டர் சொன்னதை எல்லாம் வேகமாக மனதில் புரட்டினாள். அதுவாகத்தான் இருக்கும் என்று மனதில் நிச்சயமாயிற்று.

இதை அவனும் கண்டு விடக்கூடாது என்றுதான் கடவுள் இந்தத் தீ விபத்தை ஏற்படுத்தினாரோ?

அப்படியானால், அவன் முடிவுதான் சரியானது.

குழந்தை தாயற்றுப் போகுமே என்றால், அது முன் செய்த வினையின் பயன்.

எல்லோருக்குமே இது பொருந்துமே.

எல்லா விடைகளும் சரியாகக் கிடைத்து விட்டாற் போல மனதில் ஒரு அமைதி பரவியது.

அடுத்த வலி வருமுன் அறைக்குச் சென்றுவிடத் திரும்பினாள்.

தாயாரிடமும் சென்று, "இரவில் சரியாகத் தூங்கவில்லை அம்மா. அதனால் தூங்கப் போகிறேன்!" என்று சொல்லி விட்டு மாடிக்குப் போனாள்.

கட்டிலில் அமர்ந்து அடுத்த வலிக்காகக் காத்திருந்தாள்.

அடுத்த தடவை சற்றே வலி தெரிந்தது.

இதை ஏன் தாங்க முடியாது என்று சொல்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டாள் சக்தி.

சுமார் அரை மணிநேர இடைவேளையோடு தொடங்கிய வலிகளின் இடைவேளை மெல்லக் குறுகியது.

நாலு தடவை வலியெடுத்த பின் சித்தார்த்தனிடம் இருந்து டெலிபோன் வந்தது.

"சக்தி, நீ...உனக்கு ஒன்றும் இல்லையே?"

தவிப்புடன் கேட்டவனிடம் முழுப் பொய்யைச் சொல்ல மனமற்று, "இன்னமும் நாளாகவில்லையே" என்றாள்.

அவன் மேலே வேறு ஏதும் பேசு முன்பாக, ''அங்கே எப்படி இருக்கிறது? எல்லோரையும் காப்பாற்றி விட்டீர்களா?'' என்று விசாரித்தாள்.

''கிட்டத்தட்ட!'' என்றான் அவன் களைப்புடன். ''அந்த இருபதில் ஏழு பேருக்குப் புகையில் மயக்கம் வந்து விட்டது. தெளிந்ததும் வருவேன்,'' என்றான். ''இதோ வருகிறேன்,'' என்று உரக்க யாரிடமோ சொன்னான். ''பிறகு டெலிபோன் செய்கிறேன்,'' என்று வைத்து விட்டான்.

வலி மெல்ல மெல்ல அதிகமாயிற்று.

இடைவேளைகள் குறுகின.

ஒரு வலி வந்தால் அது நின்ற பின்னர் மிகுந்த களைப்பு ஏற்படுவதைச் சக்தி உணர்ந்தாள்.

''இன்னமும் எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்க வேண்டும்!''

மூச்சு வாங்க ஒரு வலியில் இருந்து மீண்டும் அவள் நிமிர்ந்த போது மீண்டும் டெலிபோன் மணியடித்தது.

அவனேதான்.

எடுத்தவுடனேயே, ''எப்படி இருக்கிறாய் சக்தி?'' என்றான்.

அதற்குப் பதில் சொல்லாமல், ''அங்கே எப்படி இருக்கிறது?'' என்று கேட்டாள் சக்தி.

''ஒருவனுக்கு மட்டும் மயக்கம் தெளிய வேண்டும். அவன் நிலைமை கொஞ்சம் அபாயம்தான். முடிந்த அளவு டாக்டர்கள்... முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள்.''

''தொழிற்சாலை?''

''பாதி அழிந்து விட்டது.''

''அய்யோ! எவ்வளவு நஷ்டம்?''

''அதெல்லாம் இல்லை. முழுக்க இன்சூர் செய்தது.''

''ஆனால் மீண்டும் சீர் பண்ணும் வரை நஷ்டம்தானே?''

''அதெல்லாம் வரியில் கழித்துக் கொள்ளலாம். முதலில் நீ...'' என்று அவன் மீண்டும் தொடங்கிய போது ஒன்றும் இல்லாதது போலச் சிரித்தாள் சக்தி.

மேலே பேசாமல், அவன் டெலிபோனை வைத்து விடவும் சிரித்தது அதிகப்படியோ என்ற சந்தேகம் வந்தது.

சந்தேகம் சரியே என்பது போல அடுத்த இருபதாவது நிமிடம் அவன் வீட்டில் இருந்தான்.

ஒரு வலி வந்து ஓரிரு நிமிடங்கள் சென்றிருந்ததால் சற்று இயல்பாக இருக்க முடிந்தது அவளுக்கு.

இங்கும் அங்கும் இருந்த கரியும் அங்கங்கே தீப்பட்டுக் கருகியிருந்த சட்டையும் மீட்பு வேலையில் அவனது பணியைக் காட்டின.

''ஏதாவது சாப்பிட்டீர்களா?'' என்று எழுந்தாள்.

அவன் பார்வை அவளை மேலும் கீழுமாக ஆராய்ந்தது.

''களைத்தாற்போலத் தெரிகிறாயே துணியெல்லாம் வியர்வையில் நனைந்திருக்கிறது... சக்தி...'' என்று சந்தேகமாக அருகில் வந்தான்.

''ஏதாவது சாப்பிடுங்கள்,'' என்று விலகினாள் சக்தி.

இதற்குள் டெலிபோன் மணி அழைத்தது.

எடுத்துப் பேசிவிட்டு, ''அவனுக்கு நினைவு திரும்பி விட்டதாம். ஆனால் பயந்து விட்டிருக்கிறான். அவனைப் பார்த்து

ஆறுதல் சொல்லிவிட்டு வந்து சாப்பிடுகிறேன்... நீ...'' என்றவன்... முகத்தில் வேதனை தெரிந்தது.

''உன்னிடம் எது கேட்டும் பயனில்லை அல்லவா?'' என்று கசந்த குரலில் கூறியவன் சட்டென விலகி வெளியே போனான்.

அவன் செல்வதற்காகவே காத்திருந்தாற் போல அடுத்து வந்த வலியில் சக்தி சுருண்டு போனாள்.

தாங்க முடியாது என்பது போலத் தோன்றிய வலியில் உடம்பு துவண்டபோது வேதனையும் கசப்பும் நிறைந்த அவன் முகம் நினைவுக்கு வந்தது.

இது அவசியம்தானா என்று எண்ணவும் வைத்தது.

அவனது குற்றத்தைப் பிடிவாதமாக நினைவுக்குக் கொணர்ந்து, மனதைக் கடினமாக்கிக் கொண்டாள்.

அவனது இந்தக் கசப்பும் வேதனையும் தன் போகப் பொருள் கைவிட்டுப் போகிறதே, அதைத் தடுக்க முடியவில்லையே என்ற ஆற்றாமையில் வந்ததுதான்.

தடுக்க முடிந்துவிட்டால், மீண்டும் அவனது மறுப்புகளுக்கு மதிப்பிராது. அதே பழைய பிழைகளைச் செய்ய அவன் தயங்க மாட்டான்.

அந்த அவமதிப்புகளுக்கு ஆளாவதைவிட எவ்வளவு கஷ்டமானாலும் சாவு மேலானதுதான்.

சற்றே தளர்ந்த மனம், மீண்டும் கடினப்பட, பல்லைக் கடித்து வேதனையைச் சகித்துக் கொண்டாள் சக்தி.

கலா வந்து சென்ற தினம் நினைவுக்கு வந்தபோது பிடிவாத மாக அதை ஒதுக்கினாள்.

இம்முறை அவன் வெகு விரைவிலேயே திரும்பி விட்டான்.

''என்னால் அங்கே இருக்க முடியவில்லை சக்தி. எல்லா வச திகளுக்கும் ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு வந்து விட்டேன். உனக்கும் ஒன்றும் இல்லையே...'' என்று நீள நடையுடன் நெருங்கினான்.

''இல்லை,'' என்றவள் சட்டெனக் குளியலறைக்குள் சென்று அடுத்த தாக்குதலைச் சமாளித்தாள்.

பிறகு வெளியே வந்து, ''குளித்துவிட்டு வாருங்கள். காபி சாப்பிடலாம்,'' என்று அவனை அனுப்பினாள்.

வெகு விரைவாக ஷேவிங், குளியல் எல்லாம் முடித்துக் கொண்டு அவன் திரும்பியபோது, அவள் அடுத்த வலிக்காக மீண்டும் குளியலறையை நாட வேண்டியிருந்தது.

மற்றவர்களைப் போல் உடல் அமைப்பு என்றால் பிள்ளை - இவ்வளவு வலியின் பின் - குழந்தை வடிவாயில் இறங்கியி ருக்கும். நடப்பதும் சிரமமாயிருந்திருக்கும்.

சக்திக்கு எலும்பு விசித்திரத்தினால், குழந்தை இறங்க முடி யாமல், இயல்பாய் நடப்பது இதுவரை முடிந்தது.

ஆனால் வலி வரும்போது?

அவளது நடையில் வேறுபாட்டை உணர்ந்து, அவன் இரண் டெட்டில் அவளை வழி மறித்து நிறுத்தியபோது அதற்கு மேல் அவளால் மறைக்க முடியவில்லை.

பல்லைக் கடித்துச் சமாளிக்க முயன்றவள், முடியாமல் அவன் மேலே சாய்ந்து விட்டாள்.

''சக்தி!'' என்று அதிர்ந்தவனுக்கு முதல் குரல் கூட எழும்ப வில்லை.

பிறகு, ''எவ்வளவு நேரமாக...'' என்று அவளிடம் விசாரிக்க முயன்றபோது மிகுந்த வலியில் அவள் புழுவாகத் துடிக்கக்

கண்டு மேலே பேசாமல், தோள் மீது சாய்த்து மெல்ல வருடினான்.

வலி முடிந்தபிறகும், அவளைத் தன் மேல் சாய்த்தபடியே டெலிபோனை எடுத்து டயல் செய்து டாக்டரை அழைத்தான்.

உமாவை அழைத்தும் தொடர்பு இல்லாததைக் கண்டு திகைத்துப் பார்க்கையில் சக்தியின் கை பட்டனிலிருந்து மீள்வதைக் கண்டான்.

கண்களில் கோபம் ஜொலிக்க, ''பாவி, இந்த நேரத்திலுமா...'' என்றவன், முரட்டுத்தனமாக அவளைத் தூக்கி வந்து கட்டிலில் கிடத்திவிட்டு மீண்டும் டயல் செய்து பேசினான்.

அதே வேகத்துடன் மீண்டும் சக்தியைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினான்.

''சாப்பாடு...'' என்று அவள் இழுத்ததையோ, ''இப்போது வலியில்லை, நடக்க முடியும்,'' என்றதையோ அவன் இலட்சியம் செய்யவில்லை.

வழியில் எதிர்ப்பட்டுத் திகைத்த மாமியாரிடம், ''தேவையான பொருட்களோடு நீங்கள் அம்பாசிடரில் வாருங்கள். நாங்கள் முதலில் போகிறோம்!'' என்று கூறி விட்டுப் போனான்.

நர்சிங் ஹோமில், ''இவ்வளவு நேரம் என்ன செய்தீர்கள்? படித்துப் படித்துச் சொன்னேனே. இந்தத் தொழிற்சாலை அவ்வளவு முக்கியமா?'' என்று உமா சிடுசிடுத்த போது அவளைக் காட்டிக் கொடுக்காமல், ''உமா, மேலே ஆக வேண்டியதைக் கவனி'' என்றான் இறுகிய குரலில்.

ஆனால், ஸ்ட்ரெச்சரைப் பார்த்தபோது இது கடைசி என்ற நினைவில் சக்தியின் விழிகளில் மருட்சி தோன்றியதைக் கண்டதும், ''ராட்சசி! இவ்வளவுக்குக் கொண்டு வந்து விட்டாயே!'' என்று குமுறினான்.

அவளது கரங்களை இறுகப் பற்றியிருந்த அவன் கைகள் நடுங்குவதை உணர்ந்த போது சக்தியின் வெற்றிப் பெருமிதம் போன இடம் தெரியவில்லை.

''எண்ணு, அம்மா!'' என்றாள் உமா.

கடைசித் தடவையாக என்று எண்ணியபடி சக்தி எண்ணத் தொடங்கினாள்.

''ஒன்று... இரண்டு...''

''ஒன்பது... பத்து...''

மூடிய கண்களுக்குள் கும்மிருட்டு பரவியது.

''இருபது... இருபத்து ஒன்று...'' ''என் வயது!'' என்ற எண்ணத்தோடு நினைவிழந்தாள் சக்தி.

கும்மிருட்டு மூடிற்று.

சாமான்களோடு வந்த சீதை, மருமகனின் முகத்தைப் பார்த்ததும் ஆடிப்போனாள்.

சிசேரியன் என்று தெரிந்ததும், ''அதெல்லாம் இப்போது ஆபத்தில்லை, மாப்பிள்ளை!'' என்று தேற்றினாள்.

ஆனால் அவன் முகம் மாறினால் அல்லவா? பாறையாகவே உறைந்து போனான்.

மூன்று மணி நேரம் கழித்து வெளியே வந்தாள் உமா. ''அந்த எலும்பு உடையும் தறுவாயில் வினாடியில் முந்தி விட்டோம். அதனால் குழந்தைக்கோ தாய்க்கோ சேதமின்றிப் பிரித்துவிட முடிந்தது... ஆனால்...'' என்று, நிறுத்தினாள்.

அவன் முகம் இரத்தப் பசையின்றி வெளுக்கவும், ''நான் என்ன செய்யட்டும் சித்து? அவள் சாவை எதிர்த்துப் போராட

மாட்டேன் என்கிறாளே. அவளும் கொஞ்சம் உதவி செய்தால் தானே எங்கள் முயற்சி பலிக்கும்!'' என்றாள் அலுப்பாக.

உடனடியாக, ''அபாயமா?'' என்று கேட்டான் அவன்.

''இல்லை இல்லை. சும்மா அதே நிலையில் மருந்துகளால் பிடித்து வைத்திருக்கிறோம், அவள் கொஞ்சம் முயன்றால் பிழைத்தே விடலாம்...ம்...'' என்று சலித்தாள் டாக்டர்.

''உன் டெலிபோனைக் கொஞ்சம் பயன்படுத்திக் கொள் கிறேன், உமா,'' என்று சென்றான்.

பேசிவிட்டுத் திரும்பியவன் ஒரு தரம் சக்தியை எட்டிப் பார்த்தான்.

மீண்டும் திரும்பி வந்தான்.

கலவரத்துடன் விழித்த மாமியாரைக் கூட அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

வீட்டில் நாற்பது வயது மனிதர் ஒருவர் காத்திருந்தார்.

அவருடன் ஆபீஸ் அறைக்குள் சென்று பத்து நிமிடத்தில் திரும்பி வந்தான்.

சீதையை அழைத்தான், ''அத்தை! இவர் வக்கீல் மணிவண் ணன், இதோ, இந்தாருங்கள். இந்தப் பத்திரங்களை ஜாக்கிரதை யாக வைத்துக் கொள்ளுங்கள். சொத்தை எல்லாம் குழந்தைக்கு என்று எழுதியிருக்கிறேன். பவர் உங்களுக்கு. உறவு என்று வரும் யாரையும் பண விஷயத்தில் நம்ப வேண்டாம். ஆனால் வக்கீல் மிகவும் நம்பிக்கை ஆனவர். எதுவானாலும் அவரிடம் கேட்டே செய்யுங்கள்...''

''மாப்பிள்ளை, நீங்கள்?'' என்று பதட்டத்துடன் குறுக்கிட் டாள் சீதை.

அவன் முகத்தில் சொல்லொணாத வேதனை தெரிந்தது.

''அவள் என்னை மன்னிக்கவே இல்லையே. சக்தி சாதாரணப் பெண் இல்லை என்று சொன்னீர்கள். ஆனால் நான்... எல்லாம் போயிற்று... சாவிலேயே குறியாக இருந்து விட்டாளே...'' எனுமுன் அவன் குரல் உடைந்தது.

உடனே சமாளித்துக் கொண்டு, ''நீங்கள் ஒழுங்காகச் சாப்பிட்டு உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும், குழந்தைக்காக!'' என்றான் அமைதியோடு.

வேகமாக உள்ளே சென்று ஓர் அலமாரியைத் திறந்தான்.

கவலையோடு பின் தொடர்ந்து சென்றிருந்த சீதை அது தூக்க மாத்திரை என்பதைக் கண்டதும், பதறிப் போனாள். ''மாப்பிள்ளை! நீங்கள் அவசரப்பட்டு எதுவும் செய்து விடாதீர்கள்!'' என்றாள் பயந்துபோய்.

''சக்தி இருக்கும் வரை நானும் இருப்பேன்!'' என்று வெளியே வந்தான். ''நான் மருத்துவமனைக்குப் போகிறேன். அங்கே அவளுக்குப் பதிலாக நான் சாவோடு போராடப் போகிறேன். நீங்கள்... மணி! அவர்களை மருத்துவமனையில் டிராப் பண்ணி விடுங்கள்!'' என்று வக்கீலிடம் கூறிவிட்டு வேகமாகச் சென்று விட்டான்.

''ஈசா! இது என்ன சோதனை?'' என்று சீதை கலங்கி நின்றாள். ''இந்தப் புருஷனின் பெருமையைப் புரிந்து வாழத் தெரியவில்லையே! ஒரு சிறுமையிலேயே உழல்கிறாளே. பகவானே, அவளுக்குப் புத்தியைக் கொடு!'' என்று வேண்டிக் கொண்டாள்.

மருத்துவமனையை அடைந்த சித்தார்த்தன், நேரே மனைவியின் அருகில் சென்று அமர்ந்தான்.

காது அருகே குனிந்து, ''சக்தி! வந்துவிடு சக்தி. என்னை விட்டுப் போகாதே, கண்ணே! வந்துவிடு!'' என்று மெல்லிய குரலில் அழைத்தான்.

★ ★ ★

இருளில் தவித்துக் கொண்டிருந்த சக்தியின் மூடிய விழிக ளுக்குள் திடுமென ஒரு கோடிச் சூரியப்பிரகாசம் தெரிந்தது.

ஒளி வெள்ளத்தில் கூசிய விழிகளை விரித்து, ''யார், கடவுளா!'' என்று வினவினாள் அவள்.

''ஊகூம். தேவதூதன். உன்னை அழைத்துச் செல்ல வந்திருக் கிறேன்,'' என்று அவளை எழுப்பி விட்டான் அழகே உருவாக ஜொலித்த அவன்.

'வா!' என்று முன்னே நடந்தான்.

★ ★ ★

சக்தியின் ஒரு மணிக்கட்டில் விரல் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த நர்ஸ், ''டாக்டர்! பல்ஸ் பலவீனப்படுகிறது,'' என்றாள்.

''குழந்தையை எடுத்து அவள் அருகில் விடு, மல்லிகா. பல மாகக் கிள்ளிவிடு. அது உரக்க அழட்டும்!'' என்றார் டாக்டர்.

வீரிட்டு அழுத குழந்தையை முதல் தடவையாகப் பார்த்த சித்தார்த்தன் நெஞ்சை அடைக்க, ''கிள்ள வேண்டாம்!'' என்றான்.

''கிள்ளக் கூடாது!'' என்று உள்ளூர அதட்டினாள் சக்தி.

★ ★ ★

தயங்கி நின்று, ''பாப்பா அழுகிறதே!'' என்றாள் தேவனி டம், ''பாவம்!'' என்று பெருமூச்சுடன் மேலே நடந்தான்.

''சக்தி! போகாதே! வேண்டாம். குழந்தையை விட்டு, என்னை விட்டுப் போகாதே, சக்தி. கேள். சக்தி. நீ விரும்பாத எதுவும்... எது...வுமே இனி நடக்காது. வந்து விடம்மா. நீயில் லாது என்னால் வாழ இயலாது கண்ணே! வந்து விடு...''

''அய்யோ, எப்படி அழைக்கிறார்கள் பார், பாவம்!'' என்று உருகினாள் சக்தி.

தேவதூதன் முறுவலோடு நின்றான்.

''உம், இன்னும் எவ்வளவு தூரம்?'' என்றாள் அலுப்புடன்.

தேவன் சிரித்தான். ''சொர்க்கம் செல்லும் பாதை சின்ன தாகவே இருக்கும்.''

''சற்று நேரம் உட்கார்ந்து விட்டுப் போவோமா? கால் வலிக் கிறது!'' என்று அமர்ந்தாள் சக்தி.

★ ★ ★

''பல்ஸ் அப்படியே இருக்கிறது, டாக்டர்!'' என்றாள் நர்சு.

★ ★ ★

''அந்தப் பாப்பா அழுவது மனதுக்குக் கஷ்டமாக இருக்கி றது, தேவா. யாராவது அதைச் சமாதானம் செய்யக் கூடாதா?'' என்று வருத்தப்பட்டாள் சக்தி.

''நீ சென்று சமாதானப்படுத்துகிறாயா?'' என்று குறுநகையு டன் கேட்டான் தேவன்.

''போகலாம்... ஆனால்... ஊகூம், நான் உன்னுடன் வருகி றேன்!'' என்று ஒரு வக்கிரத்துடன் எழுந்து நடக்கலானாள் சக்தி.

★ ★ ★

''பல்ஸ் மீண்டும் பலவீனப்படுகிறதே, டாக்டர்!''

''அந்த ஊசி ரெடிதானா? எடு!'' என்று மருந்தை ஏற்றினாள் உமா.

''சக்தி!'' என்று அவள் காதில் தெளிவாக உச்சரித்துப் பேசி னான் சித்தார்த்தன்.

''சக்தி, அன்றைய குற்றத்துக்கு முழுக்க முழுக்கத் தண்டனை அனுபவித்து விட்டேன் சக்தி. பத்து மடங்கு மேலாகவே கூடப் பட்டு விட்டேன். இன்னுமா உனக்கு மனம் இரங்கவில்லை? இல்லை என்றால், நானும் வந்து விடுவேன். இது நிச்சயம். தெரி கிறதா? என்னை விட்டுப் போகாதே சக்தி...'' என்றான் தாழ்ந்த குரலில்.

★ ★ ★

திடுக்கிட்டாற் போலச் சக்தி நின்றாள். ''அந்தக் குரல்... அது சொன்னால் செய்து விடுமே! தெரியுமா தேவா? அதை மீறி வர லாமா? ம்ம்... கொஞ்சம் நின்று யோசிக்கட்டுமா?''

★ ★ ★

''மீண்டும் பல்ஸ் அப்படியே இருக்கிறது, டாக்டர்!'' என் றாள் நர்சு.

★ ★ ★

''எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே, தேவா, நான் உன் னோடு வருவதா? பின்னே போவதா? என்று தேவனிடம் கேட் டாள் சக்தி.

''உனக்கு என்ன தோன்றுகிறது?''

''ஒன்றும் தெரியவில்லை. உன்னோடு வந்து விடத்தான் நினைத்தேன், ஆனால் அந்தக் குரல்... அது தடுக்கிறதே.''

களுக்கென நகைத்தான் தேவன், ''குரலிடம் போ. நான் விதி முடிகையில் மீண்டும் வருகிறேன்,'' என்று மறைந்தான்.

சக்தி வந்த வழியே திரும்பி மெல்ல எட்டு எடுத்து வைத்து நடந்தாள்.

★ ★ ★

''பல்ஸ் நிதானமாகப் பலப்படுகிறது, டாக்டர்'' என்றது நர்சின் குரல்.



17

சக்தியின் மனம் அன்றைய அளவிலேயே உறுதிப்பட்டு விடவில்லை. உடம்பும் உடனேயே தேறி விடவில்லை.

பலமுறை இங்கும் அங்குமாக ஊசலாடி, மெல்ல மெல்ல உலகின் புறம் திரும்பி அவள் பிழைத்தாள் என்று ஆகிக் குழந்தையுடன் வீடு வந்து சேர முழுமையாக நாற்பது நாட்கள் ஆயின.

அந்த நாற்பது நாட்களில் முப்பது நாட்கள் - இனி அபாயம் சிறிதளவு கூட இல்லை என்று சொல்ல டாக்டர் எடுத்துக் கொண்ட அந்த முப்பது நாட்களும் சித்தார்த்தன் மருத்துவ மனையை விட்டு அகலவில்லை.

''சக்திக்குப் பதிலாக நீங்கள்தான் முழுக்க முழுக்க யமனுடன் போராடினீர்கள் சித்து, கடவுள் கிருபையால் வெற்றியும் பெற்று விட்டீர்கள். வாழ்த்துக்கள்!'' என்று பாராட்டினார் டாக்டர் உமா.

''உன் உதவியில்லாமல் ஒன்றுமே நடந்திராது, உமா. சங்கர்! உன் மனைவிக்கு என் உயிர் உள்ளவரைக்கும் கடமைப்பட்டிருக்கிறேனப்பா'' என்று தோழனிடம் கூறிவிட்டு, ''உயிர்ப் பிச்சை பெற்ற ஒரு சகோதரனின் பரிசாக இதை ஏற்க வேண்டும்!'' என்று ஒரு வெள்ளித் தாம்பாளத்தில் உமாசங்கரின் குடும்பத்தினருக்கு உயர்ந்த ஆடை அணிகளை வைத்துப் பரிசளித்தான் சித்தார்த்தன்.

'இதெல்லாம் இருக்கட்டும். சக்திக்கும் மேலாக நீ வெகுவாக மெலிந்து போனாய் சித்து. முதலில் நன்றாகச் சாப்பிட்டு உன்

உடம்பைப் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும்,'' என்று நண்பனின் தோளைத் தட்டி அறிவுரை கூறினான் சங்கர்.

லேசாகக் குனிந்து தன்னை ஒருதரம் பார்த்துவிட்டு நிமிர்ந்து தோளைக் குலுக்கினான் சித்தார்த்தன்.

''அது இனித் தானாகச் சரியாகிவிடும்!'' என்று அவன் முறு வலித்தபோது அவனது நண்பனுக்கும் அவன் மனைவிக்கும் கண்ணீர் அரும்பியது.

இந்த நாற்பது நாட்களும் கவனித்துக் கொண்டு வந்த சீதைக் குத் தன் மருமகன் மீது மிகுந்த பாசமும், பெருமதிப்பும் பரி வும் உருவாகி விட்டிருந்தன.

அந்த மருமகன் என்றோ ஒருநாள் செய்த பெரும் பிழையும் அதனால் மகளும் தானுமாக அனுபவித்த நரக வேதனையும் துணிகொண்டு துடைத்தாற்போல அடியோடு மறந்து போயின.

மெத்து மெத்தென்று இருந்த பேத்தியைப் பார்த்துப் பார்த்துப் பெருமிதமே உருவாகிப் போனாள்.

சக்தியும் தன் அழகிய குழந்தையிடம் முழுமையாக லயித்துப் போனாள்.

அன்றாடக் கடன்களை முடிப்பதும் டாக்டர் கற்றுக் கொடுத் திருந்த சில உடற்பயிற்சிகளைச் செய்வதும் தவிர வேறு வேலை ஏதும் செய்தாக வேண்டிய கட்டாயம் இல்லாததால் கிட்டத்தட்ட நாள் முழுவதையும் குழந்தையிடமே கழித்தாள், கதைப்புத்த கங்கள், தோட்டம் எல்லாமே மறந்துவிட்டன.

கண்ணைத் திறந்தால், தட்டி விழித்தால், உறக்கத்தில் சிரித் தால், அழுதால், 'ங்கா' சொன்னால், விரல்களால் பிடித்தால்... எல்லாவற்றிலும் ஆயிரம் ஆயிரம் அழகு தெரிந்தது. ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள் தோன்றின.

அத்தனையும் பகிர்ந்து கொள்ளச் சித்தார்த்தனைச் சேர்த்துக் கொண்டாள்.

மாலையில் அவன் திரும்பி வந்ததும் குழந்தை புராணம் தான்.

தன் குழந்தையின் எழிலில் அவனும் லயிக்கவே செய்தான்.

கண்கள் மின்ன, சக்தி சொல்வதை எல்லாம் அவனும் ஆனந்தமாகக் கேட்டிருந்தான்.

அவனுக்கும்தான் வேறு என்ன வேண்டும்?

திண்ணென்ற பால் சதையுடன் எப்போதும் சிரிக்கும் அழகிய குழந்தை.

தாயின் கவனிப்பினாலும் எண்ணெய்க் குளியலாலும் மெருகேறியிருந்த அழகிய மனைவி!

அழகிய மனைவி!

அங்கேதான் சித்தார்த்தனின் துன்பம் தொடங்கியது.

ஏற்கெனவே ஒரு பெருங்குற்றம் புரியும் அளவுக்கு அவளிடம் பைத்தியமாயிருந்த சித்தார்த்தனின் மனம் இப்போது ஏங்கத் தொடங்கியது.

வெறுப்பும் கோபமுமாக அவள் இருந்தபோதே விலகியிருக்க முடியாமல் திணறிய அவன், இப்போது முத்துப் பற்கள் மின்னலிட அவள் பேசுகையில் வெகு சிரமத்துடனேயே தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்தது.

ஒருநாள் மாலையில் குழந்தையைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளியபடியே தோட்டத்தில் உலவியபோது சக்தியிடம் மெல்லக் கேட்டான். ''உனக்கு மனதில் ஒ...ஒன்றும் குறையில்லையே சக்தி?'' என்று.

''இல்லையே! ஏன்?'' என்று ஆச்சரியத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள் சக்தி.

பதில் சொல்ல முடியாமல் அவள் திணறவும் ஏதோ புரிந்ததுபோல, ''பழைய விஷயங்களை நான் நினைப்பதே இல்லை!'' என்று இனிய குரலில் அவனுக்குச் சமாதானம் போலச் சொன்னாள்.

''பழைய விஷயங்கள் நானும் நினைப்பது இல்லை. ஆனால் என்னைப் போல உனக்கும் ஏக்கம் தோன்றவில்லையா?'' என்று அவளிடம் எப்படிக் கேட்பது?

அதுவும் அவள் சாவோடு போராடியபோது அவ்வளவு சொல்லிவிட்டு எவ்வாறு கேட்பது?

சிறிதும் சாத்தியப்படாத விஷயம்!

சில தினங்கள் அடியோடு தூக்கம் இன்றித் தவித்து விட்டு, முன்னிரவில் வெகு தூரம் நடக்கத் தொடங்கினான் சித்தார்த் தன்.

நடந்து நடந்து உடம்பு களைத்துப் போன பிறகுதான் பின் னிரவிலும் அவனால் உறங்க முடிந்தது.

சக்தி இதிலெல்லாம் மனதை அலைபாயவிடவே இல்லை.

அவளைப் பொறுத்தவரையில், தனது பிழைக்கும் மேலாகச் சித்தார்த்தன் மிகுந்த வேதனைப்பட்டு விட்டான் என்ற ஒரு பரி தாபம் முன்பே இருந்தது.

பாப்பா பிறந்தபோது அவன் கொடுத்த உறுதிமொழியோடு அந்த விஷயமே முடிந்து விட்டாற்போலச் சலனமற்று இருந் தாள்.

ஆனால் சீதை அப்படி இருக்கவில்லை.

மருமகனிடம் பரிவும் அன்பும் கொண்டுவிட்ட மாமியார் அல்லவா!

மருமகனின் பார்வை மகளிடம் படிந்த விதம் புரிந்து போயிற்று.

இரண்டு நாட்கள் மருமகன் இரவில் நடப்பதைக் கவனித்து விட்டு மகளிடம் சாடினாள்.

''உனக்குக் கொஞ்சமாவது அறிவு கிறிவு இருக்கிறதா?

முதலில் திகைத்துப் போனாள் சக்தி. பிறகு, ''என்னம்மா ரொம்பப் புதிதாக இப்படி ஒரு சந்தேகம்?'' என்று கண் சிமிட்டினாள்.

''இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை!'' என்று அலுத்துக் கொண்டாள் தாயார்.

''ஏம்மா?'' என்றாள் சக்தி செல்லமாக.

''ஒருவர் தப்புசெய்து விட்டால் அடியோடு வெறுத்து விடக் கூடாது.''

தாயின் குறிப்பைப் புரிந்து கொண்டு, ''இப்போதெல்லாம் நான் வெறுப்பாக இருப்பது இல்லையே அம்மா!'' என்றாள் சக்தி சமாதானமாக.

''பின்னே மாப்பிள்ளை இரவில் இரண்டு மணி நேரம் தனியாக நடப்பானேன்?''

''என்னது?''

''தெரியாது?''

''தெரியாதே, அம்மா!''

''இதிலிருந்தே மாப்பிள்ளையைக் கவனிக்கிற லட்சணம் தெரிகிறதே!'' என்றாள் சீதை ஏளனமாக.

லேசாக முகம் சுளித்தபடி பேசாமல் இருந்தாள் மகள்.

அருகில் அமர்ந்து இதமாகப் பேசினாள் தாயார். ''சத்தி யம்மா! மாப்பிள்ளை பிசகு செய்தது மெய்தான். ரொம்பப் பெரிய பிசகுதான். ஆனால் அவரைப் போல ஒரு புருஷன் இந்தக் காலத்தில் எவளுக்கும் கிடைக்க மாட்டான், தெரிந்து கொள்!''

''அதெப்படியாம்?'' என்றாள் சக்தி சிறு அலட்சியத்துடன்.

ஒரு பெருமூச்சுடன், ''முன்பே உனக்குச் சொல்லியிருக்க வேண்டும். உன் உடம்பு நன்றாகத் தேறட்டும் என்று இருந் தேன். எல்லாம் தானாகச் சரியாகி விட்டதோ என்று கூட நினைத் தேன். ஆனால்...

''சக்தி! பாப்பா பிறந்தபோது நீ பிழைக்க மாட்டாய் என்றே டாக்டரம்மா சொல்லி விட்டார்கள். மாப்பிள்ளை என்ன செய் தார், தெரியுமா?'' என்று தொடங்கினாள்.

''இதுவரை ஒரு குருவி காக்கை கூடச் சொல்லவில்லை!'' என்று விளையாட்டாகக் கையை விரித்தாள் செல்ல மகள்.

''கொஞ்சம் சீரியசாகக் கேள்,'' என்று அதட்டிவிட்டு, ''முத லில் வீட்டுக்கு வந்து வக்கீலைக் கூப்பிட்டு உயில் எழுதினார்,'' என்றாள்.

பேசாமல் கண்களை விரித்துக் கேட்டாள் சக்தி.

''பாப்பா பேரில் சொத்தை எல்லாம் எழுதிவிட்டு பவர் எனக்கு என்றும் எழுதிவிட்டுத் தூக்க மாத்திரை பாட்டிலை எடுத்தபோது...''

''அம்மா!'' என்றாள் சக்தி அதிர்ச்சியுற்று.

''ஆமாண்டி, ஆமாம். அப்போது நான் பார்த்து விட்டேன், என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா? அவள் என்னை மன் னிக்கவே இல்லையே. சாவிலேயே குறியாக இருந்து விட்

டாளே!' என்று உடைந்து போனார். அவள் இருக்கும்வரை நானும் இருப்பேன் என்று சொல்லிவிட்டு நேராக மருத்துவ மனைக்கு வந்தார்.

''பின்னே பொய்யாடி சொல்வேன்?'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் சீதை. ''அந்த ஒரு மாதமும் உனக்குப் பதிலாக அவர்தானே யமனோடு போராடினார்.''

''என்னைச் சாகவிட மாட்டேன் என்று என்னிடம் அவர் சொன்னபோது நான் வேறே நினைத்தேன்...'' என்றாள் சக்தி யோசனையோடு.

''ஆமாமாம். உன் உடம்பு மேலே உள்ள ஆசையிலே அதை இழக்க அவருக்கு மனமில்லை என்று நினைத்திருப்பாய். ஏன், உன்னைவிட அழகு இந்த உலகத்திலேயே இல்லையாமா! இத்தனை செல்வம் இருந்தும் நினைத்ததை நடத்துகிற சக்தியிருந்தும் உன்னை இழந்தால் உலகத்தில் ஒன்றுமே இல்லை என்று நினைக்கிற அவருடைய உயர்வு இன்னமும் உனக்குத் தெரியவில்லை!'' என்று மகள் மீது குற்றம் சாட்டினாள் சீதை.

''என்னம்மா நீங்கள்? அவர் என்ன தப்பே செய்ய வில்லையா?'' என்றாள் ரோஷத்துடன்.

''பழைய குருடி கதவைத் திறடியா! செய்தார்டி. தப்பு செய்தார்தான். ஆனால் தப்பு என்று அவரே உன்னிடம் மன்னிப்புக் கேட்கவில்லையா?

''மனிதப் பிறவி எடுத்தால் மன்னிக்க, மறக்கத் தெரியணும் மகளே. பொண்டாட்டிக்காக எத்தனையோ பேர் ஏதேதோ செய்கிறார்கள்தான். ஆனால் யாரும் தன் உயிரையே விட்டுவிட முன்வர மாட்டார்கள். அப்பேர்ப்பட்ட புருஷன் கிடைத்திருக்கும்போது அந்த அருமை தெரிந்து நடந்து கொள்ள உனக்குத் தெரியவில்லையே அவருக்கு வேண்டியதைச் செய்யாமல்...''

''என்னம்மா ஒரேயடியாக விரட்டுகிறீர்கள்? நான் முன்னே போலவா இருக்கிறேன். வேளை தவறாமல் டிபன் காபி எல் லாம்...''

தாயின் சினம் தணிந்ததாகத் தெரியவில்லை. ''பின்னே ஏன் அவர் ராத்திரியில் அலுத்துக் களைக்கிற வரைக்கும் நடக்கிறா ராம்? பத்து பத்தரைக்குக் கிளம்பினார் என்றால், வந்து சேரக் குறைந்தது பன்னிரண்டு மணி ஆகிறது. காடோ மேடோ என்று அவர் அலைவதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஆமாம், நீதான் சொல்லேன், இருட்டிலே ஏதோ பூச்சி பொட்டு உன் கணவரைக் கடித்து வைத்தால் விடிகிற வரை யாருக்குத் தெரியப் போகிறது?''

''அம்மா!'' என்று அதிர்ந்தாள் சக்தி. ''அம்மா! இப்போது என்ன... என்ன செய்வது?'' என்றாள் அச்சத்துடன்.

புன்னகை அரும்பியது சீதைக்கு. ''பைத்தியம் போலப் பயப் படுகிறாயே. அவர் வீட்டில் இருந்தால் நீயும் கூடவே இரு. உலாவப் போனால் அப்போதும் நீ கூடவே போ. பிறகு அவர் ஏன் தனியாகப் போகப் போகிறார்?''

சக்திக்குப் புரிந்தது.

அன்றைய இரவில் உலாவச் செல்வதற்காகத் தன் அறையை விட்டு வெளியே வந்த சித்தார்த்தன் திகைத்தான்.

எதிரே சக்தி நின்றாள்.

''வாக்கிங் போகிறீர்களா?''

''ஆ... ஆமாம்.''

''இந்த நேரத்திலா?''

''சக்தி...'' என்று அழைத்தவன் ஒன்றும் சொல்ல முடியாமல் பார்வையை வேறுபுறம் செலுத்தினான்.

''இந்த நேரத்தில் நீங்கள் தனியாக வெளியே சென்றால் அம் மாவுக்குப் பயமாக இருக்கிறதாம். அதனால்...''

''அதனால்?'' என்றான் அவன் - பார்வையை மீண்டும் அவள் மீது நிறுத்தி.

சக்தியின் முகம் லேசாகச் சிவந்தது. தரையைப் பார்த்தபடி, ''அதனால் நீங்கள் எங்கே போனாலும் என்னையும் கூடவே போகச் சொன்னார்கள்... அது...அது எங்கேயானாலும் சரிதான்!'' என்று மெல்லிய குரலில் முடித்தாள்.

அவனது விழிகள் பளிச்சிட்டன. இயல்பாக எழுந்த கைகளை அழுந்த மூடித் தொங்கவிட்டு, ''எங்கேயானாலும் என்றால் என்ன அர்த்தம்'' என்று வினவினான்.

அவள் நிமிரவே இல்லை. ''நீங்கள் எங்கே அழைத்தாலும் என்று அர்த்தம்?'' என்று முணுமுணுத்தாள்.

அவளிடம் மிக அருகில் நெருங்கி, ''என் அறைக்குள் என்றாலுமா?'' என்று கேட்டான் அவன்.

''அங்கேயும்தான்!'' என்று கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள் சக்தி.

''என் சக்தி...'' என்று அவசரமாக அவளை அணைத்தான் சித்தார்த்தன்.

காலையில் குளித்துவிட்டு வந்து சக்தி எட்டிப் பார்த்தபோது அவன் கட்டிலில்தான் கிடந்தான்; ஆனால் விழித்திருந்தான்.

சக்தியைக் கண்டதும் முறுவலுடன் கைகளை விரித்துக் கண்ணால் அழைத்தான்.

சக்தி சட்டெனச் சிவந்தாள்.

''ஊகூம்...'' என்று ஓடியே போனாள்.

சற்றுப் பொறுத்து, கீழே பாப்பாவைப் பார்த்தபடி சக்தி தாயி டம் பேசிக் கொண்டு இருக்கையில் சித்தார்த்தன் அங்கே வந் தான்.

''சக்தி! என் ப்ரீப்கேஸ் பீரோவில் இருக்கிறது. எடுத்து வை. சாவி பீரோவிலேயே இருக்கிறது,'' என்று சொல்லிவிட்டுக் குழந் தைக்குச் சொடக்குப் போட்டு விளையாட்டுக் காட்டினான்.

சக்தி மேலே சென்று பார்த்தபோது, பெட்டி மேஜை மேலேயே இருந்தது.

யோசனையோடு திரும்புகையில் பின்னிருந்து அவளை அணைத்தான் அவன்.

அவள் முகத்தில் கேள்வியைக் காணவும், ''ஓடினாயே! வர வழைத்தேன்,'' என்று அவள் கன்னத்தை வருடினான்.

''ஆனால் பொய்...'' என்று தொடங்கியபோதே புரிந்தது போல அவள் முகம் மலர்ந்தது.

''எனக்காகத்தான் இல்லையா?'' என்று லேசாக எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவனால் அவளை விட்டு விலக இயலவில்லை.

சில தினங்களில் வேலைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு விட்டு மனைவியைக் காஷ்மீருக்கு அழைத்துச் சென்றான் சித் தார்த்தன்.

பிரயாணக் களைப்பில் தொய்ந்தவளைச் சற்றுநேரம் உறங் கச் சொன்னான்.

ஒரு மணி நேரம் உறங்கவிட்டுப் பின் உணவுக்காக அவளை எழுப்பினான்.

அரைகுறையாக விழித்த சக்தி, கணவனது முகம் எதிரே குனிந்திருக்கக் காணவும் பழைய வஞ்சத்தில் சட்டென அச்சமுற்றுப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் அவனுக்கு முகத்தில் அறைந்தாற் போல வேதனையாகி விட்டது.

சக்தி இன்னமும் அதை மறக்கவில்லை. அதுதானே பொருள்?

அவனோடு இணைந்து பேசுவதும் பழகுவதும் தாயின் வற்புறுத்தலுக்காகவோ கடமைக்காகவோதான்.

ஒதுங்கி நின்று அழைத்ததே எழுப்பி உணவருந்தச் சொல்லத்தான்.

தூக்கக் கலக்கத்தில் இருந்த சக்தி முதலில் இதைக் கவனிக்கவில்லை.

ஆனால் தொடர்ந்து, அவன் ஒற்றை வார்த்தைகளில் பதில் தருவதையும், கண்ணைப் பாராமல் பேசுவதையும் கண்டபோது ஆச்சரியமாகிப் போயிற்று அவளுக்கு.

''என்ன?'' என வினவினாள்.

''ஒன்றும் இல்லை,'' என்று தலையசைத்தான்.

விழிகளை மலர்த்தி, ஒற்றை விரலை நீட்டி, ''நிஜம்?'' என்று மேலும் அவள் துருவியபோது பதில் கூறாமல் எழுந்து ஜன்னல் அருகே சென்று வெளியே பார்த்தான் அவன்.

முதுகின் விரைப்பையும், கை முஷ்டிகளின் இறுக்கத்தையும் கண்ட சக்தி நகைத்தாள்.

எழுந்து அவனிடம் சென்று தோளில் சாய்ந்து, ''என் ராஜாவுக்கு என்ன கோபம்?'' என்று கொஞ்சலாக விசாரித்தாள்.

அதற்கு மேல் தாங்க மாட்டாமல், திரும்பி அவளைப் பற்றி, ''இன்னமும் நீ மறக்கவில்லையே. அதையே நினைக்கிறாயே!'' என்றான் வேதனையோடு.

எதை என்ற கேளாமல், ''நானா? எப்போது?'' என்று ஆச்ச ரியப்பட்டாள் சக்தி.

''இப்போது உன்னை எழுப்பியபோது கூட அச்சத்துட னேயே என்னைப் பார்த்தாய்!'' என்றான் வேதனையோடு.

''ஏதாவது கனவு கண்டிருப்பேன்!'' என்றாள் அவள் சர்வ சாதாரணமாக.

ஆனால் அவன் முகம் இன்னமும் தெளியாததைக் கண்ட தும், ''வாருங்கள், இங்கே வந்து உட்காருங்கள். இந்த விஷயத் தைக் கடைசித் தடவையாகப் பேசி முடித்து விடலாம்,'' என்று அவனை இழுத்துப் போய் ஒரு சோபாவில் அமர்த்திவிட்டுத் தானும் உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினாள் சக்தி.

''பாருங்கள், ஒரு தப்புக் கணக்குப் போட்டு நீங்கள் ஒரு பிழை செய்தீர்கள். பெரிய தப்புத்தான். ஆனால் அதற்குத் தண் டனையாக எவ்வளவோ மன வேதனையும் பட்டு விட்டீர்கள். ஒரு தப்புக்குத் திரும்பத் திரும்பத் தண்டனை அனுபவிப் பார்களா? இனி அதை அடியோடு மறந்துவிட வேண்டும். தப் பித் தவறி நினைவு வந்தாலும் அதை அப்படியே ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்,'' என்று எடுத்துரைத்தாள்.

''உன்னால் முடிகிறதா?'' என்று அவள் கண்களையே பார்த்துக் கேட்டான் சித்தார்த்தன்.

அவனை நேராகப் பார்த்து முறுவலித்தாள் சக்தி.

அந்த முறுவல் விரைவிலேயே அவன் முகத்திலும் எதிரொ லிக்கலாயிற்று.

★ ★ ★